Registered as a Newspaper பக்கங்கள் 16 விலை ரூபா: 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 07 (19-02-1992) புதன்கிழமை ஓசை: 01

## வடக்கிற்கான உதவிகள் தெற்கு முகாம்களுக்கு

வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உலக உணவு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எட்டுக்கோடி 60 இலட்சம் பெறுமதியான உணவுப் பொருள்கள் சிறிலங்கா அகதிமுகாம்களில் தங்கியிருப்போருக்கு வழங்கப்படவுள்ளது. இந்த உதவியின் முதலாவது தொகுதி அநுராதபுரம் அகதி முகாம்களில் தங்கியிருப்போருக்கு வழங்கப்படவுள்ளது. மேலும் பொலநறுவை, குருநாகல், மாத்தளை, புத்தளம், கொழும்பு மாவட்டங்களில் (16ஆம் பக். பார்க்க )

# கொழும்பு நகரில் புலிவேட்டை தீவிரம்

## நூற்றுக்கணக்கில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பில் சிறிலங்கா பொலிசாரினால் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், கொம்பனிவீதி, கிராண்ட்பாஸ், வெள்ளவத்தை முதலான பகுதிகளிலுள்ள வீடுகளிலும் விடுதிகளிலுமிருந்து பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பொலிசார் மேற்கொண்ட தீவிரதேடுதல் நடவடிக்கையில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாக சிறிலங்கா புலனாய்வுத்துறையினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இந்தக் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கொழும்பிற்குள் ஆறு விடுதலைப்புலிகள் ஊடுருவியிருப்பதாகவும் அவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் உயர்பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று ஈடுபட்டுள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேடப்படும் 6 பேரில் இருவரைப் பொலிசார் இனம் கண்டுள்ளனர் என்றும் இவர்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

வெள்ளவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின்போது சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மணலாற்றில் திடீர் மோதல் ஒரு இராணுவம் பலி; ஆயுதங்கள் மீட்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்திலுள்ள கொககுத் தொடுவாயில் தற்செயலாக எதிர்ப்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். அவரிடமிருந்து ரி 56-1, அதற்குரிய மகசின் - 04, ஜே ஆர் கைக்குண்டுகள் - 02, நடுத்தர ரவைகள் - 34 என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் இல்லை.

## திருமலையில் 6 பேர் பலி; 2இராமங்கள் சுற்றிவளைப்பு

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர், சீதனவெளி ஆகிய கிராமங்கள் மீண்டும் சிறிலங்கா இராணுவத்தின் நிரந்தர சுற்றிவளைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பகுதியில் ஆறு அப்பாவிப் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

கடந்த மாதம் 26ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 10 ஆம் திகதிவரை நிரந்தரமாக சுற்றிவளைக்கப்பட்டிருந்த இந்தக் கிராமங்கள் இரு தினங்கள் மட்டுமே சுற்றி வளைப்பு அகற்றப்பட்டிருந்தது.

மீண்டும் இவை நிரந்தரமாக சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

### வீரச்சாவு

**ஜானகி**

சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜானகி (எட்வின் ராதாதேவி, வேங்கையன்வீதி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி) என்ற போராளி கடந்த திங்கட்கிழமை வீரச்சாவு அடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# உலக மத்தியஸ்தத்தின் கீழ் பேச்சு நடத்த வேண்டும்

## உலகத்தமிழர் அமைப்பு கோரிக்கை

சர்வதேச ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்ட பேச்சுவார்த்தையை தொடங்குமாறும், சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்புடைய மதியஸதர் ஒருவரை நியமிக்குமாறும் சர்வதேச தமிழ்ப் பேரவை அமைப்பு சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மையில் லண்டனில் கூடிய மேற்படி அமைப்பு தமிழீழ மக்களின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திவரும் போரை நியாயமானதும் நீதியானதும் என அங்கீகரித்துள்ளதுடன் எந்த ஒரு பெரும்பான்மைத் தேசிய இனமும் சிறுபான்மைத் தேசிய இனத்தை ஒதுக்கினால் அதிலிருந்து விடுதலை பெறும் உரிமை அச் சிறுபான்மைத் தேசிய இனத்திற்கு உண்டு என்றும் இதனைத் தொடர்ந்து சிறுபான்மையினரான தமிழ்த்தேசிய இனம் சுயநிர்ணய உரிமையைக் கொண்டுள்ளது எனவும் இப் பேரவை சுட்டிக் காட்டியுள்ளது.

இப் பேரவையில் தமிழர்களின் பல அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றி அறுபது பேர் பங்குபற்றினர்:

# ஈழநாதம்

## மூன்றாவது ஆண்டில் ஈழநாதம்

தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம் வெளியேறிக்கொண்டிருக்கையில்-1990ஆம் ஆண்டின் ஆரம்பத்தில்-ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் வெளிவரத் தொடங்கிய 'ஈழநாதம்' இன்று தனது மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்றது.

குழந்தைப் பருவத்திலேயே 'ஈழநாதம்' சந்தித்த நெருக்கடிகள் ஏராளம். பத்திரிகை ஆரம்பித்து நான்கு மாதத்திற்குள் தொடங்கிய யுத்தமும், அதனோடு இணைந்து வந்த பொருளாதாரத் தடையும் பலமுனைகளில் இருந்து நெருக்கடிகளைக் கொடுத்தபோதும், இந்த இரண்டு வருட காலத்திலும் எதுவித தடங்கலும் இன்றி, ஒரு நாளேனும் தவறாமல் பத்திரிகை வெளிவந்தது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஈழநாதம் ஒரு நாளாந்தச் செய்திப் பத்திரிகையாக இருப்பினும் பல்வேறுபட்ட செய்திகளை மக்களுக்குக் கொடுப்பது மட்டுமல்ல, அதற்கும் மேலாக அடக்கப்படும் மக்களின் குரலாக ஒலிப்பதே அதன் பிரதான இலக்காகும். மேலும் தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார விடுதலையையும், முன்னேற்றகரமான சமுதாய உருவாக்கத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஈழநாதத்தின் இலக்காகும்.

இதேவேளை ஈழநாதம் ஒரு வரம்பிற்கு உட்பட்ட செயற்பாட்டைக் கொண்டதாக சிலர் அபிப்பிராயப்பட்டதும் உண்டு. ஈழநாதம் ஒரு வரம்பைக் கொண்டதுதான். ஆனால் அது தமிழீழ மக்களின் தேசிய நலன் என்ற வரம்பை மட்டுமே கொண்டது. தமிழீழத் தேசிய நலனுக்கு குந்தகம் விளைவிக்காத எந்த ஒரு விடயத்தையும் கையாள ஈழநாதம் தயங்கியதில்லை. இனியும் தயங்கப்போவதில்லை. ஆனால் ஈழநாதம் ஒரு வரம்பிற்கு உட்பட்டதெனக் கருதிக் கொண்டு சிலர் தம்மை ஒரு வட்டத்திற்கு உட்படுத்திக் கொள்வதுதான் உண்மையில் நடைபெறுகின்றது. இதிலிருந்து அவர்கள் வெளிவரும் போது ஈழநாதம் அவர்களுக்கு தூண்டுதலாக இருக்கும் என்பதிலும் ஐயப்பட எதுவுமில்லை.

இதேவேளை ஈழநாதம் தன் குறிக்கோளை அடைவதில் கடந்த இரு வருடங்களிலும் குறிப்பிடக் கூடிய முன்னேற்றம் கண்டுள்ளது. இதனை மக்கள் எமது பத்திரிகைக்கு அளித்துவரும் ஆதரவில் இருந்து நாம் கண்டுகொண்டுள்ளோம். இது எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதோடு, எமது செயற்பாட்டை நாம் தொடரவும், விஸ்தரிக்கவும் துணையாகவும் உள்ளது.

இந்நிலையில், கடந்த காலத்தில் வழங்கியது போன்று தொடர்ந்தும் மக்கள் எமக்கு ஒத்துழைப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கும் அதேவேளை, கடந்த காலத்தில் மக்கள் எமக்கு வழங்கிய ஆதரவிற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

## எனதுகாலத்தில்சமூகஅநீதி ஒழியாவிடில்என்றும்ஒழியா

"எனது பதவிக் காலத்தில் சமூக அநீதி ஒழிக்கப்படாவிட்டால் இனிமேல் அதனை ஒருபோதும் செய்யமுடியாது நான் ஒரு வறிய குடும்பத்திலிருந்து வந்ததினால் வறிய மக்களின் நிலையை என்னால் அறிந்து கொள்ள முடியும்" என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்,

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆடை தயாரிக்கும் தொழிலாளர் மத்தியில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தனது புதிய வறுமை ஒழிப்புத் திட்டம் குறித்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணம் உட்பட நாட்டிலுள்ள 200 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் 200 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் இந்த வருடத்திற்குள் நிறுவப்படும். இவற்றை நிறுவவிரும்புவோருக்கு சகல உதவிகளும் செய்து கொடுக்கப்படும்

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 500 பேருக்காவது வேலைவழங்கப்படும் இதன் மூலம் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு பெறுவர்

இந்தவருடம் ஜூலை மாதத்திற்குள் 7 தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுவிடும் என்று தெரிவித்தார்

# இரண்டாவது ஆண்டு சிறப்பிதழ்

## இரண்டாம் ஆண்டை நிறைவுசெய்யும் ஈழநாதத்திற்கு

எமது நல்லாசிகள்.

# மொறாயஸ்

**மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்கள்**

இல. 50, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3936)

---

மூன்றாவது வயதினை எட்டும் "ஈழநாதம்" தினசரியினை வாழ்த்துகின்றோம்.




மில்க்வைற் சோப் ஒன்றின் விலை
ரூபா 5.00 மட்டுமே!
மேலுறைகளைச் சேகரித்துப்பெறுமதியான பரிசுகளைப் பெறுங்கள்.

## "மில்க்வைற்"

(சி3925)

---

மக்கள்பணியில் ஈராண்டுகள் நிறைவெய்தும் ஈழநாதத்திற்குஎமதுவாழ்த்துக்கள்

## கம்பியூட்டர் கல்வி

- BASIC
- dBASE III+
- LOTUS 1-2-3
- WORD STAR 2000+

ஆகிய பிரிவுகள் நடைபெறுகின்றன.
செய்முறைப் பயிற்சிகள் யாவும் ஜெனரேட்டர் உதவிகொண்டு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு :
நிர்வாகி :

## யூனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்



37, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3938)

---

### வரி விளம்பரம்

**ஸ்ரெப்லேசர் தேவை**

2000 W ஸ்ரெப்லேசர் (படி குறை, படி கூட்டு மாற்றி) தேவை. யாழ் ■ழைய புத்தகக் கடை, 32, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம் (சி/3935)

---

## செஞ்சிலுவை உயர் அதிகாரி யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்தலைமை அலுவலக உயர் அதிகாரிகளில்ஒருவரான திரு. ஹென்றி ஆர்னி மிக விரைவில் யாழ்ப்பாணம் வர இருக்கிறார்.

தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் திரு. ஆர்னி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்கவும், கடந்த கால செயற்பாடுகள் பற்றி விபரங்களை அறிவதற்குமே இங்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

இவருடன் கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புபவர்கள் உடனடியாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர்.

(75)

---

## நினைவு கூருகின்றோம்

## 1992 - 02 - 19

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் நீலாப்பொல பகுதியில் சிறிலங்காப் படையினர் மீதான கண்ணிவெடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**பெரியவன்** (வேலுக்குட்டி ஜீவராசா-2ஆம் வட்டாரம் கட்டைபறிச்சான், மூதூர்)

**ஆறுமுகம்** (பத்தக்குட்டி அற்புதன்- எல். பி. 3 கிளிவெட்டி, மூதூர்)

ஒட்டிசுட்டானில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு பெண் உட்பட மூன்று பொதுமக்கள்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரின் விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 5 பொதுமக்கள்

1988 ஆம் ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டு வீரச் சாவெய்திய

★ **பாபு** (சபாபதி கோபாலசிங்கம் - தங்கநகர், மூதூர்)
இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இளைஞன்

1989 ஆம் ஆண்டு சுழிபுரத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட இரு உயர்வகுப்பு மாணவர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-3940)

---

ஈராண்டை நிறைவு செய்யும் ஈழநாதத்தின் பணி தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்.

# இளந்தென்றல்

## படப்பிடிப்பாளர்

- பாஸ்போட் படங்கள்
- அடையாள அட்டைப் படங்கள்
- கலர்ப்பட பிரதிகள்
- கலர்ப்படச் சுருள்கள்
- போட்டோஸ்ரற் பிரதிகள்
- அடையாள அட்டை கவரிடுதல்
- கறுப்பு-வெள்ளை புகைப் படக்கடதாசி (பிரின்டிங் பேப்பர்)

போன்றவற்றை குறைந்த விலையிலும் சிறந்த முறையிலும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## இளந்தென்றல்

(சி/3939) 14, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்

---

மூன்றாம் ஆண்டுக்குள் காலடி வைக்கும் ஈழநாதத்திற்கு
எமது இதய பூர்வமான ஆசிகள் உரித்தாகுக!

# புதிய லலிதா நகைமாளிகை

## தங்கப்பவுண் நகை வியாபாரம்

(சி-3937) **74|1கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்**

# கடந்த ஆண்டின் வெளிப்பாடுகள்

புத்தாண்டிலிருந்து ஒரு தலைப்பட்சமான முறையில் காலவரையறையற்ற போர் நிறுத்தத்தைக்கடைப்பிடிக்கப் போவதாக தமிழீழவிடுதலைப் புலிகள் விடுத்த பகிரங்கப் பிரகடனத்துடன் 1991ஆம்ஆண்டு பிறந்தது. ஆனால் அரசியல், இராணுவ,பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளையும், திருப்பு முனைகளையும் சந்தித்து மீண்டும் போர்மேகங்கள் சூழ்ந்துள்ள சூழலிலேயே 1991ஆம் ஆண்டு விடைபெற்று விட்டது. இந்தஒருவருடகாலப் பகுதியையும் மீண்டும் ஒரு தடவை பின்னோக்கிப் பார்ப்பதனூடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தார்மீக நியாயத்தையும்,பரிணாம வளர்ச்சியையும் கணக்கிட்டுப் பார்ப்பதுவே இம் முயற்சியின் நோக்கமாகும்.

சிறிலங்கா அரசுக்கெதிரான தமிழ் மக்களின் நீண்ட-நெடிய போராட்ட வரலாற்றில் முக்கிய தடங்களைப் பதித்து விட்டது 1991 ஆம் ஆண்டு.




இந்த ஆண்டு முழுமையும் தமிழீழத்தின் வடபுலம் ஒரு பொருளாதார முற்றுகைக்குள் முடக்கப்பட்டிருந்தது இராணுவ மற்றும் அரசியல் ரீதியிலான அழுத்தங்கள் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. ஆனால் இத்தனையையும்எதிர்கொண்ட மக்கள் பௌத்த சிங்கள இனவாதிகளின் போர்ப் பிரகடனத்தையும் எதிர்கொள்ளத் தயாரானபடியே 1992 ஐ எதிர் நோக்கியுள்ளார்கள்.

## சிறிலங்காவின் போர்ப் பிரகடனம்

1990 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி நள்ளிரவு முதல் ஒரு தலைப்பட்சமான முறையில் காலவரையற்ற போர்நிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்கப் போகின்றோம் என்று விடுதலைப் புலிகள் விடுத்த பகிரங்க அறிவிப்பு கொழும்புக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதும் அரசியல் ரீதியாகத் தனிமைப் படுத்துவதும் என்று திட்டமிட்டுச் செயற்பட்டு வந்த சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளின் இந்தஅறிவிப்பை முறைப்படி ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ காரணங்களைத் தேடிக்கொண்டிருந்தது. முதலில் ''மூன்று நாட்கள் மட்டும் போர் ஓய்வு கடைப்பிடிக்கப்படும்'' எனக் கூறிய இராணுவத்தை தொடர்ந்து ''ஏழு நாட்கள் ஆயுதநடவடிக்கைகள் நிறுத்தப்படும்'' என்று பட்டும் படாமலும் ஒரு அறிவிப்பை சிறிலங்கா அரசு வெளியிட்டது. இவ்வாறாக சமாதானத்தின மீது தனக்கு நாட்டமில்லை என்பதை தெளிவு படுத்திய சிறிலங்கா ஜனவரி பதினொராம் திகதிபோர் நிறுத்தம் முறித்துக் கொள்ளப்பட்டதாகப் பிரகடனம் செய்த போது சமாதானத்தின் குரல் பலவீனமடைந்தது.

வல்வெட்டித்துறைப் பகுதி மீது ஜனவரி 20முதல் தொடர்ந்து மூன்று நாட்களாக பொழியப்பட்ட குண்டுமாரி அரசின் மனப்போக்கை உறுதிப்படுத்தியது. இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்திவிடுதலைப் புலிகளைப் பலவீனமடையச் செய்வது அச்சத்தையும் பீதியையும் ஊட்டி தமிழ் மக்களைப் பணிய வைப்பது என்ற எண்ணத்தின்அடிப்படையில் சிறிலங்கா செயற்பட்டு வருவது உலகுக்கு உணர்த்தப் பட்டது.

### வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்கள்

தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதன் முறையாக பத்துமைல் சுற்றளவுள்ள பகுதியில் மறைவதற்கு ஒருபுல் நுனி கூட இல்லாத பொட்டல்வெளியில் முப்படைகளுக்கும் எதிரான போர் சிலாபத்துறையில் இடம்பெற்றது. சுமார் ஒரு வாரம்வரை நீடித்த இச்சமரில் எழுபத்தொன்பதுபுலிகள்வீரச் சாவைத்தழுவிக்கொண்டனர். இந்தச்சமரானது எதிரிப்படைகள் பெரும் எண்ணிக்கையில் தங்கியுள்ள முகாம்கள் கூட அவர்களுக்குப் பாதுகாப்பான பகுதிகளல்ல என்பதை எடுத்துக் காட்டியது தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமைக்கு கட்டியம் கூறியது.

இதனை இப்போர் நடைபெற்ற காலத்தில் பாராளுமன்றத்தில் பேசிய சுதந்திரக் கட்சிப் பிரதிநிதி கே.பி ரத்னாயக்காவின் கூற்று உறுதி செய்யும். ''விடுதலைப் புலிகளோடு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இதுவரை காலமும் அரசாங்கம் மற்கொண்ட எந்த நடவடிக்கையுமே சாதாரண தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையவில்லை. தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவதே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முக்கியம்'' என கே.பி.ரத்னாநாயக்கா தெரிவித்தார்.

இதேவேளை கடற்பரப்பின் மீது கடற்புலிகள் அணிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் விசேடமாகக் கணிக்கப்பட வேண்டும் பீரங்கிப் படகுகளை மோதியழித்த கரும்புலிகள், கடலில் கண்ணிவெடி தாவி நடத்திய தாக்குதல்கள் ரோந்துப் படகுகள் மீதான தாக்குதல்கள் என்பன இக்காலத்தில்குறிப்பிடத்தக்க பாதிப்புக்களை சிறிலங்கா கடற்படையினருக்கு ஏற்படுத்தியிருந்தது.

ஒரு மாதத்திற்கு மேலாகநீடித்தஆனையிறவுப்போர்முக்கியமானதொரு வரலாற்று நிகழ்வாகும். ஜூலை பத்தாம் திகதி ஆரம்பித்த இந்த முற்றுகைப் போர் இலங்கைத்தீவில் மரபு வழியான இரண்டு இராணுவங்கள் இருப்பதை அகிலமெங்கும் அறிவித்தது ஆகாயம், கடல், வெளி என்று முற்றிலும் பாதகமானதொரு நிலப்பரப்பில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் சுமார் எட்டாயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் எட்டுக்கிலோமீற்றர் தூரத்தைக்கடக்க இருபத்துநான்கு நாட்கள் எடுக்க வேண்டிய நிலை இருப்பதை எடுத்துக் காட்டியது மேலும் வான் பரப்பில் எதிரியின் பலம் என்பதும் இத்தாக்குதலின் போது கேள்விக்கு உள்ளாகியது. வான் மார்க்கமான விநியோகப் பாதையையும் கூட தடுத்திடும் சக்தி புலிகளுக்கு உண்டு என்பதைப் புலப்படுத்தியது. மரபு வழிப்பட்ட இராணுவ அணியைப் போல எதிரிப்படைக்கு ஈடுகொடுத்துச் செயற்படக் கூடிய திறனும் வலுவும் புலிகளுக்கு உண்டு என்பது வெளிப்படையாகியது.

எதிரிப் படைகள் தமது இராணுவ தந்திரோபாயங்களை மாற்றியமைக்க வேண்டிய நிலைக்கும், புதிய வகையிலான போர்த்தளபாடங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைக்கும் இட்டுச் சென்றது. மேலும் ஆனையிறவுப்போரில் 573 புலிகள் வீரச்சாவைத்தழுவிக் கொண்டதும் சுமார் 1000 பேர் வரையிலான புலிகள் காயமடைந்ததுமான நிலைமையை புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என்றுகருதியதாலோ என்னவோ மணலாறு மாவட்டத்தின் மீது இராணுவம் பாரிய ஆக்கிரமிப்பு ஒன்றை மேற்கொண்டது ஆனால் சுமார் இருபத்தெட்டு நாட்கள் நீடித்த இந்தப் போரின் முடிவில் இராணுவம் பெரும் இழப்புக்களோடு முகாமிற்கு திரும்ப வேண்டியதாயிற்று. சிலாபத்துறை, ஆனையிறவு மணலாறு என்றமூன்று பெரும் யுத்தங்களும் 1991 ஆம் ஆண்டின் மகத்தான சாதனைகள் மட்டுமல்ல. தமிழீழ போராட்ட வரலாற்றில்முக்கியமைல் கற்களாகும்.



1991 மார்ச் 2-ம் திகதியன்று கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பின் பின்

### மூன்று குண்டு வெடிப்புக்கள்

பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணா கொலையுண்ட 1991-03-02 திகதிய குண்டுவெடிப்பு. கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்தின் மீதான 1991-06 21 திகதிய குண்டுவெடிப்பு. மற்றும் மே 21 ஆம்திகதி தமிழகத்தின் சிறீபெரும் புதூரில ராஜீவ் காந்தி கொலையுண்ட குண்டு வெடிப்புஎன இம் மூன்றுகுண்டு வெடிப்புகளும் இந்த ஆண்டின் முக்கிய நிகழ்ச்சிகளில் தவிர்க்க முடியாதவை ஆகும் அடுத்தடுத்து இடம்பெற்ற இம்மூன்று குண்டு வெடிப்புகளுக்கும் விடுதலைப்புலிகளையே இலங்கை அரசும் இந்திய அரசும் குற்றம் சாட்டின. அத்துடன் விடுதலைப்புலிகளுக்கு எதிராக கூட்

(11ஆம் பக்கம் பார்க்க)

— இனியவன் —



கொழும்பில் 1991 மார்ச் 2-ம் திகதியன்று நடைபெற்ற குண்டுவெடிப்பில் சிக்கிய வாகனம்.

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# 'தர்சன் வா அம்மான்'

- வசந்தன் -

தமிழ் நாட்டின் ஒரு ஓரம். கோடிக்கரை எனும் கிராமம், கரையில் கடலின் அலைகளைத் தொட்டபடி அந்தப் படகு நின்றது. நிலவில்லாத இரவு-இருளின் ஆதிக்கம் கடுமையாகவே இருந்தது. அந்தப் படகைச் சுற்றிப் பலர் சுறுசுறுப்பாக, ஆனால் பதற்றத்துடன் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

தர்சன் தனியாக நின்றான். படகில் வேலை செய்துகொண்டிருந்தவர்களின் சத்தம் இடை இடையே கேட்டது. தனிமை வெறுப்பாக இருந்தது. இருள் அவனுக்குப் பிரச்சினையாக இருக்கவில்லை.

அவன் இருளுக்குள் வாழத் தொடங்கிப் பல நாட்களாகி விட்டன.

காற்று சத்தத்துடன் கடுமையாக வீசிக் கொண்டிருந்தது. அலைகள் நெஞ்சில் இடிக்குமாப் போல் கரையில் மோதிச் சிதறியது. தர்சனுக்கு யாரோடாவது கதைக்க வேண்டும் போலிருந்தது!

''டேய், டேய்'' என மெதுவாகக் கூப்பிட்டான். சத்தமில்லை. கால்களை இரண்டு 'எட்டு' வைத்துக் கைகளால் துளாவிப் பார்த்தான். சுற்றிவர ஒரு தரம் கைகளை வீசினான்.

'இல்லை, ஒருவருமே இல்லை', அவனது மனம். ஆராவது அருகில் வந்து நிற்க மாட்டார்களா என்று ஏங்கியது.

''தர்சன் ஒண்டுக்கும் யோசியாதையடா, ஒரு பிரச்சினையும் வராது'' சொல்லிக் கொண்டே ரோமியே நடந்தான். அவனின் சத்தமான நீண்ட மூச்சும், நடந்து சென்றபோது பாதங்கள் மண்ணைச் சிதைத்த ஓசையும் அவன் ஏதோ கடுமையான வேலையாக நிற்கிறான் என்பதைத் தர்சனுக்குத் தெரிவித்தன.

ரோமியோவை தர்சனுக்கு நன்றாகவே தெரியும். அவனின் முகத்தைத் தர்சன் ஒருபோதும் அறியான். ஆனால், அவனின் அன்பு உள்ளத்தை நன்றாகவே அறிவான்.

கைகளையும் தலையையும் ஒரு தரம் பின்னால் சரித்து உடலை அசைத்துச் சோம்பல் முறித்துக் கொண்டான். அவனுக்கு நடக்க வேண்டும் போலிருந்தது. கடல் அலைகள் மோதும் திசை நோக்கி நடந்தான். எதிரில் எதுவுமே இராது என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் மனதில் அச்சமாக இருந்தது. இடை இடையே கைகளை முன்னுக்கு நீட்டி உறுதிப்படுத்திக் கொண்டான். அலைகளின் தெறிப்பு கால்களில் பட்டவுடன் நின்றான். காற்று முகத்திலும்-நெஞ்சிலும் வீசியடித்தது. கைகளைக் குறுக்காகக் கட்டிக் கொண்டான்.

''இந்தக் காத்து எங்கட நாட்டின் வாசத்தையும் கொண்டு வருகிறதா?'' இதயத்தில் தாயகத்தின் நினைவு இதமாக வருடிச் சென்றது. குறுக்காகக் கட்டியிருந்த கைகளை விலக்கினான். அந்தக் காற்றுத் தன்னை முழுமையாகத் தடவட்டும் என்று நெஞ்சை நிமிர்த்தினான்.

அவன் நாட்டில் நின்ற கடைசி நாட்கள்..., அந்தச் சம்பவம்......

★ ★ ★

மணலாற்று காட்டைச்சுற்றி கடுமையாக சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்தக் காடு இந்தியர்களால் இயலும் மட்டும் சிதைக்கப்பட்டது. ஆனாலும் அந்தக்காட்டின் மரங்கள் போராளிகளைத் தமக்குள் மறைத்துக் கொண்டன.

தர்சன் வெடிமருந்துப் பிரிவில் இருந்தான். இந்தியர்கள் எந்தப பக்கமாக வர முயற்சிப்பார்கள் என்பதைஅவர்கள் முன்னமே தீர்மானித்து விடுவார்கள். அப்பாதைகள் எங்கும் பொறிவெடிகள் விதைக்கப்படும்.

காலை நேரம், காட்டில் வெடி ஓசை முழங்கும்.

''இந்தியர்களில் ஒருவன் கால்களை இழந்துவிட்டான்'' என்று தோழன் ஒருவன் கூக்குரலிடுவான். அதன் பின்புஅவர்கள்முன்னேற மாட்டார்கள். அப்படியே வந்தாலும் மேலும் சிலர் தங்கள்கால்களை கொடுத்த பின்புபின்வாங்கிச்சென்று விடுவார்கள்.

தர்சன் அந்தக் காட்டில்நின்றவர்களில் ஓர் சுறுசுறுப்பான இளைஞன் எதற்கெடுத்தாலும் அமைதியாகச்சிரிப்பான். கண்கள் கலக்கமில்லாமல் எல்லோரிலும் குத்தும்-எதிரில் நிற்பவர்களை ஊடுருவி அவர்களை அறிய முயலும்.

அன்று. நித்திகைக்குளத்தில் இந்திய வானூர்திகளின் நடவடிக்கைகள் அதிகமாக இருந்தன. அங்கிருந்து இந்தியர்கள் புறப்படலாம் என்ற சந்தேகம்.......

நித்திகைக்குள இந்தியப்படை முகாமிலிருந்து சிறிது தள்ளி- இந்தியர்கள் பேசும் குரல்கேட்கும் தொலைவில் ..

தர்சன் தன்தோழர்களுடன் நின்றான்.

வந்தவர்களில் சிலர் காவலுக்கு நின்றனர். காட்டின் மறைவு அவர்களை வெளிப்படுத்தவில்லை.

தர்சனும் வேறு சில தோழர்களும் மிதி வெடிகளை புதைக்கத் தொடங்கினர். ஒன்று, இரண்டு...

எல்லாம் சரி ஒரு தோழன் அவசரப்படுத்தினான்.

கடைசி மிதிவெடியைப்புதைத்துவிட்டு தர்சன் அழகுபார்த்தான் அது நிலத்துடன் நிலமாக காட்டுச் சருகுகளால் தன்னை உருமறைப்புச்செய்து கொண்டு இருந்தது ஆனால் பொலிதீன் ஒன்று சாதுவாக நீட்டிக்கொண்டு நின்றது.

தர்சன் முழங்காலில் இருந்தான். குனிந்து மெதுவாகஅந்த பொலிதீனை...

அந்தக் காடு அதிர்ந்தது.

இரத்தவெள்ளத்தில் தர்சன் கிடந்தான். உயிர் இருக்கா? அப்படியே இருந்தாலும் அவன் தப்புவானா?

தோழர்கள் அவனை முகாமிற்குத் தூக்கி வந்தார்கள். அதன் பின்பு நடந்தது எதுவுமே தர்சனுக்குத் தெரியாது. அவன் தன்னை உணர்ந்து கொண்ட பொழுது தமிழ் நாட்டில் ஓர் வைத்தியசாலையில் இருந்தான். நீண்ட நாட்கள் அவன் தமிழகத்தில் வாழ்ந்து விட்டான். இன்று தாயகக் காற்றை சுவாசிப்பதற்காக அவன் பயணம் போகிறான்.

★ ★ ★

''வள்ளத்தை கடலுக்கை தள்ளுங்கோ'' என்றான் அந்தப் படகின் ஓட்டி. ''தர்சன் ஏறட்டும்''

தர்சனைத்தூக்கிக் கொண்டு போய் வள்ளத்தில் ஏற்றினான் றோமியோ. ''நீ வரேலையா'' என்றான் தர்சன்.

''இல்லை அம்மான்நீபோயிட்டு வா'' என்றான். அவன் குரல் தளதளத்தது.

படகை எல்லோருமாகத்தள்ளினார்கள். மணலிலிருந்து கடலுக்குள் படகு இறங்கியது. எல்லோரும் தாவி ஏறினார்கள். ''தர்சன் போயிட்டு வா அம்மான்'' றோமியோ கரையில் நின்று பலமாகக் கத்தினான்.

இருள். தனது கையில்லாத கைகளின் அசைவு அவனுக்குத் தெரியாது என்பது தர்சனுக்குத் தெரியும். ஆனாலும் அவனுக்குக் கை காட்ட வேண்டும் போலிருந்தது. அவன் நீண்ட நேரமாககைகளை அசைத்துக் கொண்டிருந்தான்.

தர்சனுக்கு தன்னிலேயே வெறுப்பாக இருந்தது. பெரிதாக அழவேண்டும்போல் இதயம் கனத்தது.

'எந்த மனிதரிலும் இலகுவாக அன்பை வைக்க முடியுது ஆனா பிரியிறதெண்டால்...' இன்னும் கரையிலறோமியோ நிற்பான். தர்சனுக்கு ஏதோ அந்தப் பக்கம் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவன்கரை என்று நினைத்த பக்கத்தை திரும்பிப் பார்த்தான்.

'நான் வந்தது தொடக்கம் இந்த இந்திய மண்ணிற்குவந்த எத்தனை தோழர்களைச்சந்தித்து விட்டேன்' அவர்களின் நினைவுகள் மனவுலகில் நடைபோடத் தொடங்கின.

★ ★ ★

தமிழ் நாட்டிலுள்ள ஓர் மருத்துவமனை கட்டிலில் தர்சன் படுத்திருந்தான். வலது கை மணிக்கட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இடது கை முழங்கையிலிருந்து சற்றுக் கீழே அகற்றப்பட்டிருந்தது.

கண்கள் இரண்டும் ஒளியை முற்றாக இழந்திருந்தன. எல்லா இடத்திலும் பட்டிருந்த காயங்கள் ஓரளவு ஆறி இருந்தன. அவனை வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போகலாம் என்றும்வாராவாரம்வைத்திய பரிசோதனைக்கு அழைத்து வரவேண்டும் என்றும் மருத்துவர்கள் சொன்னார்கள்.

தர்சனுடன் சேர்ந்து எல்லாமாக பத்துப் பேர் அந்த வீட்டில் இருந்தார்கள். தர்சனுக்கு எல்லாமே அவன் தோழர்கள்தான். காலையில் பல்துலக்கி விடுவார்கள். முகம் கழுவுவார்கள். அவன் முகம் சுழித்தாலும் சின்னக்குழந்தை ஒன்றைப் போன்று அடித்தடித்து உணவூட்டுவார்கள். நல்ல வெயில் அடிக்கும் நேரங்களில் அவனின் காயங்களில் தண்ணி பட்டுவிடாமல் அவதானமாக குளிப்பாட்டுவார்கள்.

தர்சனுக்கு வியப்பாக இருக்கும். 'இவர்களுக்குள் இவ்வளவு அதிகமான மனிதத்துவத்தை யார் வளர்த்து விட்டார்கள்' அந்த நினைப்பில் அவன் கண்களில் நீர் துளிர்க்கும். இந்த நாட்களில் தான் ரோமியோவும் கையில் பெரிய கட்டுடன் அங்கு வந்தான் அவனது கையில் விரல்களின் மேற்பகுதியை குண்டொன்றின் சிதறல் ஊடுருவி இருந்தது. காயம் அவனுக்கு விரைவாகவே மாறிவிட்டது. ஆனால் விரல்களிற்கு உணர்வுகள் வராது இருந்தது. மற்றவர்களை போலத்தான் அவனும் வந்ததும் வராததுமாக தர்சனில் அளவுக்கு அதிகமான அன்பை வைத்துவிட்டான்.

அந்த வீடும்தான் எத்தனை மனிதர்களை அடிக்கடி சந்திக்கின்றது. காயங்கள் குணமான பின்பு பழைய தோழர்கள் நாட்டுக்குச் செல்வார்கள். புதியவர்கள் புதிய காயங்களுடன்வருவார்கள். ஆனால், அந்த வீட்டின் சுவர்களிற்குள் வந்ததும் அவர்கள் ஒன்றாக கலந்தார்கள். தர்சனிலும் - தமக்குள்ளும் பாசத்தை அள்ளிக் கொட்டினார்கள்.



தர்சன் அந்த வீட்டோடு நன்றாகவே பழகிவிட்டான். அவனுக்கு என தனியான தொரு அறை இருந்தது. ஆனால் அதுதான் எல்லோருக்குமே பொழுது போகும் இடம்.

ஒரு தோழன் அறையினுள் வருவான் தர்சனிடம், 'யாரி சொல்லு பார்ப்பம்' என்பான். அவ்வளவு நேரமும் அருகில் இருந்த தோழன். தர்சன் சிரித்து விட்டு பேசாமல் இருப்பான். அதற்கிடையில அவனது கை வந்திருப்பவரின் வலது கையைத் தடவும்.

'சுரேஸ் அண்ணையல்லோ' என்பான்'

இதற்காக சுரேஸ் மணிக்கட்டுடன் இல்லாமல் போன தனது வலது கையை ஒழித்து விட்டு இடது கையை கொடுத்துவிட்டு இருப்பான். ஆனால் தர்சனோ கதையோடு கதையாக அவனின் தலையை தடவி இருப்பான். மொட்டை வழித்த சில நாட்களில் வளர்ந்த மயிர் நன்றாக குத்தும்.

'சுரேஸ் அண்ணைதான்' தர்சன் உறுதிப்படுத்திக் கொண்டே சொல்வான். இப்படித்தான்ஒவ்வொருவருக்கும் ஒரு அடையாளம் தர்சனிடம் இருக்கும். காலப் போக்கில் நடந்துவரும் ஓசையை வைத்தே அவன் வருவது யாரென அடையாளம் கண்டு கொண்டான்.

சில நேரங்களில், தர்சனின் அடிமனதில் புதைத்து கிடக்கும் எண்ணங்கள் மேலெழும்பும்.

அம்மாவின், சகோதரர்களின்... நினைவுகள் நெஞ்சினை வருத்தும், 'என்ரை நிலையை அறிந்தால் அம்மா வேதனைப் படுவா - தாங்க முடியாமல் தவிப்பா' நினைவுகளால் நெஞ்சம் அழும்.

'சீ, அம்மாவுக்கு சரியாகச் சொல்லவேண்டும். 'உங்கட மகன் இந்தத் தேசத்தின்ர வாழ்வுக்காகத்தான் தன்ர கண்களை இழந்தான் என்பதை அம்மா ஏற்றுக்கொள்ளுறமாதிரிச் சொல்ல வேண்டும்.' அவன் தனக்குத்தானே சொல்லிக் கொள்வான்.

உச்ச வெயில் கொளுந்தும் பகற்பொழுதுகளில் தான் இந்த நினைவுகள் நெஞ்சில் எழும். உடலின் வெக்கையோடு மனதின் வெப்பமும் சேர்ந்து மனிதரை வாட்டி

(14ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டாவது ஆண்டு நிறைவு

07. 1992

# பேரினவாத சிந்தனைக்குட்பட்ட தென்னிலங்கைப் பத்திரிகைகள்

''வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் விடுதலைப்புலிகளை ஒடுக்கக் கூடிய திறமையான போர் முறைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை சிறிலங்காஇராணுவத்திற்குத் தேவை.''

இவ்வாறு தென் இலங்கையிலிருந்து வரும் 'ஐலண்ட்' பத்திரிகை தனது நடுப்பக்க கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. இக் கட்டுரையை எழுதியசந்திரபர்வினான்டோ ''யாழ்குடாநாட்டை இராணுவம்துண்டித்தது'' என்ற தலையங்கத்தில் விடுதலைப்புலிகளின் பலம் குறித்து விளக்கியுள்ளார். ''இராணுவத்தினரிடம் இருக்கும் நவீன ஆயுதங்கள் போல் தங்களிடம் இல்லைஎன்பதை விடுதலைப் புலிகள் ஒத்துக்கொள்ளுகின்றார்கள். இன்னும் சில வருடங்களில் முப்படைகளுக்கும் அச்சுறுத்தல் கொடுக்கும் வகையில் அவர்கள் பலமடையலாம்.'' என்று புலிகளின் பலம் குறித்து அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரம் இது குறித்து இராணுவ தரப்பினர்க்கும் அவர் ஒரு அச்சுறுத்தலை எழுதியுள்ளார். புலிகளின் பலத்தை உடைக்க சிறிலங்கா இராணுவத்தைகட்டியெழுப்ப வேண்டிய தேவையையும் அவர் வலியுறுத்தியுள்ளார். இக்கட்டுரையாசிரியர் தனக்குள்ள தார்மீகக் கடமையை மறந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் குறித்து இனவாதத்தை சிங்கள மக்களுக்கு ஊட்டுகிறார்.

இவைதான் தென் இலங்கையில் இருந்துவரும் பத்திரிகைகளின் முத்திரைகளாகி (Symbol) விட்டன. இவைதான் அவைகளின் பிரதான கொள்கையும் கூட.

இலங்கைஇனப்பிரச்சினைக்கான அடிப்படையின் பக்கங்கள் எத்தனையோ இருக்கின்றன. காலங்காலமாக இப் பிரச்சினையைத் தீர்க்க எத்தனையோ வழிவகைகள் இருந்தன. இவையாவற்றையும் குறிப்பிடாது தென் இலங்கைப்பத்திரிகைகள்தான் தோன்றித்தனமாக, தாம் நினைத்ததை தமது கருத்துக்களாக இதுவரை வெளியிட்டன வெளியிட்டும் வருகின்றன

இந்து சமுத்திரத்தின் மத்தியில், உலகை பல வகையிலும் கவர்ந்துள்ள இலங்கையில் இனப்பிரச்சினை உள்ளது, சிறுபான்மை இனமான தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள்; அழிக்கப்படுகின்றார்கள். இங்கு தமிழர்களின் இரத்த ஆறுபாய்கின்றது. இவ்வாறு உலகெங்கிலும் இருந்து வரும் பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. இதனைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து வருகின்றன தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளையும் அங்கீகரிக்கின்றன

ஆனால், தென் இலங்கையிலோ இத்தகையதொரு நிலை காணப்படவில்லை. அங்கிருந்துவரும் பத்திரிகைகள், ''ஐக்கிய இலங்கை,'' ''சிங்கள - பௌத்தம்'' என்ற கோட்பாட்டுக்குள்ளேயே, அந்தவட்டத்திற்குள்ளேயே நின்று சிறிலங்கா அரசிற்கு ஏதே ஒரு வகையில் ஆலோசனை வழங்குவதாகவும், எச்சரிக்கை விடுவதாகவும்தனது ஆக்கங்களை வெளியிடுகின்றன.

இதனை தென் இலங்கையில் இருந்து வரும் இது ஆங்கில பத்திரிகைகள் மூலமாக சுட்டிக்காட்டலாம்.

'ஐலண்ட்' என்ற தினசரியையும், 'சண்டேரைம்ஸ்' என்ற வார இதழ் பத்திரிகையையும் எடுத்து நோக்கி இப் போக்கினை அறிந்து கொள்ளலாம்.

ஐலண்டில் தாரகி என்பவர் எழுதும் கட்டுரைகளை பற்றிப் பார்ப்போமானால் அவர் மூலமாக அப் பத்திரிகை சிங்கள வாசகர்களுக்கு தமிழர், புலிகள் பற்றிய சில விளக்கத்தை கொடுக்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் ஒரு இனவாதத்தை இதன் மூலம் பரப்பி வருகிறது.

தாரகியின் கட்டுரைகள் பலவற்றில் இவ்வாறான ஒரு தன்மையே காணப்படுகின்றது. 'வரதனைப் பற்றிய ஒரு குறிப்பு' என்ற தலைப்பில் 7.7.91 ஐலண்ட் பத்திரிகையில் தாரகி எழுதிய கட்டுரையானது சிங்கள வாசகர்களுக்குநல்லதொரு தீனியே ஆகும். இக்கட்டுரையில் விடுதலைப் புலிகளின் புலனாகவுத் துறை குறித்து சிறப்பாகக்குறிப்பிட்டு அது குறித்து சிறிலங்கா அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை 'கோடி' காட்டியுள்ளார். தாரகியின் கட்டுரைகள் பலவற்றில் இவ்வாறான ஒரு தன்மையே காணப்படுகின்றது.

தாரகி தமிழனாகவும், முன்னொரு காலத்தில் தமிழீழத்தின் விடுதலைக்காக போராடியதாகக் கூறும் தமிழ்க் குழுக்கள் ஒன்றின் உறுப்பினர் என்ற வகையிலும் சில தகவல்களை அவரால் தெரிவிக்க முடிகிறது. இதனை ஐலண்டும் தாராளமாகவே பயன்படுத்தி வருகிறது.

இவரது கட்டுரைகளும், சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாத கட்டுப்பாட்டிற்குள் அடங்கியவாறே காணப்படுகின்றன. ஏதோ ஒரு வகையில் இவரது கட்டுரைகள் புலிகள் குறித்த அச்சுறுத்தலை இராணுவத்திற்கு தெரிவிப்பதோடு, அதற்காக சிறிலங்கா இராணுவம்அரசாங்கம் செய்ய வேண்டிய தயார் நிலை பற்றியும் குறிப்பிடுகின்றார்,

அண்மையில் 5-1-92 வெளிவந்த ஐலண்டில் 'போரை பொருளாதாரமே தீர்மானிக்கும்' என்ற தலைப்பிலான கட்டுரையில், இந்திய வரலாற்றில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற ஒரு வரலாற்றுச் சம்பவத்தைக் குறிப்பிட்டு, அதன் மூலமாக விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவிருக்கும் தந்திரோபாய நடவடிக்கைகள் குறித்து விளக்கம் கொடுத்துள்ளார். இவரது இக் கருத்துக்கள் எவ்வளவு தூரம் சரி எவ்வளவு தூரம் பிழை என்பதைவிட இத்தகையதொரு அச்சுறுத்தலை இவர் அரசாங்கத்திற்கு வழங்குகிறார். இந்த வகையிலேயே இவரது பெரும்பான்மையான கட்டுரைகள் அமைந்திருக்கின்றன.

இங்கு கவனிக்கப்பட வேண்டியது தென் இலங்கைப் பத்திரிகைகள் தார்மீகத்திற்கு உட்பட்டு தமது கருத்துக்களை வெளியிடுகின்றார்கள் என்று. எமது பிரச்சினை தீர்க்கப்படாமல் இன்று இந்த நிலைமை வளர்வதற்கு பத்திரிகைகள் தமது பங்களிப்பினை நிறைவாகவே செய்திருக்கின்றன.

அண்மையில் இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் சில யோசனைகளை தயாரித்து விடுதலைப் புலிகளுக்கும், சிங்களத் தலைவர்களுக்கும் அனுப்பியிருந்தார். விடுதலைப் புலிகளால் தொண்டமானின் யோசனைகள் முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளப்படாத போதிலும், கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆராய முற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில்,

தென் இலங்கைப் பத்திரிகைகள் இதில் ஐலண்டை எடுத்துக்கொண்டால் அது சிங்கள மக்கள் மத்தியில் தொண்டமானின் ஆலோசனைகள் சிங்கள மக்களுக்கு எதிரான ஒரு தீர்வு என பிரசாரம் செய்தது. தொடர்ந்தும் செய்து வருகின்றது.

இப் பிரசாரமானது இனவாத பௌத்த மகா சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல. மகா சங்கம் கொழுக்கட்டை, தென்னிலங்கைப் பத்திரிகைகள் மோதகம். அவ்வளவுதான் வித்தியாசம்.

ஐலண்டை பொறுத்து அது பிரேமா எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு என்ற இரு கொள்கைகளை மையமாகக் கொண்டே தனது ஆசிரியர் தலையங்கங்களையும், கட்டுரைகளைபும் வெளியிட்டு வருகின்றது.

இவ்வாறாகவே தொண்டமானின் ஆலோசனைகளையும் பிரேமதாசாவின் கருத்தாக ஒரு புறமும், தொண்டமானை ஒரு புலியின் பிரதிநிதியாகவும் கொண்டு தனது ஆசிரியர் தலையங்கங்களை எழுதியது.

கட்டுரைகள், ஆசிரியர் தலையங்கங்கள் என்ற வரிசையில் 'கார்டூனும்' இடம் பெற்றுவிட்டது. நகைச்சுவை மூலம் (Humorous) கருத்தைவெளிப்படுத்த வேண்டிய கார்டூன்கள் 'சீடியஸ்தன்மை' யினைக் கொண்டு வந்தது விஜயசோவின் கார்ட்டூன்கள் தான்.

நகைச்சுவை காணப்பட்டாலும் அதில் ஒரு எச்சரிக்கை காணப்பட்டது. சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான புலிகளுக்கு எதிரான இனவாதத்தை வளர்த்து பெரும் பங்காற்றியவர் விஜயசோமாவே.

தமிழர் என்பதால் புலிகளுக்குபொட்டுவைத்து 'பொட்டு வைத்த தமிழ்ப் புலிகளை' கொண்டு வந்து, அதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை ஊட்டினார் விஜயசோமா.

குறிப்பிட்டுக் கூறக் கூடிய வகையில் இத்துறையில் குறிப்பிடத்தக்கவராக இருந்து வந்தவிஜய சோமா, 'பொட்டு வைத்த புலிகள்' மற்றும் இனவாத கார்டூன்களால் தான் பிரபல்யம் பெற்றார். சிங்கள மக்களை சிரிக்க வைக்க, தமிழ் மக்களுக்கு எதிரான கருத்தை வளர்க்க விஜயசோமாவின் கார்டூன்களை இப்பத்திரிகை நன்றாகவே கையாண்டது.

இதுதான்ஐலண்ட்பத்திரிகை வகித்த பிரதான பங்காகும்.

இந்த இடத்தில் ஐலண்டோடுஒப்பிட கூடியஅளவிற்கு 'சண்டேரைம்ஸ்' தான்தோன்றித் தனமாக செயல்படாவிடினும், சிங்கள, பௌத்த கோட்பாட்டிற்குள் நின்று கொண்டே தனது கருத்துக்களை வெளியிட்டது.

1990 ஆம் ஆண்டுக் காலத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படை தமிழீழ மண்ணிலிருந்து விரட்டப்பட்ட பின்னர் வட பகுதிக்கு விஜயம் செய்த இப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவினர் இங்குள்ள பெண் போராளிகளின் பேட்டியினை பெரிதாக பிரத்தியேகமாக (Exclusive) வெளியிட்டிருந்தார்கள்.

இதன் மூலம் அவர்கள் சிங்கள மக்களுக்கு தமிழ்ப் பெண்களுக்கு, பெண் போராளிகளுக்கு எதிரான ஒரு அச்சுறுத்தலை எடுத்துக் காட்டினார்கள். இங்கிருந்து சென்று எழுதிய கட்டுரைகளில் எல்லாம் இப்படியான ஒரு கருத்தையே சண்டே ரைம்ஸ் தென் இலங்கை வாசகர்களுக்கு வலியுறுத்தியது.

யாழ்ப்பாணத்தை ஒரு 'பூதாகரமான' ஒரு பிரதேசமாகவே அவர்கள் சித்தரித்திருந்தார்கள். வர்ணித்திருந்தார்கள். அங்குள்ள பிரதேசத்தை புலிகள் பூதம் போல் காக்கின்றனர் என்றும் விபரித்தனர். சிறுபான்மையினமான தமிழ் மக்கள் இலங்கையின் பெரும் பகுதியை தமது தாயகமாகக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தையும் ஆழப்பதித்தார்கள்.

மகாவம்சத்தின் பாணியினை தென் இலங்கைப் பத்திரிகைகளும் அதே கொள்கையில், காலத்திற்கு ஏற்ப சில மாற்றங்களைச் செய்தும் மாற்றியும் செய்து வந்தன.

''இருள் சூழ்ந்த கொக்கிளாய்'' என்ற தலைப்பில் இப் பத்திரிகையில் தினேஷ் வட்டவன எழுதிய கட்டுரையில் கொக்கிளாயிலுள்ள சிங்கள மக்களின் நிலை குறித்து, பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

''சிங்கள மக்கள் தங்களின் வாழ்க்கைக்கு மூலாதாரமாகவுள்ள மீன் பிடித்தொழிலை சிறிலங்கா கடற்படை மற்றும் இராணுவம் ஆகியவற்றின் பாதுகாப்புடன் இவர்கள் செய்து வருகின்றார்கள். என்னதான் இருப்பினும் இம் மக்களது வாழ்க்கை இருள் சூழ்ந்த ஒன்றாகவே இருக்கின்றது.''

இவ்வாறு சிங்கள மக்களே அவலைப்படுகின்றார்கள் என்று சித்தரித்து அதன் மூலமாக தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தை இக் கட்டுரை ஆசிரியர் சிங்கள மக்களுக்கு ஊட்டுகின்றார். இக் கொக்கிளாய்ப் பிரதேசம் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதையோ அங்கு பாரம்பரியமாகவாழ்ந்த தமிழ் மக்கள் விரட்டப்பட்டார்கள் என்பதையோ இந்தக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடவில்லை. எழுந்தமானத்தால், தங்களுக்குத் தேவையானவற்றை மட்டுமே குறிப்பிட்டு எழுதுகின்றார்கள்.

இதே போலவே ''மறக்கப்பட்டிருக்கும் மணலாறு மக்கள்'' என்ற தலைப்பில் இதே பத்திரிகையில், இதே ஆசிரியரால் எழுதப்பட்ட கட்டுரையிலும் தமிழ் மக்களை விடுதலைப்புலிகளை ஒரு பூதமாகவே சித்தரித்து. அவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து சிங்கள மக்கள் எவ்வாறு துணிவுடன் இருக்கிறார்கள் என்பதை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதே நேரம் தமிழரின் பாரம்பரியமாக இருந்து வரும் இப் பிரதேசத்தில் வாழும் மக்கள் சிங்கள பேரினவாதத்தின் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவதை குறிப்பிடவில்லை. இங்கு வாழும் மக்கள் ஆயுதங்களுடனேயே படிக்க, படிப்பிக்க போகின்றார்கள் என்பதை இக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடவில்லை.

சிங்கள மக்கள் சிங்கள இராணுவத்தின் பாதுகாப்பில் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடும் அக்கட்டுரை ஆசிரியர், தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு விடுதலைப்புலிகள் இருக்கிறாரகள் என்பதையோ தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற தமிழ் மக்களே முனைந்து விட்டார்கள் என்பதையோ மறந்து விடக் கூடாது.

தென் இலங்கையில் இருந்து வெளிவரும் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளை மட்டுமே உதாரணமாக காட்டினோம். ஆனால், இதனை விட சிங்களப் பத்திரிகைகளும் இதே குறிக்கோளுடனேயே செயல்படுகின்றன. தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை சிங்கள மக்கள் மத்தியில் பதிப்பதான தேவையை நிறையவே, நிறைவாகவே செய்கின்றன.

கடந்த கால வரலாறுகளில் இருந்து ஒன்றை நாம் விளங்கிக் கொள்ளலாம். அதாவது இனப் பிரச்சினை குறித்த விடயத்தில் சிங்கள அரசியல் வாதிகளுக்கு மட்டுமல்லாது தென் இலங்கைப் பத்திரிகைகளுக்கும் பங்கு இருக்கின்றது என்பதை இதனால் வரலாற்றில் தென் இலங்கைப் பத்திரிகைகளின் பங்களிப்பு இருண்டதாகவே இருக்கும் என்பதால் எந்த வித சந்தேகமும் இல்லை.

உமா

★

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# கனத்த இரவு

முதற் பரிசு பெற்ற சிறுகதை

ஈழச்செல்வன்

கதிரவன் மயங்காமலே மங்கலான பார்வையைப் பூமியில் செலுத்திக் கொண்டிருந்தான். மக்கள் எல்லோரும் ஏட்டிக்குப் போட்டியாக விரைந்து கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் குறுக்கும் நெடுக்குமாக சைக்கிள்களை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். அந்தவேளை நானும் எனது நண்பர்களும் அர்சுனா வீதியில் இருந்து கஸ்தூரியார் வீதிக்குசைக்கிள்களைத் திருப்பினோம்.

'தமிழருவி, றாஜுஸ்ரோர்ஸ், ரதிலோச் வேச்ஸ், மின்வளம், இளந்தென்றல்', என்று கடைகளின் பெயர்ப் பலகைகளை உரக்க வாசித்தபடி எனக்கு முன்னாலே என் நண்பன் ஜெயா சென்று கொண்டிருந்தான்.

ஒளிக்கதிர்கள் மெல்ல மெல்ல கடலில் மூழ்கிக் கொண்டிருந்தன. எங்களது சைக்கிள்களும் பாலம் பணிமனை வாசலை அடைந்தன.

மின்விளக்குகள் இருளை விரட்டிக் கொண்டிருந்தன. அங்குபணியாற்றுகின்ற அனைவரும் எறும்பை விட வேகமாகக்கடமையாற்றிக் கொண்டிருந்தனர் கறுப்பு,வெள்ளை உடை அணிந்த பெண்கள் பராமரிப்புக்குச் செல்வோரை பதிந்து கொண்டிருந்தார்கள்.

பராமரிக்க வந்தவர்களில் எங்களைப் போன்ற இளைஞர்கள் பன்னிருவரை அழைத்து இருபத்திநான்காம் வாட்டிற்கு பதியும்படி ஒருவர் கட்டளை இட்டார். அதன் காரணம் அறிய ஆவலாய் இருந்த நான் எம்மைப் பதிந்த ஒரு அக்காவிடம் வினாவினேன்.

''காயப்பட்டு வருகிறவர்களை அங்கதான் முதல்ல அட்மிற்பண்ணுவினம்'' என்று கூறியவர் 'சில வேளையில் O-P-D யில் இருந்து வோர்டிற்கு நீங்கள்தான் பேசன்ரை கொண்டு வரவேணும்' எனப் பதிலளித்து விட்டு மீண்டும் கடமையில் ஈடுபட்டார்.

அன்றுதான் பராமரிக்கச் செல்லுதல் முதல் தடவையாதலால், பராமரிப்பு முறைகள் பற்றி தெளிவற்று இருந்தேன் மற்றவர்களைக கேட்க நினைத்த என்னைக் கௌரவம் தடுத்தது. முதலிலே நோயாளிக்கு விசிறியால் காற்றைப் பரப்புவோம். பின்னர் மற்றவர்கள் செய்வதைப் பார்த்துச் செய்வோம் என எண்ணி மனம் ஆறியது.

நூறு பேர் மட்டில் இருந்திருப்போம். ஒருவரால் வரிசையில் அழைதநுச் செல்லப்பட்டோம். வைத்தியசாலையை அடைந்ததும் இருபத்திஆறாம்வார்டிற்கு பதியப்பட்டவர்கள் பிரிந்துசென்றார்கள். இவ்வாறு பத்தாம், பதினைந்தாம் வாட் என்று பிரிந்து வரிசையின் நீளம் குறைந்தது.

எம்மை 24ஆம் வாட்டிற்கு அழைத்துச் செல்வதற்காகக் காத்து நின்ற ஒருவர் எம்மை அழைத்துச் சென்றார். எனது மனதில் வித்தியாசமான உணர்வு தோன்றியது. நெஞ்சின் அதிர்வு அதிகரித்தது. கால்கள் பயத்தால் நடுங்கின.

எங்களதுவாட்டிற்கு பொதுவாக ஒரு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் பராமரிப்பு முறைகள் சிலவற்றை விளக்கினார். பின்னர் இரண்டு போராளிக்கு ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டோம். நான் பத்தாம் பதினொராம் கட்டிலில் உள்ள போராளிகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றேன்.

ஒருவர் தூக்கத்தில் இருந்தார். மற்றவர் விழிப்பாக இருந்தார். அவரால் பேச முடியாது. ஏனெனில் எதிரியின் குண்டு அவரது வாயைப் பதம் பார்த்திருந்தது. அவர் தனது தேவைகளை சைகை மூலம் கேட்டு பூர்த்தி செய்து கொண்டிருந்தார்.

எனது கைக்கடிகாரத்தைப் பார்த்த பொழுது நேரம் 11-25. பராமரிப்பில் ஈடுபட்டவர்எல்லோருக்கும் பொறுப்பாளர் சுதன் தேநீர் பரிமாறினார். அது தூங்கி வழிந்து கொண்டிருந்த எங்களை தட்டி எழுப்புவது போல் இருந்தது. தேநீர் பருகியதும் மீண்டும் பராமரிப்பாளர்களிடையே சுறுசுறுப்பு,

''சுதன்'' என்றழைத்தவாறு ஒரு பெண்தாதி வந்தார். அவரின் நடையில் எரிச்சலும் சுறுசுறுப்பும் காணபபட்டது. 'ராகவனை 28ஆம் வாட்டிற்கு மாற்றுங்கோ' எனக் கட்டளை இட்டு சுதனின் கையில் ஒரு கடதாசியும் கொடுத்து விட்டு அந்த தாதி திரும்பிச் சென்று விட்டார்.

'அண்ணா வெளியில நிக்கிற ஸ்ரெஜரை எடுத்தாங்கோ' இது அருகில் நின்ற பராமரிப்பாளருக்கு சுதனின் பணிப்பு. இதிலே அவனது பண்பும் மரியாதையும் தென்பட்டது. வாயில் சூடுபட்டு இருந்தவர் அருகில் வந்த சுதன் 'ராகவன் அண்ணா எழும்புங்கோ போவம்' என்று அந்தப் போராளியை எழுப்பினார். அப்போது தான் எனக்குப் புரிந்தது நான் பராமரித்தவர்களில் ஒருவர் ராகவன் என்ற பெயரை உடையவரென அந்த போராளி பட்ட துன்பங்களில் ஒன்றை ஒருகணம் நினைத்துப் பார்த்தேன். மெய்சிலிர்த்தது. என்னை விட்டுப்பிரிந்து சென்றார் அந்த ராகவன் என்ற போராளி.

பத்தாம் கட்டிலில் படுத்திருக்கும் போராளியை மாத்திரம் தான் பராமரிக்க வேண்டிய கடப்பாட்டில் இருந்தேன். அவரின் வலக்கால் பாதத்தில் காயம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதிலே கட்டப்பட்டிருந்த வெண்ணிறத்துணி செந்நிறமாய் மாறி இருந்தது. அவரது பெயரையும் அறிய எனக்கு ஆவலாக இருந்தது. ஆனால் அவர் தூககத்தல் இருந்து விடுபடவில்லை. அந்த வாட்டிலேயே அவர்தான் அமைதியாக இருந்தார்.

எனது கண்கள் அந்த வாட்டிலுள்ளமற்றையகாயப்பட்ட போராளிகள் பக்கம் திரும்பியது. எத்தனை பேர்! எப்படிப்பட்ட காயங்கள்! எனது நரம்புகளை தட்டியது போல் கணுக்காலில் இருந்து உச்சி வரை விறுவிறுத்தது

என்ன கொடுமை! பதின்நான்கு, பதினைந்து வயது மதிக்கக் கூடிய சிறுவன் தனது காலை இழந்தவாறு இரத்தம் தோய்ந்த கட்டிலில் படுத்திருந்தான். கண்களில் பொறி தட்டியது. ராகவன் படுத்திருந்த கட்டிலின் கம்பிகளை இறுகப்பற்றியவாறு கட்டிலிலே அமர்ந்தேன்.

அவசரமான ஆரவாரம் ''கீச் கீச்'' ஒலி பலமாகக் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தேன். பராமரிப்பாளரும் வேறு இயக்க உறுப்பினர்களும் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பெண்தாதி உரக்க சத்தம் இட்டுக் கொண்டு வைத்தியரை நோக்கி ஓடினாள்,

எதுவுமே புரியாத நானும் வெளியே ஓடினேன். பலதரப்பட்ட காயங்களுடன் போராளிகளை வாட்டின் வாயிலிற்கு கொண்டு வருகிறார்கள். அவரவரின் காயங்களுக்கேற்ப உடனடி சிகிச்சைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

'அண்ணா வாங்கோ' சுதன் என்னை அழைத்தான். தொடையினில் காயப்பட்டு இருந்த ஒரு போராளியை என்னிடம் ஒப்படைத்து'' தியேட்டருக்கு கொண்டு போங்கோ' எனப் பணித்தான். என் மனம் அங்கும் இங்கும்அலைந்தது, தியேட்டர் எங்கே இருக்கு? தெரியாது என எப்படிக் கூறுவது?

துரிதமாக செயல்பட வேண்டிய வேளையில் எனது கால்கள் அசைய மறுத்தன. 'எதுக்கும் வெளியிலகொண்டு போவம்' என மனம் கூறியதும் போராளி படுத்திருந்த ஸ்ரெஜரை உருட்ட ஆரம்பித்தேன். என் உடல் மட்டும் செயல்பட்டது. மனம் தியேட்டர் இருக்கும் இடத்தை கண்டு பிடிக்க துப்பு துலக்கியது.

'அண்ணாதியேட்டர் எங்கே இருக்கு' எனது வாய் மோப்ப நாய் போல் அங்கு வந்த ஒருவரிடம் பாய்ந்தது. அவர் வைத்தியசாலையில் பணி புரிபவர் ஆக இருக்க வேண்டும்.

''நேராப் போய் வலப் பக்கம் வாற பெண்டாலை திரும்பினோன்ன இருக்கு'' எனக் கூறியவர்கையாலும் திசையை காட்டிவிட்டு நடக்க ஆரம்பித்தார். என்றாலும் எனக்கு பயமாக இருந்தது ஆனாலும் அந்த போராளி வேதனையால் படும் அவஸ்தையைப் பார்க்க மேலும் பயத்தை ஊட்டியது, என்றாலும் ஒரு முரட்டு துணிச்சல் என்னை ஆட்கொண்டது. அன்றுதான் வைத்தியசாலையை முதலில் பார்க்கிறேன் எப்படி தியேட்டரை அடைவது, கால்கள் மெல்ல மெல்ல நடக்க ஆரம்பித்தன.

''அண்ணை கால் கழட்டுவினமோ இத்தனை வேதனைகளுக்கு மத்தியிலும் அமைதியாகக் கேட்டான் அந்தப் போராளி. அவனைப் பார்க்கும் போது அனுதாபமாக இருந்தது. எனக்கு என்ன தெரியும்? அவனை எப்படி ஏமாத்துவது? அதனால் அவனது தலையைக் கோதிவிட்டேன். என்னிடம் பதிலை எதிர்பார்த்து ஏமாந்து போனவன்முகட்டைக் பார்த்துப் கொண்டிருந்தான்.

ஓடும் ஸ்ரெஜரில் படுத்திருந்தவன்எழும்பி தன்காலைப் பார்த்தான். அவனது செயல் என்னை மிகவும் வருத்தியது. 'என்ன பார்க்கிறீங்கள்' இது எனது கேள்வி, 'காலைத்தான் பார்க்கிறன்' என வெறுப்போடு கூறியவன் தலைக்கு இரு கைகளையும் அணையாகப்பயன்படுத்தி மீண்டும் படுத்தான்.

''கால் கழட்டத் தேவை இல்லை. சின்னக்காயம்'' என நான் கூறி முடிக்கும் முன்னர் இல்லை அண்ணை கால் கழட்டினாத்தான்கெதியாய் மாறும் கெதியாய் சண்டைக்கு போகலாம் எனக் குறுக்கிட்டு கூறிய அவனது முகத்தில் ஒரு மகிழ்ச்சி தெரிந்தது.

எனக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. எங்களுக்காக எங்கடை பொருளை இழக்க விரும்பாத சனம் நாங்கள். ஆனா இவன் நாட்டுக்காக பிறருக்காக தன் காலைக்கூட இழக்க விரும்புகிறான் அதை நினைத்து மகிழ்கிறான் என்று எனது மனம் அங்கலாய்த்தது. ஒருநிலைப்பட மறுத்தது.

''தம்பி இவரை வோட்டுக்குக் கொண்டு போங்கோ. நான் இவரை தியேட்டருக்கு கொண்டு போறன்'' என ஒரு அண்ணா கூறி வேறொரு போராளியை என்னிடம் ஒப்படைத்தார் எனக்கு அதிசயமாய் இருந்தது'' எப்படி தெரியும் தியேட்டருக்குதான் என்டு?'' எனது மனம் கேள்வி கேட்டது. ''பல நாட் பழக்கமாய் இருக்கும்'' பதில் கூறி சமாதானம் ஆகியது.

புதிதாக ஒப்படைத்தவரை கட்டிலில் படுத்திவிட்டு அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். இடது தோள் பட்டையில் காயத்தின் அறிகுறி தெரிந்தது. சுதன் ஓடி வந்து ''இவருக்கு தண்ணி ஒண்டும் குடுக்க வேண்டாம்'' என்று கூறிவிட்டு சென்றார். அதற்கான காரணம் புரியாததால் எனக்கு முன் நின்ற பராமரிப்பாளரை வினாவினேன். அவரின் பதிலில் இருந்து மயக்கத்தில் உள்ளவருக்கு எதுவுமே கொடுக்கக் கூடாது என்பதை அறிந்து கொண்டேன்.

மயக்கத்தில் இருந்த அந்த போராளி களத்தில் நடந்தவற்றை புலம்பத் தொடங்கினான். அவன் சொல்கின்ற ஒவ்வொரு வார்த்தையையும் மிகஅவதானமாகக்கவனித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது நேரம் 2.17

''ரகு நீ எனக்கு பின்னாலே வா தலையைத் தூக்காமை வரவேண்டும்''? அந்த போராளியின் முணு முணுப்பின் ஆரம்ப கூற்று.

'சரி எல்லாரும் படுங்கோ' என்று கூறிவிட்டு முணுமுணுப்பு குறைந்தது.

மீண்டும் எப்போது கதைப்பான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

'எல்லோருக்கும் சொல்லிப் போட்டன். ரவுண்ஸ வீணாக்காமல் ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொருத்தரை விழுத்த வேணும். இயக்கத்துக்கு சனமே காசு தருதில்ல வேறை ஆர் தருவான் நாங்கள் தான்ரா நிதானமா நடக்க வேணும். அவங்களிட்டை இருந்து ஆயுதங்களைப்பறிக்க வேணும்'' என அன்பான குரலில் கூறினான்.

''டேய் கண்ணா! தொடர் பெடுத்துச் சொல்லு, பாலா அண்ணாவை வர வேண்டாம் எண்டு'' அவன் கால்களை அங்கும் இங்குமாக எறிந்து கூறினான். அதிலிருந்து களத்தில் அவன் பட்ட அவசரத்தையும் பாலா என்கின்ற போராளியின் வருகையை எதிர்க்கும் முறையையும் ஊகித்துஅறிந்து கொண்டேன்.

''அய்யோ வரவேண்டாம். வேண்டாம் எண்டா வாறாரடா. நாங்கள் விடமாட்டம் தானே ஏன் வாறார்?''

''டேய் எல்லாரும் கவர் எடுத்து படுத்திருங்கோடா. பாலா அண்ணை வரப்போறார். இந்த மனிசன் சொல்லுறதைக் கேக்காதாம கேக்காதாம ''

அவன் முணுமுணுத்துக் கொண்டு சிறிது நேரம் படுத்திருந்தான். நான் வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் அங்கும் இங்கும்திரும்பிப் படுக்கின்றான்.

''எத்தினை மணிக்கு வாறாரோ தெரியாது ஒருதரும் நித்திரை கொள்ளக் கூடாது'' எனக் கதைக்கத் துவங்கியவன்.

''அவன் (F)பிப்ரி எல்லாம் பூட்டிப்போட்டு நிக்கிறான்'' என்று உரக்கக்கூறினான்.

''நேசன் இஞ்சை வா'' என அமைதியாகவும் மெல்லமாகவும் கூறினான். அந்த வார்த்தைகளுடன் அமைதி தோன்றியது.

எனது சிந்தனை முழுவதும் அவன் பேசியவற்றை மீட்டுக் கொண்டிருந்தது. இவன் ஒரு குழுத் தலைவனாக இருக்க வேண்டும் என எண்ணினேன். அவனது கட்டளைகள் அவ்வாறுசிந்திக்க வைத்தது.

''டேய் பதுங்கி வாடா'' மீண்டும் அவனது குரல் என் சிந்தனை கலைந்தது. என் கண்ணும் காதும் அவன் பக்கம் திரும்பியது.

''எல்லாருக்கும் சொல்றன். பாலா அண்ணை வந்து நிற்கேக்க சுட்டுச் சத்தம் கேட்டா நாங்கள் அவரைக் கட்டிப் பிடிப்பம். நாங்கள் சாகலாம். அவர் சாகக்கூடாது. அவர் சாதிக்க கனக்க கிடக்கு. அவர் சாகக்கூடாது .....'' என்ற கனத்த குரலில் கூறியவாறு அடங்கினான்.

அவனின் இந்த வார்த்தை என்னை நிலை தடுமாற வைத்தது. தன்னுயிரை விட தனது பொறுப்பாளரின் உயிர் பெரிதென்னும் பண்பும் அவரில் இருந்த பற்றும் அந்த வார்த்தையில் தென்பட்டது.

''டேய் எல்லோரும் படுங்கோடா. பொம்மர் சுத்திறான்.'' என உரக்கக் கட்டளை இட்டான். ''டேய் ஏன்ரா எழும்பிறே. படடா எனயாரே ஒருவரை அதட்டிக் கூறினான். அதைக்கேட்டதும் பொம்மர் சுற்றுகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது ஆண்டு நிறைவு

# செய்தி வேட்டை

## ஒரு செய்தியாளரின் அனுபவங்கள்

**சசிகரன்**

"செய்திகள் சேகரிப்பதென்பது சுலபமான காரியமல்ல. போராட்டக்களத்தில் செய்தி சேகரிக்க முற்படும்போது உயிரைப் பணயம் வைத்தே சேகரிக்க வேண்டி வரும். முக்கியசெய்திகளைஅறியஎப்போ விடியும் என ஏங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய விரைவாக செய்திகளைத் திரட்டி வழங்க வேண்டும் என்ற சிந்தனையிலும் செய்திகளைச் சேகரிக்க வேண்டும்.

சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு தீரவிசாரித்துசெய்தியைச் சேகரிக்க வேண்டு மக்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் செய்திகளை வழங்க வேண்டும். உண்மையான செய்திகளை துணிந்து வெளிப்படுத்த வேண்டும். செய்தியாளர்களைப் பலர் விலைக்கு வாங்க முற்படுவர். அதற்கு இடமளிக்கக் கூடாது" இவ்வார்த்தைகள் கோட்டைக்குள் பல வருடங்கள் இருந்து கொட்டமடித்த சிறிலங்காஇராணுவத்தை விடுதலைப் புலிகள் விரட்டியடித்த பத்தாவது நாள். ஈழநாதம்மக்கள் தினசரியில் அலுவலக நிருபருக்கான நேர்முகப் பரீட்சைக்கு வந்த என்னை இன்முகத்துடன் வரவேற்று, சான்றிதழ்களைப் பார்வையிட்ட பின் பிரதம ஆசிரியர் எனக்குக் கூறியவை. அன்று இருந்த அசட்டுத் துணிச்சலில் இதை எல்லாம் ஒருசர்வசாதாரண விடயமாகக் கருதி பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

அன்று முதல் வலிகாமம் வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆரம்பமாகத் தொடங்கின. நீண்டநாட்களின் பின் மக்கள் மத்தியில் ஒருவித பதற்றம் நிலவிய காலகட்டம்அது. களத்துச் செய்திகளை சேகரிப்பதற்காக தெல்லிப்பளைப் பகுதிக்கு நியமிக்கப்பட்டேன். தொடர்ச்சியான ஷெல்தாக்குதல்களினாலும் விமானத் தாக்குதல்களினாலும் தமது வீடுகளைவிட்டு வெளியேறி கோயில்களிலும் உறவினர் வீடுகளிலும் மக்கள் தங்கியிருந்ததினால் அந்த நகரமே வெறிச்சோடிக் காணப்பட்டது.

வாகனங்கள் மற்றும் மக்கள் நடமாட்டங்களைக்கண்டாலே உலங்குவானூர்திகள் சரமாரியாக கலிபர் தாக்குதலைமேற்கொள்ளும் அந்த போர்ச் சூழலில் செய்தி சேகரிக்கும் ஆவலில் தெல்லிப்பளைச் சந்தியை நெருங்கிக் கொண்டிருந்தேன். விரைந்து வந்த இரண்டுகுண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீச்சுத்தாக்குதலை ஆரம்பித்தன. ஒன்றன்பின் ஒன்றாக நான்கு குண்டுகள் தெல்லிப்பளை பகுதிகளில் வீசப்படடன. மனம் பதைபதைத்த போதிலும் சற்றுத்தள்ளி இருந்த அரசமரத்தின் அடியில் பதுங்கிக்கொண்டேன். தமது தாக்குதலை முடித்துவிட்டு விமானங்கள்பலாலி நோக்கிப் புறப்பட்டதும் நான் சைக்கிளை எடுத்துக் கொண்டு குண்டுகள் வெடித்த திசை நோக்கிவிரைந்தேன். தெல்லிப்பளை அரசினர்மருத்துவமனையின் முன் சற்றுத்தள்ளி வெடித்த அக்குண்டினால் வைத்தியசாலையும்சுற்றுப்புறப் பகுதிகளும் சற்று பாதித்திருந்தன. அவற்றைக்குறித்துக்கொண்ட நான் தொடர்ந்து கட்டுவன் பகுதியைநோக்கிவிரைகிறேன்.

காடுபோல் காட்சியளித்த கட்டுவன் சந்திக்கு சற்று அருகில் இருந்த விநாயகர் ஆலயத்தின் முன்னால் இருந்தவீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. சனசஞ்சாரமே அற்றஅந்தப் பகுதியிலிருந்த போராளி ஒருவர் என்னை அழைத்தார். அவரை நான் நெருங்கியதும் அவருக்குப் பின்புறத்தே பத்திற்குமேற்பட்ட போராளிகள் போருக்குத்தயாராகிக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

இவர்களது காவலரணிற்கு சற்று முன்பாகவே அக்குண்டு வெடித்துள்ளதை உணர்ந்தேன்.

அப்போது அங்கு நின்ற ஒரு போராளி '' நீர் யார்? எதற்காக இங்கே வந்தீர்?'' எனக் கேட்டார். நான் ஈழநாதம் நிருபர். விமானத்தாக்குதல் நடந்ததால் அதுபற்றிய செய்தியைச் சேகரிக்க வந்தேன் எனக் கூறினேன். அவர் ''இப்ப நேரம் என்ன? தெரியுமா? எனக் கேட்டுக்கொண்டிருந்தபோதே பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்கள் தொடங்கின. அவை நாம் நின்ற இடத்திற்கு 200 மீற்றர் தூரத்தில் வீழ்ந்து வெடித்தன. எனக்கு அப்பொழுது தான் சற்றுப் பயம் வந்தது. அவர்கள் தமது காவலரண் பகுதியில் என்னையும் பதுங்குமாறு கூறினர். அங்கேயிருந்த போது விமானங்கள் மேலெழும் சத்தங்கள் கேட்டன பேரிரைச்சலுடன் விமானங்கள் மேலெழுந்து சென்றன.

அப்போது அவர்களது குழுத்தலைவர் என்னிடம் வந்து விபரங்களைக் கேட்டறிந்தபின் இன்னொருவரிடம் அழைத்துச் சென்றார். அப்போது உலங்கு வானூர்தி ஒன்று எம்மை நோக்கி விரைந்து வந்தது. அதைக் கண்ட குழுத்தலைவர் இந்த நேரம் வெள்ளைச் சேட்டைப் போட்டு வந்துள்ளீரே இது அவர்களுக்கு வடிவாகத் தெரியும் என்றார். நான் உடனே சேட்டைக் கழட்டி மடித்துப் பொக்கற்றுக்குள் செருகிக் கொண்டேன். நேரம் மாலை 6-30 ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போ வடக்குப் பக்கமாக இருந்து வந்த ஒரு போராளி வோக்கி மூலம் யாருடனோ தொடர்பு கொண்டபின் அண்ணே நீங்கள் போங்கள் இனிமேல் இங்கே வராதீர்கள். இது மிகவும் ஆபத்தான இடம். நீங்கள் வீணாகச் சாவைத் தழுவ முற்படாதீர்கள் எனக் கூறினார். அத்துடன் நான் திரும்பி வந்து காவலரண்பகுதியில் நிறுத்தியிருந்த எனது சைக்கிளை எடுக்க முற்பட்ட போது இடையே வந்த போராளியிடம் ஆமி எவ்வளவு தூரத்தில் நிற்கிறான் எனக் கேட்டேன். அந்த முடக்கில் நின்று பார்த்தால் அவர்கள் நிற்பது தெரியும் என்றார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அட ஆமி இவ்வளவு தூரம் நெருங்கி நிற்கும்போது கூட இவர்கள் பதற்றமின்றிச் சிரித்து மகிழ்ந்தபடி இருக்கிறார்களே என எனக்குள்ளேயே வியந்தபடி தெல்லிப்பளை நோக்கி விரைந்தேன்.

நேரடியாகத் தாக்குதல் செய்திகளையும் போர்முனை செய்திகளையும் முதல் தடவையாக எழுதப் போகிறேன் என்ற மகிழ்ச்சியில் பலமைல் தூரங்களை சில பத்து நிமிடங்களில் கடந்து ஈழநாதத்தை வந்தடைந்தேன்.

நான் இங்கு வருவதற்குள் நான் காவலரண் பகுதிக்குச் சென்ற செய்தி காரியாலயத்திற்குக் கிடைத்து விட்டது. என்னை அழைத்த முகாமையாளர் நீரா கட்டுவனுக்குப் போனது என்று கேடடார். நான் திகைத்து விட்டேன். (அதன் பின்னர் தான் அறிந்தேன் அவர்கள் அங்கிருந்து ஈழநாதத்துடன் தொடர்பு கொண்டு என்னை அடையாளம் கண்ட பின்னரே திரும்பிச்செல்ல அனுமதித்தனர் என்று) உமது உயிரைப் பாதுகாத்துக் கொண்டு உம்மால் எடுக்க முடிந்தால் எடுக்கக் கூடியளவு செய்திகளை எடும். கவனமாகப் போய்வர வேண்டும் என்றார். இது எனக்குரிய முதல் அனுபவம் என்பதுடன் ஒரு அசட்டுத் துணிச்சலும் என்றுதான் கூறவேண்டும். மறுநாள் அச்செய்தி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முன்பக்க செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டதைப்பார்த்துமட்டில்லா மகிழ்ச்சியடைந்தேன்

இதேபோல் ஒருநாள் கட்டுவன் பகுதியால் இராணுவம் மாவிட்டபுரம் பகுதியை நோக்கிமுன்னேறுவதாககிடைத்த செய்தி கேட்டு மாவிட்டபுரம்பகுதிநோக்கி சென்றேன். அப்போது அங்கே சீமெந்து தொழிற்சாலை பகுதியில் விமானக் குண்டு வீச்சு நடைபெற்றது அவற்றால் பெரிய சேதம் எதுவும் நிகழவில்லை அப்பகுதியிலிருந்துநான்மீண்ட போது உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலைல மேற்கொண்டபடி வந்து கொண்டிருந்தது யாருமேஇல்லாததால் சைக்கிளை போட்டுவிட்டுவீதியோர மதிலடியில் படுத்துவிட்டேன். அது நடத்திய தாக்குதல் வீதியின் நடுவே எனக்கு சில யார் தள்ளி துளையிட்டுச் சென்றது. நான் மயிரிழையில் உயிர்தப்பினேன். பதற்றத்துடன் எழுந்த நான் மின்னல் வேகத்தில் தெல்லிப்பளையை அடைந்தேன்

ஒருநாள் வீடுபார்க்க தெல்லிப்பளை பகுதிக்கு வந்த சிறுவன் ஒருவன் வீதியை கடக்க முற்பட்டபோதுமாவிட்டபுரம் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் அதன்சன்னம்சிறுவனின்இடது கையைத்துளைத்துச்சென்றது. சிறுவன் கதறியவாறு கீழே வீழ்ந்து விட்டான். ஓலையைக் கிழிப்பதுபோல் சத்தமிட்டவாறு சன்னங்கள் சந்தியை நோக்கி வந்து கொண்டிருந்தன. அருகில் யாரும் இல்லாததால் சுவர்க்கரை ஓரமாகச் சென்று சிறுவனை தூக்கிவந்து பாதுகாப்பான இடத்தில் வைத்து அவனது கையை அவனது சேட்டாலேயே கட்டிவிட்டு என் சைக்கிளில் ஏற்றிவந்து தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயப்பகுதியில் நின்ற அம்புலன்ஸ் வண்டியில் ஒப்படைத்தேன். ஏற்றிவரும் போதே அவர் பற்றிய செய்திகளைத் திரட்டிக் கொண்டேன்.

இராணுவ முகாம் மேலும் விஸ்தரிக்கப்படத் தொடங்கியதைத் தொடர்ந்து வசாவிளான் பகுதி முதல் கீரிமலை வரை செய்தி சேகரிக்கத் தொடங்கினேன். ஒரு நாள் கீரிமலை சிவன்கோயில் மீது விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் நேரடியாக அங்கு சென்று சேதவிபரங்களைத் திரட்டிவிட்டு கடற்படை நடமாட்டத்தை அவதானிக்கக்கடற்கரைப் பகுதியை நோக்கி பதுங்கிப்பதுங்கி சென்று பீரங்கிப்படகுகளின் நடமாட்டத்தை அவதானித்துவிட்டு திரும்பும் போது காபர் வியூ ஹோட்டல் பகுதிஏற்றத்தடியில் நின்ற இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது. இதன் போது நிலத்தில் தவழ்ந்து தவழ்ந்து வந்துவேட்டுகளில் இருந்து தப்பினேன்.

போராளிகளின் நினைவஞ்சலிக் கூட்டங்களில் செய்தி சேகரிக்கச்சென்றேன். பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே அவர்களுடைய உரையை விரைவாகவும் சுருக்கமாகவும் குறித்துக் கொள்ளவேண்டும். அப்போது காது உரையைச் செவிமடுக்க கை பதிவு செய்துகொண்டிருக்கும். பின்னர் அவர்களுடைய உரையை பத்திரிகைக்கேற்ற விதமாக மாற்றி சுருக்கி எழுதுதல் வேண்டும். பொருள் மாறக்கூடாது. பொருள் மாறினால் பின்னர் அவற்றால் ஏற்படும் பிரச்சினைகளுக்குப்பதிளிக்கமுடியாது

தொடர்ந்து அரச மற்றும் அரசுசார்பற்ற நிறுவனங்களில் செய்தி சேகரிக்கச் சென்றேன். முதல் நாள் நான் ஒவ்வொரு அதிகாரிகளிடமும் சென்று என்னை அறிமுகம் செய்த போது மிக அன்பாக வரவேற்று செய்திகளை அள்ளித் தந்த அதிகாரிகள் நாளடைவில் என்னைக் கண்டதும் முகத்தைச் சுளிக்கத் தொடங்கினர். பின்னர் இன்று விசேடமாக எதுவும் இல்லையே, பெரிதாக எதுவும் இல்லை. நான் அவசரம் வெளியே போக வேண்டியுள்ளது போன்ற வார்த்தைகளே அவர்களிடமிருந்து எனக்குச் செய்தியாக வரத்தொடங்கியது. இதற்குக் காரணம் அவர்கள் போடவேண்டாம் போட்டால் பிறகுசனங்களோடை சரியான பிரச்சினை என்று கூறிய செய்திகளை நான் மக்களுக்காக துணிந்து வெளியிட்டதுதான். ஆயினும் ஏதோ ஒருவழியாக அவர்களிடமிருந்து செய்திகளைக் கறந்து வந்துவிடுவேன். உண்மைகள் என்றும் கசப்பானவை என்பதற்கு இவர்களது செயற்பாடுகள் சான்றுபகரும்.

இவ்வாறு கடந்த காலங்களில் செய்தி திரட்டுவதில் நான் பெற்ற அனுபவங்களை எனது பத்திரிகைத் துறை வளர்ச்சியில்ஒருபடிக்கல்லாகக் கொண்டு செயற்படவுள்ளேன்.

DHL உங்கள் கடிதங்களை
பாதுகாப்பாக உலகம் முழுவதும்
எடுத்துச் செல்கிறது
உங்களின் நண்பன்
DHL தபால் சேவை
D. H. L. INTERNATIONAL
C/o Cosmos Marketing Services
120, (200) K. K. S. Road,
Jaffna.
DHL WORLDWIDE EXPRESS
(சி/3943)

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# அரை நூற்றாண்டாக பத்திரிகை விற்பனை செய்யும் மருதப்பு

பத்திரிகை வழி வியாபாரிகளில்அனுபவஸ்தராகக்கருதப் படும் பரமாத்தியர் மருதப்பு கடந்த அரைநூற்றாண்டுகாலமாக தமிழ், ஆங்கில பத்திரிக்கைகள் விற்றுவருகிறார்.

1920 ஆகஸ்ட்25ஆம் திகதி புங்குடுதீவில் பிறந்த மருதப்புவை அறிந்தவர்கள், அவரை 'மருதப்பர்'என்றுதான் அழைக்கிறார்கள். புங்குடுதீவில் ஆரம்பவகுப்புவரை படித்த மருதப்பு, குடும்ப நிலை காரமாக 1936 இல் வேலைதேடி யாழ்ப்பாணம் வந்தார். நகரத்தில் இவருக்கு வாய்த்த பலம் இவரது அண்ணன் சரவணமுத்துதான். அண்ணன் வழியில் தம்பியும் தம்பித்துரை புத்தகக் கடையில் சேர்ந்து கொண்டார். அன்று முதல் இவரது பத்திரிகை வியாபார அனுபவம் ஒரு கதையாக விரிகிறது. ஆனால் மருதப்பர் தனது வியாபார அனுபவங்களைப் பதிவுசெய்து கொள்ள விரும்பாத சந்தோஜி.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பத்திரிகை வியாபாரத்தில் வாழ்ந்து வரும் மருதப்பர் ''சும்மா இருக்கக் கூடாது என்று இப்போது இந்த வியாபாரம்'' என்கிறார்.

காலையில் ஐந்து மணியிலிருந்து நான்கு, ஐந்து மணி நேரம் தனக்கே உரியகோலத்தில் சைக்கிளில் நகரைச் சுற்றி வரும் மருதப்பரை இன்று அவரது 72ஆவது வயதுவரை யாழ்ப்பாணத்து மழையும், வெய்யிலும் காப்பாற்றியுள்ளன.

புங்குடுதீவிலிருந்து இடம் பெயர்ந்து வந்து எனது இரு மகன்மாரும் குடும்பத்துடன் என்னுடன் தான் இருக்கிறார்கள்'' என்று வாழ்க்கைச் சக்கரத்தில் அவர்களையும்



சேர்த்து இழுத்துச் செல்லும் மருதப்பரை-சும்மா சொல்லக் கூடாது -சைக்கிளில் அவர் செய்யும் பத்திரிகை வியாபாரம் ஒரு போதும் அவரைக் காலை வாரியது கிடையாது.

1942இல் மருதப்பர் தனது இருபதுகளிலிருந்து யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியையும் கடந்து மல்லாகம், சுன்னாகம், உரும்பராய். ஊரெழு. அளவெட்டி என்றெல்லாம் சைக்கிளில் 'பத்திரிகை விநியோகம் செய்திருப்பதாகச் சொல்கிறம். மருதப்பர், ஐந்து சதத்திற்கு சுன்னாகத்தில் தேநீரும் சுண்டலும் சாப்பிட்ட காலமது என்கிறார்,

''இப்போது சந்திக்கு நாலு கடைகள். எல்லாக் கடைகளிலும் பேப்பர்கள்தொங்குது. விற்பனையைக் கூட்டுவது கஷ்டம். வருமானம் அப்படியும் இப்படியும்தான்'' என்று உள்ளத்தின் வேதனையை வெளிப்படுத்துகிறார்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், மற்றவர்கள் படிப்பதற்கு பத்திரிகை விற்கும் மருதப்பருக்கு எழுதப் படிக்கத்தெரியாது. 'மற்றவர்களிடமிருந்துகேட்டுத்தெரிந்து கொள்கிறேன்'' என்கிறார் எழுதப்படிக்கத் தெரிவது தான் அறிவென்பதல்ல. இதை மாத்திரம் வைத்துக் கொண்டு மருதப்பரை அளந்துவிட நினைத்தால் அது நமக்குத் தான் ஏமாற்றம்.

**- மதன்**



## முதலாம் பரிசு பெற்ற கருத்துப்படம்




இணையிலான்
இணுவில்

## பரத நாட்டியமும்

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லரமாக, நட்டுவனார் ஒப்புவிக்கும் அதே பதங்களுக்கும் உதிர்க்கும் சொல்லுக் கட்டுகளுக்கும் அதே ஆட்டங்களை ஆடிக்கொண்டிருப்பதைத்தான் காணமுடிகிறது அமைப்பு, காட்சிகள் வேறுவகைப்படலாம். ஆனால்சிருங்கார, ரஸமும், பதமும் ஒன்றே தான்.

நாட்டிய முறை இன்றைய சரித்திர நிர்ப்பந்த காலகட்டத்திலும் பழைமை மாற்றப்படாத, தெய்வசான்னித்தியம் வாய்ந்ததாகக் கொள்ளப்படும் நிலையிலேயே இன்றும் உள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப மாற்றம் எங்கு நிகழும்? அது நட்டுவனாரிலிருந்தா? அல்லது ஆடுபவரிலிருந்தா?

ஒரு கர்ண பரம்பரைக்கதையொன்று ஆந்திராவில் உண்டு. ஆந்திர சமஸ்தான அரசரின் அழைப்பின் பேரில் குச்சுப்புடி கலைஞர்குழு அரசஅவைக்குச் சென்று கொண்டிருந்தது. வழியில் குழுவரிச்சுமையாலும் ,பஞ்சத்தாலும் வறட்சியாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த கிராம மக்களைச் சந்திக்க நேர்ந்தது. அரசவையில் அந்தக் குழு, மகாராஜாவின் மனமகிழ்வுக்கு கிருஷ்ண சபதம்' ஆடவில்லை. அந்தக் கிராமத்து மக்களின் துயரங்களை ஆடிக் காட்டினார்கள். குறிப்பால் உணர்ந்த அரசன் மக்களுக்கு வேண்டிய நிவாரணம் வழங்கினான்.

இது கர்ணபரம்பரைக் கதை என்றாலும் எந்த உண்மையை வெளிப்படுத்துகிறது? தம் அனுபவத்தையும், சுயதரிசனத்தையும் வெளிப்படுத்துவது தான் கலை என்பதனைக் காட்டுகிறது. இன்று அவைகளில் ஆடப்படும் எமது பரத நாட்டியக் கச்சேரிகளில் ஈழத்து சமகால நிகழ்வுகள் இடம் பெறாதது விசனத்துக்குரியது.

பரத நாட்டியம் என்பது இப்போது யாழ்ப்பாணத்தில் சமூக அந்தஸ்துடன் சம்பந்தப் பட்டதாகக் கருதப்படுகிறது' சிலர் பக்தியைத் தவிர வேறு ஒன்றும் பரதத்தில் இல்லை என்று சத்தியம்செய்கின்றனர். இதில் வேறு பரிமாணங்களும் சமூகத் தேவைகளும் இருக், கிறது என்பதைவிசேஷமாகக் கவனிக்க மறுக்கிறார்கள்.

''நாம் கையாள விரும்பும் கலைக்கும், சமுதாயத்துக்கும் உள்ள உறவினைச் சரியாகப் புரிந்து கொண்டு அதனடியை தெளிவாகும் கோட்பாட்டினை அடித்தளமாகக் கொள்ளும்போது தான் ஆக்க பூர்வமான கலையில் ஈடுபட முடிகின்றது.'' (காலந்தோறும் நாட்டியக் கலை) என்கிறார் கார்த்திகா கணேசர்.

★

## ஆழமாக வேரோடிய ஈழநாதம்

**- புதுவை இரத்தினதுரை -**

ஈழநாதமே!
உனக்கு இரண்டு வயதா?
ஆழமாக வேரினைப் பாய்ச்சி
அகலமாகவே கிளைகளைப் பரப்பிய
ஈழநாதமே
உனக்கு இரண்டு வயதா?

தமிழரின் அடிமை விலங்கினை உடைக்கத்
தட்டிடும் ''சுத்தியல்'' ஆனாய்.
விடுதலைப் பயிர்கள் கருகிடா வண்ணம்
விழுந்திடும் ''மழை'' யென ஆனாய்.
பழந்தமிழ் வாழ்வை இளையவர் படிக்கப்
பள்ளியின் ''வகுப்பறை'' ஆனாய்.
பொய்களைச் சொல்லிப் பிழைப்பவர் தன்னைப்
பொசுக்கிடும் ''தீயென'' ஆனாய்.

ஈழநாதமே!
உனக்கு இரண்டு வயதா?
ஆழமாக வேரினைப் பாய்ச்சி
அகலமாகவே கிளைகளைப் பரப்பிய
ஈழநாதமே
உனக்கு இரண்டு வயதா?

அன்னிய நாட்டின் அரசியற் போக்கை
அறிந்திட ''வானொலி'' ஆனாய்.
பாரத அரசு பண்ணிய கொடுமை
பார்த்திடக் ''கண்ணென'' ஆனாய்.
ஊரினைக் குடைந்து உண்மைகள் அறிந்து
உரைத்திடும் ''தூதுவன்'' ஆனாய்.
களங்களில் நின்ற புலிகளின் வீரக்
கதைகளின் ''பதிப்பகம்'' ஆனாய்.

ஈழநாதமே!
உனக்கு இரண்டு வயதா?
ஆழமாக வேரினைப் பாய்ச்சி
அகலமாகவே கிளைகளைப் பரப்பிய
ஈழநாதமே
உனக்கு இரண்டு வயதா?

யாழ். கோட்டம்
விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின்
ஆதரவில்
கலை, பண்பாட்டுக்கழகத்தினரின்
'உயிர்த்த மனிதர் கூத்து'
(நாடகம்)
சாந்தன் இசைக்குழுவினரின்
'போர்க்கால இராகங்கள்'
காலம் ; 23.02-1992 ஞாயிறு பி. ப. 6.00மணி
இடம் : அரியாலை சனசமூக நிலைய
காசிப்பிள்ளை அரங்கு
அன்பளிப்பு : ரூபா 10.00
(சி/3945)

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# பரத நாட்டியமும் எதிர்பார்ப்புக்களும்

ஈ. ஆர். திருச்செல்வம்

நடனத்தை Music of the foot என்பார்கள். இசைக்கு முந்தியது நடனம் என்பது பொது வழக்கு. பரிணாம வளர்ச்சிப் போக்கில் அறப் பழைய காலத்திலிருந்தே பிரதேச ஆட்ட மரபுகளும், பொது வழக்குகளும் ஒன்றிணைந்து பரதம் முகிழ்ந்தது. ஏலவே இருந்த நூலின் தொகுப்பு நாட்டிய சாஸ்திரம் என்று பரத முனியே கூறும்போது பரதத்துக்கு முன்னரே பல ஆட்ட வடிவங்கள் இருந்தன என்று துணியலாம். நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்படுகிற நாட்டிய வகைகள் ஆரிய-திராவிட வகைகள் என்கிறார் பேராசிரியர் இந்து சேகர். இந்து நாகரிகத்தின் தோற்றம் பற்றி ஆராய்ந்த மனோமோகன் கோஷ் அவர்களும் இதே கருத்தைக் கொண்டுள்ளார்.

பரதம் அங்க அசைவுகளைக் குறியீடாகக் கொண்டது. குறிப்படையாளக் கைச்சைகைகளைக் குறியீடாகக் கொண்டது தாந்திரிக சமயம் அத்துடன் தாந்திரிகம் சக்தி வழிபாட்டை முதன்மையாகக் கொண்டது அச்சரம் கீறுவது. கோலம் போடுவது தாந்திக சமயப் பண்பாகும். நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் ஆங்கீக அபிநயம் (மெய்ப்பாடுகள்) தாந்திரிகத்தில் இருந்து வளர்ந்திருக்க வேண்டும்.

பரம் பெரும்பாலும் அரச அவைகளிலும், அந்தப்புரங்களிலும், கோயில்களிலும், தனிப்பட்டவர்களின் இன்ப நுகர்ச்சி கருதியும் ஆடப்பட்டது. இது தென் இந்தியாவிலுள்ள பெண்களுக்கான ஒரு தனி நாட்டிய வகை(SOLO DANCE) என்று குறிப்பிடப்படுகிறது.சிலப்பதிகார மாதவியின் பதினொரு ஆடல்களும் தனி ஒருவரின் நிகழ்ச்சியாகவே மாறுகின்றது. ஒரு காலத்தில் இந்த ஆட்ட மரபைப் புரிந்தவர்கள் தஞ்சாவூர், காஞ்சிபுரம் கோயில்களுக்குச் சிவசாஸனம் செய்யப்பட்ட தேவதாசிகளாகும். தமிழ் நாட்டுக் கோயில்களில் இதைச் சதுராட்டம் என்று சொல்லுவார்கள். இதற்கான மரபுகள் யாவும் சந்தானந்தப் பிரகாசத்தில் காணப்படுகின்றன. சோழர் காலக் கல்வெட்டொன்றில் சதுரி மாணிக்கம் பற்றிய குறிப்பொன்று காணப்படுகின்றது.

## பரதமுனியும் பரதமும்

பரத நாட்டியத்திற்கு இலக்கணம் வகுத்த லஷ்ணகாரர் பரத முனிவர் என்பதே மரபாகும். இந்திய நாட்டியக் கோட்பாடு நூல்களில் நாட்டிய சாஸ்திரம் முக்கிய இடம் பெறுகிறது ஆனால், இதுவே நாட்டியம் பற்றிய முதல் சமஸ்கிருத நூல் என்று கருதமுடியாது பாணினி கி.மு. 4ஆம் நூற்றாண்டில் இயற்றிய அட்டாத்தியாயி(எட்டு அத்தியாயங்கள்) என்ற நூலில் வேறு நாட்டிய நூல்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. நந்திகேஸ்வரர் எழுதியதாகக் கருதப்படும் அபிநய தர்ப்பணம் என்ற நூலும் பரத நாட்டியம் பற்றிய முக்கிய நூலாகும் ஆயினும் பரத நாட்டியம் பற்றிய அதிகார பூர்வமான நூலாகக் கருதப்படுவது நாட்டிய சாஸ்திரமேயாகும். வடமொழியில் நாட்டிய சாஸ்திரத்துக்குப் பின்வந்த இசை நூல்களும், பிரதிமைக் கலை நூல்களும், நடன நாடக நூல்களும் பரதரையே தமது ரிஷிமூலமாகக் கருதுகின்றன. 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய சாரங்கதேவரின் சங்கீத ரத்னாங்கர, பரதரையே அதிகாரபூர்வமான ஆசிரியராகக் கருதுகிறது.

## சிலப்பதிகார மாதவியும் பரதமும்

சிலப்பதிகாரத்தில் மாதவி வழியாகக் கூறப்படும் ஆட்ட மரபை பரத நாட்டியம் என்று கருதலாம். பரதத்தில் இடம் பெறுகின்ற சிருங்காரரசமும், வர்ணமும் சிலப்பதிகார வரிக் கூத்துக்களில் காணப்படுகின்றன. சிலப்பதிகார மாதவி பொது மகளிர் குலத்தினைச் சேர்ந்த சதுரி என்பதால்சிருங்கார ரஸம் ததும்பும் 'வரி' களை ஆடிக் கோவலனை மயக்கினாள் இக் காலத்தில் சதுரிகளும் தங்களைச் சந்தைப் பொருளாகவே கருதினர். கோவலனும் மாதவியை ஒரு வியாபாரத்துக்குரிய பொருளாகவே கருதினான். வியாபார மூலதனம் முளைவிட ஆரம்பித்த காலமாதலால், சொத்துத் தகைமை அடிப்படையில் மாதவியைத் தனதுசொத்துடமையாக்கவே கோவலன் விரும்புகிறான். கோவலன், மாதவியின் ஆடலுக்கான நுகர்வோர் தளமாகப் பொதுமக்கள் இருப்பதை வெறுக்கிறான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

தனி ஒரு சதுரியின் ஆளுமையைச் சுற்றி வழிபாடு வளர்கிறது தனி ஒருவரின் ஆட்டத்தை வழிபடும் நிலை பரத நாட்டியத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டது. மாற்றம் மெல்ல ஏற்படுவதோடு, பிரமணிய மய மாக்கப்படுதல் அல்லது சமஸ்கிருத மயமாக்கப்படுதல் (SANKRITISATION) படிப்படியாக நிகழ்கிறது. இது வரலாற்று மாறுதல் நிலைஆகும். இக் காலப் பகுதியில்-சிலப்பதிகார காலத்தில் பொது மக்களுக்குக் கதை தழுவிய கூத்து மரபும், உயர்நிலைமக்களுக்கு சிருங்கார ரஸம் நிறைந்த ஆட்ட வடிவங்களும் வழக்கிலிருந்தன.

பல்வர் காலத்தில் (கி.பி. 300-900) தமிழ் நாட்டில் கற் கோயில்கள் தோன்றின கணிகைப் பெண்டிர்கோயில்வளாகத்தில்வைக்கப்பட்டனர்இராஜராஜசோழன் ஆட்சிக் காலத்தில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் மட்டும் 400 தேவ தாசிகள் காணப்பட்டனர். இவ்வாறு மக்களிடமிருந்து பரதம் அந்நியமாகி சமூகக் கட்டுமானத்தில் ஆதிக்கம் செலுத்திய கோயில்கள் வழியாக நிலவுடைமையாளரான ஆளும் வர்க்கத்திடம் சங்கமம் அடைந்தது. இப் பகைப்புலத்தில் பரதம் உயர் குழாம் தன்மை பொருந்திய (ELTIST CHARACTER) செவ்வியல்கலை (வேத்தியல் கலை) யாக மாறுகிறது நிலமான்ய கலாசார விழுமியங்களுக்கும், பிராமணிய மயமாக்கப்பட்ட தன்மைகளுக்கும் இசைவாக ஆடல் வகைகளும் அமைகின்றன. வாஸ்தாயனரின் காமசூத்திரம் என்னும் நூலில் இந்திராணி காமலீலைகளுக்கான ஆடல்களிலும், நிலைகளிலும் துறைபோனவள் என்று கூறப்படுகிறது. இதனடிப்படையில் பிராமணிய மயமாக்கப்பட்ட தஞ்சாவூர் காஞ்சிபுரம் கோயில்களில் சிருங்கார ரஸம் நிறைந்த ஆடல் பாடல்களை உயர் குழாத்தை நுகர்வோராகக் கொண்ட தளம் விரும்பி ஏற்றுக்கொண்டது.

ஒல்லாந்தர் ஆட்சிமுறை தமிழ் நாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை தமிழ் நாட்டில் சில திட்டுக்களை ஆக்கிரமித்தார்களே ஒழிய கேரளத்தில்தான் இவர்கள் ஆட்சி பலமாக இருந்தது. சந்திர நாகூர், பாண்டிச்சேரியில் ஆட்சி செய்த பிரான்சியர் ஆட்சிக்குப் பிறகு, ஆங்கிலேயரின் குடியேற்ற ஆட்சி காரணமாகத் தமிழ் நாட்டில் பண்பாட்டுத் தாக்கம் ஏற்பட்டது. நகர்ப்புறத்தில் மேற்கத்திய நாகரிகமும் வரலாற்றுத் தொடர் நிலை காரணமாகக் கிராமங்களில் சுதேசி நாகரிகமும் நிலவியது. இந்து சமயம் என்ற பெயரில் நாம் ஏற்றுக் கொண்ட பிராமணிய கலாசாரக் குடியேற்றம் தமிழ் நாட்டில் இருந்தது. இந்தத் தாக்கத்தின் மேல் குடியேற்ற நாட்டு ஆட்சி தாக்கம் படிந்தது. ஆங்கிலேயர் நிலமான்ய அமைப்பை முற்றாக அழிக்கவில்லை மாறாக, தமது வருமானத்திற்கான மூலகமாக நிலக்கிழார்களைப் பாவித்தனர். ஏற்கனவே உயர் குழாத்துடன்சமரசம்செய்துகொண்ட கலைகள் - சிற்பக் கலை, நடனக்கலை, இசைக்கலை ஆகியன அந்நியர் ஆட்சிக் காலத்தில் எதிர்ப்பியக்கமாக மாற்றமடையவில்லை. காரணம், நாட்டார் கலைகள் (பொதுவியல் கலை) போன்று எதிர்ப்பியல் தன்மை செவ்வியல் கலைகளுக்கு மிகவும் குறைவு.

## பரத ஆட்ட மரபும் மாற்றமும்

இன்று முறைசார் நிறுவன அமைப்பின் கீழ் சாஸ்திரிய முறைப்படி பலர்பயிலும் பரத காட்டியவடிவம் அல்லதுதனிப் சுரதக் கச்சேரியின் அமைப்புபமார் இரண்டு நூற்றாண்டுநளுக்கு முன்னையதுஎனலாம். தஞ்சாவூர்க் கோயில் நட்டுவனார்களாக விளங்கிய வடிவேலு, பொன்னையா போன்றவர்களே இந்த மாற்றத்திற்கான காரணஸ்தராவர். ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூர் நட்டுவார்களாகப் பரம்பரையில் வந்த பந்தணை நல்லூர் சகோதரர்கள் நாட்டிய சாஸ்திர மரபுக்கேற்பவும், சிலப்பதிகார வரிக் கூத்தையும் அடியொற்றி இன்று புழக்கத்திலிருக்கும் தனியாட்ட மரபை உருவாக்கினர். இருந்தும் சமீப காலம் வரை இது தாசிகள் நடனமாகவே கருதப்பட்டது. 'மொகுடொச்சி பிலிசேடு' எனும் சிருங்கார ரசம் நிறைந்த பதத்துக்கே சதுரிகளும் ஆடினார்கள். பரதநாட்டியத்தில் பதம் என்று வரும் பாடல்கள் பாலுணர்வு சம்பந்தமானது பதங்களில் பாலுணர்வு நிலைகள்(Erotic)வெளிப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில்தாசி ஒழிப்பு இயக்கம் சதிராட்டத்தையும் ஒழித்துவிடக் கூடாது எனக் கருதிய கிருஷ்ணையர் சென்னை சங்கீத வித்துவசபையில் 1930 களில் முதன்முதலாக சதிராட்டத்தையும் சேர்த்துக்கொண்டார். சதுர் பரதமாக மாறியது. பரத நாட்டியத்தை சங்கீத வித்துவசபை அங்கீகரிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்காலகட்டத்திலும் உடல் உழைப்பிலிருந்து அந்நியமான உயர் குழாத்தினால் பரதம் போற்றப்பட்டதால் அது செவ்வியல் கலையாகவே தொடர்ந்து விளங்கியது.

தஞ்சாவூர் சகோதரர்களின் ஈசதிர்' ருக்மணி அருண்டேல், ப-கிருஷ்ணையரின் தயவில் ,ரதநாட்டியமாயிற்று. இன்று நாம்யாழ்ப்பாணத்தில்காணும் பரத நாட்டிய உருப்படிகள் தஞ்சாவூர் நட்டுவனார்களின் திறமையின்பயனாகவும், கலாஷேத்திரத்து ருக்மணி அருண்டேல் மற்றும் கிருஷ்ணையரின் முயற்சியாலும் பொலிவடைந்த ஆட்ட வடிவமாகும்.

இன்று யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் தனிநாட்டிய வகையில் (Solo Dance) பெரும்பாலும் பக்தியும் சிருங்காரமும் தான் காணப்படுகின்றன. இந்த அழுத்தத்தைப் பரதம் பெற்றதற்குக் காரணம் ருக்மணி அருண்டேல் தான்.

தமிழர் பண்பாட்டைப்பற்றி பேசுவதானால் நாம் பக்தி நெறியின்பண்பாட்டைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சமண, பௌத்த இயக்கங்கள் உயர் குழாத்தின் இன்பநுகர்ச்சிக்குப் பகைப்புலமாகவிருந்த ஆடல் - பாடல்களைத் தாக்கியதால் எதிர்ப்பியக்கம் அவசியமாகியது. கலைகளைப் பயன்படுத்தி பக்தி இயக்கத்தைப் பரப்பி சைவத்தையும், வைணவத்தையும் மீட்பது அவசியமாயிற்று. உயர் குழாத்தினரின் சமயத்திற்குள்ளேயே ஒரு புதிய அணுகுமுறையை-எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதற்குப் பரதம் பயனுள்ள ஒரு கருவியாக அமைந்தது. ஆனால் பக்தி என்று பரத நாட்டியகாரர்கள் இன்று கருதுவது சிவனையும் கண்ணனையும் குறித்து ஆடுவதுதான் என்று நினைக்கிறார்கள். பக்தியில் சிருங்கார ரஸம் எங்கெல்லாமோ 'சஞ்சரிக்க இடமளிக்கிறது. ஆனால் இவர்களால் புதிய பாதைகள் சாத்தியமாவதில்லை. பாலசரஸ்வதியைக் கேட்டால் சிருங்காரம்தான் பரதம் என்பர்.

எமது நாட்டியக்கச்சேரிகள், பரதநாட்டியத் தயாரிப்புகள் என்பன இராமாயணம், மகாபாரதம் போன்ற தொல்சீர் இலக்கியங்களிலும் சில காட்சிகளை உருவாக்கி அபிநயம் பிடித்து ஆடி பார்வையாளருடன் முடிவடைகிறது. ஒருமிறல், புதுமுயற்சிகளைக் காணமுடிவதில்லை.சமயஅனுபவத்தில் தன்னைச் சுற்றியுள்ள நிகழ்ச்சிகள் பற்றிய செயல்பாடுகளை நிகழ்த்திக் காட்டுவதில்லை. அரங்கேற்றத்துடன் அல்லது பதங்களுக்கு நடனமாடக் கற்றுக் கொடுக்கப்பட்ட நிலையிலேயேநிறுத்திவிடுவதுகலையாகாது. தான்பெற்ற கலையை வைத்துக் கொண்டு அனுபவங்களை, சமகால நிகழ்வுகளை எப்படி வெளிக்கொணர்வது என்பதில் தான் கலை நிருபணம் பெறுகிறது. எண்பதுகளின் பிறகு, பல வருடங்களாக தமிழ் ஈழத்தில் இடம் பெறும் நிகழ்ச்சிகளை நாட்டியத் துறையில் தகுதி பெற்ற ஒருவர் பரதநாட்டியம் என்ற மொழியின் வாயிலாக முன்வைத்தார்களா? காலம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

முதற் பரிசு பெற்ற கவிதை

## தேவை ஐந்துகோடி

பணம் என்றால் சேர்த்து விடலாம்
பொருள் என்றால் தேடி விடலாம்
உலகத் தமிழின் தொட்டிலாம் - ஆனால்
உரிமைக்குரல் எழுப்புவோர்க்கு
உதவிட உடனே தேவை
ஐந்து கோடி முதுகெலும்புகள்
வேடன் அம்பிற்குப் பயந்து
அடைக்கலம் தேடிய பறவைக்கு
சிறைக்கூடத்தைக் காட்டி விட்ட
சீர்கெட்ட மனிதற்குத் தேவை
ஐந்து கோடி சீரான இதயங்கள்
கழுத்து மாலைகளுக்கு
தலைகுனிந்து குனிந்து
இனத்தின் குரல் வளையை
மிதிப்பதை தவிர்க்க தேவை
ஐந்துகோடி நிமிர்ந்த தலைகள்
தாய்நாடு தாய்நாடு என்று
தம்பட்டம் அடித்து
சேய்நாட்டின் மழலைகளை
வாரியணைக்க மறுத்தவர்க்கு தேவை
ஐந்து கோடி அன்புக் கரங்கள்
யார் காலைக் கழுவினும்
பார் ஆளும் கதிரை கிடைக்குமென்றால்
சொந்தத் தமிழ் சோதரனை
எட்டி உதைக்க நினைக்கும்
எண்ணத்தைப் போக்கத் தேவை
ஐந்து கோடி நற்சிந்தனைகள்
கிடைக்குமா எங்கேனும்
அனுப்பி வைப்போம் அயல் வீட்டிற்கு!

- க. சிவராசா

-02.1992

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# சிறிலங்காவின் பொருளாதார தடையை சவாலாக எதிர் கொண்ட தமிழ்மக்கள்

1990யூனில் போர் ஆரம்பித்து சிறிது காலத்திலேயே தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கெதிராக தனியே இராணுவ நடவடிக்கைகள் ஒரு பொழுதும் வெற்றியைத் தரப்போவதில்லை என்பதை சிறிலங்கா அரசு தெளிவாக உணர்ந்து கொண்டது. இப்போராட்டத்தை முறியடிப்பதற்கு பொருளாதாரத் தடையை தீவிரமாக அமுல்படுத்துவதே இலகுவான வழி என்பதை சிங்கள பேரினவாத புத்திஜீவிகள் பலரும் சிறிலங்கா அரசுக்கு உணர்த்தியிருந்தனர். இதனால் 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மிகப்பெரிய யுத்தம் ஒன்றை ஆரம்பித்த அதே வேளை வடகிழக்குப் பகுதி மீது தீவிர பொருளாதாரத் தடையையும் அமுல்படுத்தியது.

இராணுவ பொருளாதார நெருக்கடிகளை சமகாலத்தில் தமிழ் மக்கள் மீது திணிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அழித்துவிடலாம் என சிங்கள அரசு கனவு கண்டது

காட்டு மிராண்டித்தனமாக பொருளாதாரத் தடையை அமுல்படுத்தியதுடன் இராணுவ நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டது. குறிப்பாக வடபகுதிக்கான அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விநியோகமும் தடுக்கப்பட்டது. சாதாரண மெழுகுவர்த்தி, சவர்க்காரம், கற்பூரம், தலையிடிக்குப் பாவிக்கும் பனடோல் மருந்து வில்லைகள் போன்றவற்றைக் கூட வடபகுதிக்கு எடுத்துவரமுயற்சிப்பவர்களை தேசத்துரோககுற்றம் இளைத்தவர்களாக கருதி சிங்கள இராணுவம் கைது செய்த் சிறையில் அடைத்தது. இவ்வாறு தீவிரமாக அமுல்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையினால் வடபகுதியின் அனைத்து அத்தியாவசிய சேவைகளும்பாதிக்கப்பட்டன இராணுவ, பொருளாதார நெருக்கடிகளையும் அவற்றின் மூலம் உருவாகிய விளைவுகளையும் கண்டு மக்கள் மிரண்டு விடவில்லை. நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க அஞ்சி ஓட்டம் எடுக்கவில்லை, மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்குண்டு விட்டோம் இதிலிருந்து எமக்கு மீட்சி என்பது கிடையாது என நடைப்பிணங்களாக மாறிவிடவில்லை, அல்லது மலேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றைப் போன்று வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்வதற்கு ஒரு றாத்தல் பாண் கிடைக்குமே என்பதற்காக போராட்டத்தையும், போராளிகளையும் எதிரியிடம் காட்டிக் கொடுக்கவோ அல்லது விடுதலைப்போராட்டத்திற்கு துரோகமிளைக்கவே, தமிழ் மக்கள் தயாராக இருக்கவில்லை. இனவெறி அரசின் அனைத்து நெருக்கடிகளையும், அடக்கு முறைகளையும் உடைத்தெறிவதற்கு துடித்தனர்.

அரசின் இராணுவ நடவடிக்கைகளை முறியடிக்கும் அதே வேளை பொருளாதாரத்தடைக்கும் அதன் விளைவுகளுக்கும் எவ்வாறு முகம்கொடுப்பது என்பதிலும், நீண்டகாலமாக நடைமுறையில் எடுத்து வந்த பொருளாதார வாழ்வுக்குப் பிரதியீடு தேடுவதிலும் இதன் மூலம் அரசின் பொருளாதார அடக்கு முறைகளை உடைத்தெறிவதற்கும் அனைத்து மக்களும் அணி திரண்டனர். பொருளாதாரத் தடை கொண்டுவரப்பட்ட குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே இதனால் உருவாகிய பல நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுக்கப் பழக்கப்பட்டு விட்டனர்.

**கணேஸ்**

உணவுப் பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டது உதாரணமாக யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அளவு உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படவில்லை. 40 வீதமான உணவுப்பொருள்களே மாவட்டத்திற்கு வெளியில் இருந்து எடுத்துவரப்பட்டது. மிகுதி 60வீதமானவற்றில் 30 வீதமானவையே உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்டது. மிகுதி 30 வீதமும் மக்களின் குறை நுகர்வு அல்லது பட்டினி நிலையினால் ஈடுசெய்யப்பட்டது. இது பொருளாதாரத் தடை நடைமுறைக்கு வந்த ஆரம்பகாலத்தில் இருந்த நடைஆகும். ஆனால்தொடர்ச்சியாக இவ்வாறு குறை நுகர்வுநிலையிலும் பட்டினிநிலையிலும் இருந்து காலத்தைஓட்ட வடபகுதி தமிழ் மக்கள் தயாராக இருக்கவில்லை. உள்ளூரிலேயே உணவுப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கு தயாராகினார்கள். கணிசமான அளவுக்கு உள்ளூர் உணவு உற்பத்தி அதிகரித்தது. 30 சதவீதமாக இருந்த உள்ளூர் உணவு உற்பத்தி படிப்படியாக அதிகரித்தது. இதனால்குறைநுகர்வு பட்டினி நிலை ஆகியவைபெருமளவு தவிர்க்கப்பட்டு வருகின்றது.

எரிபொருள்கள் மீதான தடையால் போக்குவரத்துவசதிகள் பாதிக்கப்பட்டன. இதனை ஈடுசெய்வதற்குதுவிச்சக்கரவண்டிகள்பயன்படுத்தப்பட்டது. இது வேகம் குறைந்த போக்குவரத்து சாதனம்என்றபோதிலும் கூட இதன் மூலம் தற்போதும் எதிர்காலத்திலும் சமுதாயமாற்றங்கள் ஏற்படுவதற்கு இது வழிவகுத்திருக்கிறது தற்பொழுது வடபகுதில் ஆண் பெண் இருபாலரும்ஆளுக்கொருதுவிச்சக்கரவண்டிஅவசியம் என்ற நிலைக்கு வந்துவிட்டனர். அத்துடன் தற்பொழுது வீதிகளில் எல்லாவயது சென்ற ஆண்கள் பலர் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வதைப் போல்வயது சென்ற பெண்களும் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்கின்றனர். பொருளாதார தடை நடைமுறைக்கு வந்த பின்னரே இவர்களில் பலர் துவிச்சக்கரவண்டி ஓட்டுவதற்கு பழகிக்கொண்டனர். சுயாதீனகணிப்பீடு ஒன்றின்படி வடபகுதியில் வாழும் சாதாரண பொதுமகன் ஒருவர் சராசரி நாளாந்தம்பத்துமுதல்இருபத்தைந்து மைல்கள்வரைதுவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்கிறார். இதன் மூலம்பொருளாதாரத்தடையின் மற்றுமொரு விளைவுக்குப் பதில் கூறப்பழக்கப்பட்டு விட்டனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கனத்த இரவு

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் காப்பரண் இல்லாத வெட்டை வெளியிலோ அல்லது பற்றைக்காட்டிலோ படுத்திருக்க வேண்டும் என எண்ணினேன். எனது கற்பனை வளர்ந்து சென்றது.

'' படுங்கோடா எங்களுக்குத் தான் குத்திறான்.'' என்ற அந்தப் போராளியின் உரத்த பரல் எனது கற்பனையைக் குலைத்தது. மீண்டும் அவன் பக்கம் ஐம்புலன்களும் திரும்பின.

''டேய் டேய் குத்தியிட்டான்ரா குத்தியிட்டான். படுங்கோடா அடுத்தும் குத்தப் போறான்.'' என்று கூறிய போது அதில் அவசரமும் ஒரு வித கோபமும் தென்பட்டது.

''ஐயோ என்ரை தோள்ள இரத்தம் எடா. கை தூக்க ஏலாமல் கிடக்கு. டேய் ரகு நான் காயப்பட்டிட்டன்ரா. நான் செத்தாலும் பறவாயில்லை உவங்களை அடிக்காமல் இந்த இடத்தை விட்டு அரக்குறேல்ல'' என அழுதான்

''நான் வரமாட்டன். உவங்களை அடிக்காமை வரமாட்டேன். கணா நீயும் போய் அவங்களோடை நிண்டு அடிபடடா உங்கடை வீரசாதனையை நான் பாத்திட்டு, நான் சாகிறன். நான் சாகிறன்.''

இவை எல்லாத்தையும் பார்த்தும் கேட்டும் சகிக்க முடியாமல் என் நெஞ்சு கனத்தது. உடல் உரம் ஏறியது. கால்கள் கடுகடுத்தன.

''டேய் என்ரை பிறண் உடைஞ்சு போச்சுடா. ஐயோ உடைஞ்சு போச்சடா எவ்வளவு கவனமாப் பாதுகாத்தன்ரா.''

''படுக்கேக்க கூட கைவிடமாட்டன்ரா. என்ர அம்மாவைவிட மேலை பாதுகாத்தன்ரா அதை உடைச்சுப் போட்டுப் போட்டாங்கடா ....''

''என்ரபிறன்உடைச்சவனை வெட்டாமை சாகமாட்டன். அதோடை எத்தினை பிறண் எடுக்கிறன் பார். செல்வா இது சத்தியம் எடா! இது சத்தியம்'' என்று விக்கி விக்கி அழுதான். ஒரு குழந்தைப் பிள்ளையைப் போன்று கட்டிலில் புரண்டு புரண்டு அழுதான். கட்டில் கம்பியை இறுகப் பற்றி உலுக்கினான்.

என் கண்கள் அவனையே வெறித்து பார்த்துக் கொண்டு இருந்தன. இதயம் பெரிதாகச் சுருங்கி விரிந்து கொண்டு இருந்தன. எனது கைகள் என்னையே அறியாமல் அவனது தலையை வருடின. எனது உடலை கயிற்றால் சுற்றி யாரோ இறுக்குவது போல் ஒரு பிரமை. அதிலிருந்து விடுபட நினைத்தேன். முடியவில்லை.

கதிரவன் தன் கடமையை ஆரம்பிக்க கையொப்பம் இட்டுக் கொண்டிருந்தான். இரவில் காவல் செய்த கருமுகில்கள் தமது இருப்பிடம் நோக்கி நடக்க ஆரம்பித்தன. பறவைகள் கூட்டம் யாக ராகங்கள் இசைக்கத் தொடங்கியது

அந்தக் கனத்த இரவு என்னைக்கதிகலங்க வைத்தது கால்கள் நடைபயில ஆரம்பித்தன. காரிருள் மேகம் எம் மண்ணைவிட்டு அகல விழுந்த வித்துக்களுக்கு நீர் இறைக்கின்றேன். மீண்டும் எழுவதற்காய்.

(முற்றும்)

## புதிய

(15-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான தேசங்களின் நலன்கள் வளர்ச்சிமிக்க நாடுகளின் நலன்களுக்குள் இரையாகிவிடும். ஆதலினால் இந்த இடைமாறு காலகட்டத்தில் இந்தப் பின்தங்கிய தேசங்கள் தமது நிலைக்குச் சரியானகளத்தைத் தேடவல்ல சிந்தனையை உருவாக்க வேண்டிய அத்தியாவசியம் உண்டு.

வெறும் பொருளாதாரவளர்ச்சிகள் மட்டும் மனிதனின்ஒளிமயமான வாழ்வைக் கொண்டு வந்து விடுவதில்லை. பொருளாதார வளர்ச்சிப் படிகளுக்கேற்ப மனிதன் தன்னை ஒழுங்கமைத்துப் பண்படுத்தியும் கொள்வதற்கேற்ற புதிய சிந்தனைகள் அவசியப்படும். ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனது ஏனைய வளர்ச்சி நிலைகளுக்கேற்ப வாழ்வை தத்துவார்த்த ரீதியில் வளம்படுத்த வேண்டிய புதிய தேவைகள் எழும். தத்துவார்த்த ரீதியில் மனிதனை வளம்படுத்தாது விட்டால் உலகில் ஏற்படும் வேறு எத்தகைய வளர்ச்சியும் பெருமைப்படக் கூடியவைகளாகி விடாது.

வளர்ச்சியடைந்த உலகம் என்று கூறப்படும் பகுதிபொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைந்திருந்தாலும்வாழ்வின் தத்துவ அடிப்படையில் அவையும் வறுமையிலேயேஉள்ளன. விஞ்ஞானம்– தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார வளர்ச்சிகள் அனைத்தும் கருத்தில் எடுக்கப்பட்டு ஒரு புதிய சமூகத்துவம் கண்டறியப்பட வேண்டிய தேவை மேற்குலகிற்கு உண்டு. பொதுவாக கோலோச்சும் மேற்கின் சிந்தனையானது சந்தைப்போட்டிக்குள் தன்னைச் சிக்கவைத்துள்ளது. உலகின் அனைத்து வளர்ச்சிகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் உள்வழங்கி முழு மனித குலத்திற்கும் சேவை செய்யக்கூடிய ஒருபுதிய தத்துவார்த்த சிந்தனை இப்பொழுதுஅவசியப்படுகின்றது. இது உலகளாவிய பொதுத் தேவை. இந்த இடைமாறுகால கட்டம் ஒரு புதிய உலகசிந்தனையைக் கோருகின்றது.

எப்படியோ இந்த இடைமாறு காலகட்டத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதார ரீதியில் தமது நலன்களை முதலில் ஸ்தாபித்து விடும் அவ்வாறு அவை அதனை ஸ்தாபித்து விடுவதற்கான அடிப்படைப் பலத்தைக் கொண்டுள்ளன. அவ்வாறு அவைஸ்தாபித்து விட்டாலும் கூட முன்னேற்றத்திற்கான மனிதனின் கருத்தியற் போராட்டங்களும் வாழ்நிலைப் போராட்டங்களும்தொடரும். அவை இறுதியில தம்மைநிலை நிறுத்திக கொள்ளும். ஆதலினால் எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு நிகழ்காலச் சிந்தனையை ஒழுங்கமைக்க வேண்டிய பாரிய பொறுப்பு முன்னேற்றம் அடைந்த நாடுகளை விட முன்னேற்றமற்ற நாடுகளைச் சார்ந்தவர்களுக்கே அதிகம் உண்டு.

ஆதலினால் பின்தங்கியநாடுகளைச் சார்ந்தோர் புதிய சிந்தனையின் பொருட்டு தம்மை அதிகளவு அர்ப்பணிக்க வேண்டும்.

## போரைத் தொடர்ந்து

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்து வந்துள்ளது. அதுதான் எமது மக்களின் சேமிப்பாகும்.

சேமிப்புஎனப்படும்பொழுது அது கால் நடைகள் நிலம் தொடக்கம் தங்க நகைகள் வரை வேறுபட்டுச் செல்லும். உண்மையில் சேமிப்புகளும் பொருளாதார தடைகளை எதிர்த்து நிற்க கணிசமான பங்காற்றியுள்ளன.

ஆனால் பொருளாதாரத் தடைகள் இதே அடிப்படையில் நீடித்தும்தீவிரமடைந்தும் செல்லும் பொழுது பாரிய நெருக்கடியை யாழ் குடா நாட்டு பகுதி தவிர்க்கமுடியாத வகையில் எதிர்நோக்க வேண்டியேற்படும். வட மாகாணத்தின் 5 நிர்வாக மாவட்டங்களிலும் குறைவான நிலப்பரப்பையும் குறைவான நில நீர் வளங்களையும் கொண்டது யாழ். குடா நாடாகும்

மறுபுறம் மக்கள் தொகையைப் பொறுத்தவரை யாழ் குடா நாட்டின் குடிசன அடர்த்தி சதுரகிலோ மீற்றர் ஒன்றிற்கு 839 பேராகஅமைந்திருக்க வன்னி மன்னார் பெரு நிலப்பரப்பில் குடிசன அடர்த்தி சதுர கிலோ மீற்றர் ஒன்றிற்கு 55 பேராகும்.

### சகலரும் உழைக்க வேண்டும்

இது ஓர் ஆபத்தான நிலைமையாகும். அண்மைக்கால மதிப்பீடு ஒன்றின்படி தேசத்தின் மக்கள் அனைவரும் சுய உற்பத்தியைமேற்கொண்டால் தேசத்தின் உணவுத்தேவையை நாம் ஈடுசெய்துகொள்ளலாம். நவீன வசதிகள் எதுவுமற்ற நிலையில் போதிய உணவைப் பெற்றுக்கொள்வதெனில் தேசத்தின் மக்கள் அனைவரும் நிச்சயம்உழைத்தேயாகவேண்டும்.

எமது தேசத்தின்மீது திணிக்கப்பட்ட சகல அழுத்தங்களையும் உடைத்து வெற்றி கொள்வதெனில் மக்கள் ஒவ்வொருவரும் உழைப்பில்ஈடுபடவேண்டும். நிவாரணமும் சிறுவியாபாரமும் போராட்டம் உச்ச வீச்சில் நடைபெறும் போது கைகொடுக்கப் போவதில்லை.

சகலவளமும் எமது தேசத்தில் உண்டு. விடுவிக்கப்பட்ட பெருநிலப்பரப்பு எம் வசம் உண்டு. தேசத்தின் இருப்பிற்காக அனைவரும் உற்பத்தியை மேற்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் தேசத்தின் இருப்பு எமக்கு முன்மாதிரியாகவேண்டும். எமது தேசத்தின் இருப்பிற்காக அனைவரும் மக்கள் பண்ணைகளில் ஒன்றிணைந்து உழைப்போம். சகல அழுத்தங்களையும் முறியடித்து தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

## இலங்கைக்கு

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது விரும்புகின்றது என்றே கூறலாம். எனவே ஒருபுறம் பிரேமாவைப் பாதுகாத்தல், மறுபுறம் இனப்பிரச்சினை சம்பந்தமாக சுமுக நிலை எனும் இரண்டிற்கும் நடுவிற்தான் மேற்குலகின் கொள்கையைப் புரிந்து கொள்ளலாம் எனக் கருதலாம்.

# இரண்டாவது ஆண்டு நிறைவு

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் --

# மேற்குலகம் உலகையாள கையாளும் ஊடகம்

நியூயோர்க் நகர தொலைக் காட்சிகளில் சில வருடங்களுக்கு முன்னர் விவரணச்சித்திரம் ஒன்று காண்பிக்கப்பட்டது அதனைப் பார்த்த மக்கள் பதற்றத்துடன் தெருவுக்கு வந்து அணு ஆயுதங்களுக்கு எதிராக கோஷம் எழுப்பிய வண்ணம் பெரும் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தனர்.

அந்த விவரணப்படம் நியூயோர்க் நகரம்மீது அணுகுண்டு வீசப்பட்டால் எப்படியான சம்பவங்கள் நடக்கும் என்பதை சிறந்த முறையில் விளக்கிக் காட்டியது. இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் அணுகுண்டை வீசியவர்கள் அராபிய உடை அணிந்தவர்களாகக் காணப்பட்டனர்.

இன்று 'இஸ்லாமிய அணுகுண்டு'பற்றி மேற்கு நாடுகள் மிகவும் பதற்றமடைந்து காணப்படுகின்றன. அவ்வாறான அணுகுண்டு ஒன்று உருவாகுவதை தடுத்தே தீருவது என்று கங்கணம்கட்டி நிற்கின்றன. மேலே சொல்லப்பட்ட விவரணம் மனோவியல் ரீதியாக நியூயோர்க் மக்களிடையே 'இஸ்லாமிய அணுகுண்டு'பற்றிய அச்சத்தை எவ்வளவு தூரம் ஏற்படுத்தியிருக்கும் என விளக்கத் தேவையில்லை.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மக்கள் மத்தியில் ஒரு கருத்தை வலியுறுத்தஎவ்வாறு உதவும் என்பதை இந்தச் சம்பவம விளக்குகிறது.

நவீன உலகின் தவிர்க்கமுடியாத தேவைகளில் ஒன்றாக இன்று வெகுசனத் தொடர்பு சாதனங்கள் காணப்படுகின்றன. நாளாந்த குடும்ப வாழ்க்கை தொடக்கம்உலகளாவிய ரீதியில் ஏற்படும் சம்பவங்கள் வரைஇந்த வெகுசனத்தொடர்பு சாதனங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இவை மக்களுக்கு செய்திகளைக் கூறுவதுடன் நின்றுவிடாது மக்கள்மத்தியில் கருத்துக்களை விதைப்பவையாகவும் கருத்துக்களை உருவாக்குபவையாகவும் விளங்குகின்றன சிறந்த முறையில் செயல்படுமாயின் இவை மக்களை வழிநடத்துவனவாகவும் அமையக் கூடியவை.

ஒரு சம்பவத்தை அந்தச் சம்பவம் உலகிற்கு நன்மையளிப்பது என்றோ தீமையளிப்பது என்றோதோற்றம்பெறச்செய்பவை இந்த வெகுசனத்தொடர்பு சாதனங்களே.

இவை நினைத்தால் ஒருவரை உலகின் உச்சிக்குக் கொண்டு சென்று அவரைஒரு அவதாரமாகக்காட்டவும் முடியும். அல்லது உலகிலேயே மிகவும் கீழ்ப்பட்ட மனிதனாகவும் காட்டமுடியும்.

முதலாவது அணுகுண்டு யப்பானின் மீதுவீசப்பட்டபோது ஒரு பத்திரிகை எழுதியது''யப்பானின் கொட்டம் அடக்கிய குட்டிப் பையன் (*Little boy*)'' என்று. உண்மையில் அணுகுண்டுயப்பானில் ஏற்படுத்திய விளைவுகளை கற்பனைசெய்து பார்க்கமுடியாத மனோநிலையைத்தான் அந்த நேரத்தில் மேற்கத்திய வெகுசனத்தொடர்பு சாதனங்கள் ஏற்படுத்தி வைத்திருந்தன.

பிரிட்டனின் ஆக்கிரமிப்பில் இருந்த மக்கள் கூட நினைத்தார்கள் யப்பான் ஒரு ஆக்கிரமிப்பாளன், பிரிட்டிஷ் ஒரு ரட்சகன் என்று இருவருமே ஆக்கிரமிப்பாளர்கள் தான் என்ற எண்ணம் பலரது மத்தியில் இருக்கவில்லை இவ்வாறாகதான்அன்று வெகுசனத்தொடர்பு சாதனங்கள் மக்கள் மத்தியில் கருத்தை விதைத்துவைத்திருந்தன.

**வேலவன்**

இன்று கூட மேற்கு நாடுகளின செல்வச் செழிப்புள்ள பக்கம்தான் எமக்குத் தெரிகிறதே தவிர அங்கு இன்னல்படும் மக்களின் துயரம் தெரியவருவதில்லை.

அமெரிக்கா என்றால் அங்கு பிச்சைக்காரனிடம் கூட இரண்டுகார்கள் உண்டு என்பது தான் பொதுவாக மக்களின் கருத்தாக இருக்கிறது. அங்கு பலலட்சம் மக்கள் வேலையில்லாது இருப்பதையோ வீடில்லாப் பிரச்சினையால் வீதிகளிலும் பூங்காவின் மரங்களின் கீழும் அட்டைப் பெட்டிகளினுள்ளும் படுத்திருப்பதையோ நாம் கற்பனை கூட செய்து பார்ப்பதில்லை. அவ்வளவு தூரம் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் தரும் செய்திகள் இருக்கின்றன.

மறுபுறம் மூன்றாம் உலக நாடுகளைப் பற்றி வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பார்வை முழுவதும், அவை வறிய நாடுகள், தெருவில் இறங்கினால் பட்டினியினால் கூக்குரல் இடும் மக்கள், இயற்கை அழிவுகள் என்பதை தவிர வேறெதுவும் இல்லை என்ற வகையிலேயே இருக்கின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் மேற்கத்தியவெகுசனத்தொடர்பு சாதனங்களின் கண்ணைக் கவரும் பகுதிகள் என்றால் சாவோபோலோ, பம்பாய், கல்கத்தா போன்றநகர்களிலுள்ள சேரிகள் தான். அவற்றை மிகவும் விளக்கமாக படம்பிடித்து தமது மக்களுக்கு காட்டுவதில் அவற்றுக்கு தனி மகிழ்ச்சி.

இவற்றைப் படம் பிடித்துக் காட்டுவது இந்த மக்கள் மீது கொண்ட அன்பினால் அல்ல.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த ஆண்டின் வெளிப்பாடுகள்

டுச் செயற்பாடு காணும் அளவிற்கு இந்திய சிறிலங்கா அரசுகளுக்கிடையே நெருக்கம் ஏற்பட்டது.

அதிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது பழிதீர்க்கவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும் முயன்று வரும் இந்தியஅரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தக் குண்டுவெடிப்பு சம்பவங்களைச் சாட்டாகப் பயன்படுத்திக் கொண்டது. இது தமிழகத்தில் விடுதலைப் புலிகளை ஒடுக்குவது என்பதில் ஆரம்பித்து கடற்பரப்பில் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்துவது என விரிவாகி தற்போது இலங்கையினுள் தலைவர்களைப் பிடிக்க வேண்டும் என்பது வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடற்பரப்பில் விடுதலைப் புலிகளைக்கட்டுப்படுத்துவது என்ற முயற்சியில் புலிகளுக்குச் சொந்தமான கப்பல் ஒன்றும் வழிமடக்கப்பட்டு அதில்பயணம் செய்தவர்களும் இந்தியக் கடலோரக் காவற் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

### அரசியல் நெருக்கடிகள்

கடந்து போன 1991 ஆம் ஆண்டு சந்தித்த அரசியல் நெருக்கடிகள் பலவற்றும். இலங்கைத் தீவில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் பாரிய மாற்றங்களுக்கும் வித்திட்ட பல சம்பவங்கள் இவ்வாண்டில் இடம்பெற்றன. மூன்றாவது உலகப் போர் மூளுமா? என்ற அச்சத்தை உருவாக்கிய வளைகுடாப் போர் முதல் எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக நிலைத்திருந்த சிவப்பு வல்லரசின் சிதைவு வரையில் பல முக்கிய சம்பவங்கள் இவ்வாண்டில் ஏற்பட்டன. இவற்றின் விளைவாக சர்வதேச அரசியலிலும் புதிய உலக ஒழுங்கு ஒன்றின் தோற்றம் கருக்கட்டியது. கெடுபிடிப்போர் முடிவடைய தேசிய இனங்களின் போராட்டங்கள் முக்கியத்துவம்பெறும் நிலைமை படிப்படியாகத் தோன்றிவருகின்றது.

இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறான அரசியல் அமைப்பு ரீதியான நெருக்கடி இந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் உருப்பெற்றது. சுமார் நாற்பது நாட்கள் வரை நீடித்த இந்த அரசியலமைப்பு நெருக்கடி சுவாரஸ்யமான பல வாதப்பிரதிவாதங்களை எழுப்பியது.

சுமார் நூற்றுப்பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை முன்மொழியச் சபாநாயகரிடம் கோரியமையுடன் இந்த அரசியலமைப்பு நெருக்கடி ஆரம்பமாகியது. இம்பீச்மென்ட் எனப்படும் இந்த அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆளும்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஆதரவு தெரிவித்தனர். சபாநாயகர் இந்த முன்மொழிவைப் பெற்றுக்கொண்டபோதிலும் இது தொடர்பாகப் பாராளுமன்ற விவாதம் நடத்தப்படுமா — வாக்கெடுப்புக்கு விடப்படுமா என்பன போன்ற கேள்விகளுக்கு உடன் பதில் கிடைக்கவில்லை. சபாநாயகரின் நிலை என்ன என்பது குறித்தும், சட்டநுணுக்கங்கள் குறித்தும் எழுந்த அரசியல் நெருக்கடிகள் தம்மைச் சந்தித்த நூற்றுப்பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தனர் என்ற சபாநாயகரின் அறிவிப்போடு தணிவுக்கு வந்தன.

இந்த நெருக்கடி நிலவிய காலத்தில் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் 1990 ஜூனில் சிறிலங்கா இராணுவம் புலிகளுடனான யுத்தம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து பதவி விலகியவர்களுமான யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பாராளுமன்றம் செல்ல ஆர்வம் காட்டினர். அவசரம் அவசரமாக அவர்களைக் கொழும்புக்குப் பிரேமதாசா அழைத்தபோது மீண்டும் புலிகளுக்கு அவர் உதவ முற்படுகின்றார் என்ற இனவாதக் கூச்சலையே எழுப்பியது. இதன் காரணமாக இப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு கேள்விக்கு உரியதாகிய நிலையில் தமிழ்மக்களின் ஜனநாயக ரீதியான உரிமையும் கேள்விக்குரிதாகியது. இதே வேளை இந்திய அரசு மேற்கொண்ட இராஜதந்திர நெருக்குதல்கள் இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தடையாக விளங்கியதை அவதானிக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் இடம் பெற்றன.

### தொண்டாவின் முயற்சி

ஆகஸ்ட் இருபத்தேழாம் திகதியன்று தலைவர் பிரபாகரனுக்கு அமைச்சர் தொண்டமான் கடிதம் எழுதியதிலிருந்து ஒரு புதிய சமாதான முயற்சிக்கு வித்திடப்பட்டது. கடிதப் பரிமாறுதல்கள் தொடர்ந்து அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் வருகை தருவதற்கான அரசியல் சூழ்நிலையும் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அடிக்கடி இந்தியாவிற்கு தனிப்பட்ட விஜயங்களை மேற்கொண்ட அமைச்சர் தொண்டமான் இந்தியப் பிரதமர் உட்பட பல வேறு தரப்பினருடனும் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். இவற்றின் அடிப்படையிலோ என்னவோ அமைச்சர் தொண்டமான் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தீர்வுத் திட்டம் என்ற பெயரில் சில யோசனைகளை முன்வைத்தார்.

அரசாங்கத்தின் மறைமுக ஆதரவு இத்தீர்வுத் திட்டத்திற்கு இருக்கக்கூடும் என்றே அரசியல் அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளும் இத் தீர்வுத் திட்டத்தில் முன்னேற்றகரமான- வரவேற்கத்தக்க அம்சங்கள் இருப்பதாகத் தெரிவித்தனர். எனினும் இத் தீர்வுத்திட்டம் நடைமுறைப் படுத்துவதில் இருக்கக் கூடிய சிக்கல்களைக் கருதியதாலோ என்னவோ அரசினதும், எதிர்க்கட்சிகளினதும் ஏகோபித்த அங்கீகாரம் தேவை என்ற சூழல் தோற்றுவிக்கப்பட்ட சூழலில் இத்திட்டத்தின் பகிரங்கமாக்கப்பட்டன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென இதனிடையே இனப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறியப் பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. மங்கள முனசிங்கா தனிநபர் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார். இதனையே சாக்காகப் பயன்படுத்திக் கொண்ட பிரேமதாசா அரசு அவரது தலைமையிலேயே ஒரு குழுவை அமைத்தது. ஏறத்தாழ இதே நோக்கத்திற்காகக் கூட்டப்பட்டு இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக இழுபடும் சர்வகட்சி மாநாட்டை அரசாங்கம் மறந்து போய்விடுவதற்கு இந்தப் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு வசதியான மேடையாகியது.

அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகள் தென்னிலங்கையில் இனவாதப் புயலாக வீசத் தொடங்கியுள்ளது பௌத்த மதபீடங்களிலிருந்து அரசியல்வாதிகள் ஈறாக அனைவரும் தமது எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்டிக் கொண்ட நிலைமையானது தமிழர்களின் நியாயமான அபிலாசைகளைச் சிறிலங்கா அரசாங்கங்கள் ஏற்றுக் கொள்வதற்கே தயாராக இல்லை என்பதைப் பகிரங்கமாக்கின.

சிங்கள அரசு ஏற்றுக்கொண்டாலும் சரி. ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் சரி தமிழீழ மக்களின் தேசியமானது நிலையானது, எவரும் மறுக்க முடியாதது என்று பல்லாயிரக் கணக்கான மக்களிடையே நின்று தலைவர் பிரபாகரன் பிரகடனம் செய்த நிகழ்ச்சி 1991-ம் ஆண்டின் முத்தமிழ் விழாவில் இடம்பெற்றது. ஒரு வருட காலத்திற்கும் மேலாக நீடித்து வரும் போர் தமிழீழ மக்களை எந்த வகையிலும் சலிப்படையச் செய்யவில்லை என்பதையும். தமிழ் மக்களின் தாகம் தமிழீழத் தாயகமாகவே இருக்கிறது என்பதையும் கடந்துபோன ஆண்டின் நிகழ்ச்சிகள் துல்லியமாக எடுத்துரைக்கின்றன. அத்துடன் சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை அங்கீகரித்து மதித்து நடத்தப் போவதில்லை என்பதை உணர்த்துகின்றது. மேலும் இந்திய அரசு தமிழ் மக்களைச் சிறிலங்கா அரசின் இராணுவ வெறிக்குப் பலியாக்க முனைந்து நிற்கின்றது என்பதும் தெட்டத்தெளிவாக்கப்பட்டுள்ளது.

★

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# இலங்கைக்கு அதிக நிதி வழங்கியமையின் இரகசியம்

## மேற்குலகின் இரு தலை நிலை

''இலங்கை அரசு மனித உரிமைகளை மீறுகின்றது. மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டால் நிதி உதவி நிறுத்தப்படும்'' இவ்வாறு நிதி வழங்கும் நாடுகள் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து கூறிவந்தன.

அத்துடன் ''இனப்பிரச்சினை சமாதானபூர்வமான முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும். அல்லது நிதி உதவி நிறுத்தப்படும்'' என்றும் கூறியதுடன் இனப்பிரச்சினையை சமாதானபூர்வமாகத் தீர்ப்பதற்கெனப் பல சமாதானத் தூதுக்குழுக்களை மேற்குலகம் இலங்கைக்கு அனுப்பி வைத்தன. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கத் தாம் தயாராக இருப்பதாக பல மேற்குலக நாடுகள் கூறின.

தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைச் சிங்கள அரசு புறக்கணித்த நிலையில், தென்னிலங்கையில் சமாதானத்திற்கான எதிர்க்குரல்கள் ஓங்கியிருந்த நிலையில் நிதி வழங்கும் நாடுகளின் கூட்டம் கூடியது. ஆனால் அந்தக் கூட்டத்தில் இலங்கை அரசு கோரியதையும் விட அதிகமான நிதி உதவி வழங்க நிதி வழங்கும் நாடுகள் முன்வந்தன.

அப்படியாயின் இதில் ஒரு பெரும்முரண்பாடுஉண்டு.உண்மையில் நிதி உதவியை நிறுத்தி இருக்க வேண்டிய அல்லது நிதியைக்குறைத்திருக்க வேண்டிய நிதிவழங்கும் நாடுகள் ஏன் இலங்கை கோரியதையும் விட அதிகமான நிதி உதவியை அளித்தன? மேற்குலகம்பேசும் சமாதானமும், சமாதானத் தூதுக்குழுக்களும் ஒரு வெளி வேஷமா? உண்மை என்ன? இவையே இன்று மக்களிடமுள்ள பிரதான கேள்விகள்.

நிதி உதவி வழங்குதல் என்பது உண்மையில் ஓர் அரசியல் நடவடிக்கையேயாகும். ஆதலினால் இதற்குரிய அரசியற் பின்னணியை ஆராய்ந்தால் இதற்குரிய தெளிவான விளக்கத்தைப் பெறுவது சாத்தியம்.

நிதி வழங்கும் நாடுகளிடம் இலங்கை பற்றி பின்வரும் அரசியற் தீர்மானம் உண்டு.அதன்படி இலங்கையில் ஸ்திரமான அரசாங்கம் பதவியில் இருக்க வேண்டும். அத்துடன் இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு ஓரளவு சமாதானத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதாகும்.

இலங்கையில் மேற்குலகத்திற்கு உகந்த அரசியற்-பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பது ஐ. தே. க. அரசாங்கமாகும். ஆதலினால் அத்தகைய கொள்கையைக் கொண்ட ஐ. தே, க. அரசாங்கத்தை சு. க. மற்றும் இடதுசாரிக்கட்சிகளின் பிடியிலிருந்து பாதுகாப்பது மேற்குலகின் தலையாய கொள்கையாகும்.

ஐ. தே. க. விலிருந்து பிரிந்த லலித், காமினி தலைமையிலான ஐ. தே. மு. வினது அரசியற்-பொருளாதாரக் கொள்கை பெருமளவுக்கு ஐ. தே. க, வினது கொள்கையையே ஒத்தது. எனவே சு,க. தவிர்ந்த ஐ. தே. மு. பதவிக்கு வருமாயின் அது மேற்குலகிற்கு உகந்ததாகவே அமையும்.

ஆனால் இந்த விடயத்தில் மேற்குலகு ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வருவதிற் சிக்கலுண்டு. அதாவது பொதுவாக ஐ. தே. க. வுக்கு 42% வாக்குகள் கிடைப்பது வழக்கம். ஆனால் ஐ. தே. க. இரண்டாக உடைந்துள்ள நிலையில் இந்த ஐ. தே. க. வோ அன்றி ஐ. தே. மு. வோ இரண்டும் பதவிக்கு வரக் கூடிய பெரும்பான்மையைப்பெறுவது சிலவேளை இயலாது போகலாம். அவ்வாறான ஒரு கட்டத்தில் அரசியல்ஸ்திரமின்மை தோன்றக்கூடும். எக்கட்சியும் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாத இடத்து இராணுவம் சிலவேளை ஆட்சிக்கு வரக்கூடும். இராணுவம் இலங்கையில் ஆட்சிக்கு வருவதை இந்தியா ஆதரிக்காது என்பதனாலும், இராணுவ ஆட்சிக்கு எதிரான அழுத்தத்தை மேற்குலகத்தின் மீது இந்தியா போடும் என்பதாலும், கெடுபிடி யுத்தம் முடிவடைந்துள்ள சூழலில் இராணுவ ஆட்சியை ஆதரித்து தமது நாட்டு மக்களுக்கு மேற்குலகம் நியாயம் கூறமுடியாது என்பதாலும் அதனையும் மேற்குலகம் விரும்ப முடியாது.

**சாரணன்**

எனவே இந்நிலையில் மேற்குலகத்திற்கு உள்ள ஒரே ஒரு பிடி பிரேமதாஸா அரசாங்கத்தைப்பாதுகாப்பதைத் தவிர வேறு இல்லை என்பதே. லலித், காமினி போன்ற ஐ. தே. மு. வினரது பிரதான கொள்கை பிரேமதாஸா அரசாங்கத்தை வீழ்த்துவதுதான் பிரேமதாஸா அரசாங்கத்திற்கு மேற்குலகம் நிதி உதவி வழங்காது விட்டால் நாட்டில் அபிவிருத்தியற்ற சூழலில் பிரேமதாஸாவை வீழ்த்துவது இலகு என்பதே லலித்தின் முடிவு. இதன் பொருட்டு நிதி வழங்கும் நாடுகளின் தூதரகங்களுக்கெல்லாம் லலித்ஏறி இறங்கி நிதி உதவி வழங்குவதை நிறுத்துமாறு கோரினார். பிரேமா கவிழ்ந்து அந்த இடத்தில் ஐ. தே. மு. பதவிக்கு வரமுடியாது போனால் அது மேற்குலகிற்குப் பெரும் பாதிப்பாக முடியும். இந்நிலையில் தெளிவற்ற ஓர் அரசியற் சூழலில் பிரேமதாஸாவைக் கவிழ்ப்பது ஒரு விஷப் பரீட்சையாகவே முடியும்.

அடுத்து வர உள்ள தேர்தலில் பிரேமாவைக் கவிழ்ப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ள லலித்-காமினி குழு காம் பதவிக்கு வருவது நிச்சயமற்றதாக இருக்குமேயாயின் பிரேமாவை வீழ்த்துவதற்காக சு. க. வுடன் பின்வருமாறு கூட்டுச்சேர வாய்ப்புண்டு அதாவது ஜனாதிபதி ஆட்சிமுறை பிழையானது என்றும், அதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் என்று சு. க. வுடன் ஓர் உடன்பாட்டிற்குப் போகலாம். சு.க. வைப் பொறுத்த வரையிலும் தாமும் பதவிக்கு வருதல் அனேகமாகச் சாத்தியமற்ற சூழலே உண்டு என்ற நிலையில் பிரேமாவைக் கவிழ்ப்பதில் லலித்- காமினி குழுவுடன் ஓர் உடன்பாட்டிற்கு வரலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுப் பிரதிநிதியை தேர்தலில் நிறுத்தாமையின் விளைவேபிரேமாவை ஆட்சிக்குக் கொண்டு வந்தது என்ற உண்மையை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ள சு.க. மற்றும்எதிர்க்கட்சியினர் எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ஆட்சி முறையைக் கலைப்பதற்கென்று ஒரு பிரதிநிதியைத் தேர்தலில் நிறுத்த வாய்ப்புண்டு. இது நடைமுறைக்கு வருகின்றதோ இல்லையோ இப்படியும் ஒரு சாத்தியக் கூறு உண்டு என்பதை உணரும் மேற்குலகம் எதிர்கால அரசியற் ஸ்திரமின்மையின் அபாயத்தை முன்னுணர்ந்து அதனைத் தவிர்க்கும் முகமாக பதவியில் இருக்கும் பிரேமாவையே பலப்படுத்த முயலலாம். இதன் வெளிப்பாடாகவே மேற்குலகின் இந்த அதிக பட்ச நிதி உதவியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்குலகிடம் இலங்கை பற்றிய ஓர் அரசியல் கணிப்பீடும் அரசியல் தீர்மானமும் உண்டு. அது இலங்கை அரசின் கணிப்பின் படியே நடக்கவேண்டும் என்றில்லை. பிரேமதாசா அரசாங்கத்தைப் பாதுகாக்க பிரேமா கோரும் நிதி போதாது என்பதை உணர்ந்துகொண்ட மேற்குலகம் தனது கணிப்பின்படி, பிரேமா கோரியதையும்விட அதிகமான நிதியை வழங்கியுள்ளது. இது தான் அரசியல்.

அதேவேளை இனப்பிரச்சினையை இன்றைய நிலையில் சமாதான பூர்வமாகத் தீர்த்துவைக்க மேற்குலகம் விரும்புகின்றதென்றே ஓரளவு கூறலாம். அதனைப் பிரேமாவிடம் வற்புறுத்தியும் உள்ளன. அதேவேளை பிரேமாவைப் பலவீனப்படுத்தி வீழ்த்துவதும் அவர்களுக்குப் புத்திசாலித்தனமாகப் படவில்லை. ஒருபுறம் பிரேமாவைப் பாதுகாப்பதும், மறுபுறம் இனப்பிரச்சினையை ஒரு சுமுக நிலைக்குக் கொண்டுவருவதும் என்ற இரு நோக்கு நிலையிற் காலூன்றியபடி மேற்குலகம் செயற்படுகின்றது எனலாம். கெடுபிடி யுத்தம் முடிவடைந்துள்ளமை மேற்குலகிற்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவு வளர்ச்சியடைந்து வருகின்றமை, இலங்கையில் இந்தியாவின் கரங்கள் பலவீனப்பட்டுள்ளமை ஆகிய அனைத்துப் பின்னணியிலும் வைத்துப் பார்க்கையில் இனப்பிரச்சினை ஒரு மிதநிலை அடைவதை ஓரளவு சுமுக நிலை தோன்றுவதை மேற்குலகம்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மேற்கு உலகை ஆள

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவைஏழைநாடுகள்என்பதாக காட்டுவதே இவற்றின் நோக்கம்.அவற்றின்வலிமை, புதிய முன்னேற்றங்கள் என்பன தமது மக்களைச் சென்றடைவதை அவைவிரும்புவதில்லை.

தமது சிறிய கண்டுபிடிப்புகளை கூட 'சுப்பர்' என வர்ணிக்கும் இவை மூன்றாம் உலகநாடுகளின் ஆராய்ச்சிகள் கண்டு பிடிப்புகள்பற்றி வாயே திறப்பதில்லை.

பொதுவாகஉலக அபிப்பிராயம் என்பது மேற்குலக நாடுகளின் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமே உருவாக்கப்படுகின்றன. இவை தமது நலன்களுக்கு ஏற்றவகையில் ஒவ்வொரு சம்பவத்தையும் வெளியிடுவதை அவதானிக்க முடியும்.

தமக்கு சார்பானவர்களை ஏற்றிப் போற்றுவதும் எதிரிகளைப் பயங்கரவாதிகள் என பிரசாரம் செய்வதும் இவற்றிற்கு கைவந்த கலை ஆகும்

குவைத்தில் ஈராக் செய்த அழிவுகளை புள்ளி விபரப்பட்டியலாக வெளியிட்ட இவை ஈராக்கில்அமெரிக்காவும்அதன் நேசநாடுகளும் செய்த அழிவுகளை கண்டும் காணாமல் விட்டுவிட்டன.

குரூஸ் ஏவுகணைகள் வளைந்து நெளிந்து சென்று பொது மக்கள் இருந்த பதுங்கு குழிகளை குறிதவறாது தாக்கிய விதத்தை வரைபடமாக காட்டிய இவை அந்தப்பதுங்கு குழிக்குள் கருகி இறந்த பொதுமக்களின் சடலங்களின் படங்களைத்தானும் வெளியிட முயற்சி செய்யவில்லை.

சீனா தியனமென் சதுக்க கொடுமைபற்றி விலாவரியாக வர்ணிக்கும் இவை ஈராக்கில் மணலில் நேசப்படைகளின் டாங்கிகளினாலும், புல்டோசர்களினாலும் மூடப்பட்ட ஈராக்கியரைப் பற்றிய செய்திகளையும் மூடிவிட்டன.

அதேவேளை வாட்டர்கேட் விவகாரம் ஈரான்கேட் விவகாரம் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் பாலியல் தொடர்பு போன்ற ஊழல்,ஒழுக்க விவகாரங்களை அம்பலப்படுத்தவும் தவறுவதில்லை

அதாவது உலகளாவிய ரீதியில் தமக்குச்சார்பானவற்றை மட்டும் பெரிது படுத்தி பிரசாரம் செய்யும் இவை உள்நாட்டில் ஊழலையோ, ஒழுக்கக் கேட்டையோ அனுமதிப்பதில்லை.

இந்தியாவில்சினிமாஎன்பது ஒரு சக்திவாய்ந்த வெகுசனத் தொடர்பு சாதனமாககாணப் படுகிறது. குறிப்பாக தென் மாநிலங்களின் தலைவர்களையே தேர்ந்தெடுக்கும் ஒரு விடயமாக திரைப்படத்துறை காணப்படுகிறது. இது மற்றைய பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற ஏனைய செய்தித் தொடர்பு சாதனங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்று இந்தியாவில் வெளிவரும் எந்த ஒரு ஜனரஞ்சகப் பத்திரிகையோ, சஞ்சிகையோ திரைப்படம் தொடர்பான செய்திகளைக் கொண்டிராது வெளிவருவதில்லை. இவை திரைப்படத்தில் நடிக்கும்-நாய் தொடக்கம் பெரிய நட்சத்திரங்கள் வரையிலான-எல்லோருடையதும் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான செய்திகளைக் கூட வெளியிட வேண்டிய நிலையில் உள்ளன. இதற்குப் பழம்பெரும் நிறுவனங்கள் தொடக்கம் ஜூனியர் நிறுவனங்கள் வரை எவையுமே விதிவிலக்கல்ல.

உண்மையில் சினிமா என்பது ஒரு வெறுக்கத்தக்க சாதனம் அல்ல. ஆரம்ப காலங்களில் சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படும் ஒரு சாதனமாகவே இது காணப்பட்டது. ஆனால் வியாபாரப் போட்டி இதன் சமூகத் தன்மையை மாற்றி இன்றைய நிலைக்குக் கொண்டு வந்து விட்டது

தயாரிப்பாளர்கள் 'ரசிகர்களின் விருப்பத்திற்கு திரைப்படம் தயாரிக்க' ரசிகர்கள் 'வேறுவழியின்றி' அதனைப் பார்க்க இன்றைய நிலைக்கு இந்திய சினிமாக்கள் வந்துவிட்டன.

இவை வன்முறைகளைக் கண்டிப்பது போல வன்முறைகளை வளர்க்கின்றன. ஒழுக்கம்பற்றி பிரசாரம் செய்வது போல ஒழுக்கக் கேடுகளை வளர்க்கின்றன.

இந்திய செய்திப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அரசியல் ரீதியில் செயற்படும்போது மேற்குலக பத்திரிகைகளுக்குச் சற்றும் குறைந்தவையல்ல.

ராஜீவ்காந்தியை 'மிஸ்டர் கிளீன்' என்று வர்ணித்துக் கொண்டாடிய இவை போர்பஸ் ஊழலையும், நீர்மூழ்கி பேரத்தையும் வெளிப்படுத்தி அவரைப் பதவியிறக்கவும் தவறவில்லை.

அத்துடன் 'வழிப்பறிக் கொள்ளைக்காரனைப் போல் இருப்பவர் எம். பி. என்றும் ஜேப்படித் திருடன் போல் இருப்பவர் எம். எல். ஏ.' என்றும் வர்ணிப்பவையும் அவைதான்

'விமானக்குண்டு வீசி வாக்குச் சாவடியைக் கைப்பற்றும்' சிறந்த ஜனநாயக முறைபற்றி அவை மக்களுக்குத் தெரிவிக்கத் தவறுவதில்லை

அதாவது தம்மைத் தாமே இகழ்வது என்பதுதான் இவற்றின் தனிப் பாணி.

இலங்கை 'சுதந்திரம்' அடைந்த காலம் தொடக்கம் ஆரம்பத்தில் இந்தியர்களுக்கு எதிராகவும், பின்னர் தமிழர்களுக்கு எதிராகவும் பிரசாரம் செய்ய சிறிலங்கா வெகுசனத் தொடர்பு சாதனங்கள் என்றும் பின்னின்றதில்லை.

இந்தியர்கள் வர்த்தகம் முழுவதையும் கையிலே வைத்திருக்கிறார்கள் எனவும் தமிழர்கள் அரச உத்தியோகம் முழுவதையும் கையில் வைத்திருக்கிறார்கள் எனவும் இவை புள்ளி விபரங்களுடன் பிரசாரம் செய்தன.

சிறிலங்காவின் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் அரசியல்வாதிகள் மூட்டிவிட்ட தீயிற்கு எண்ணெய் ஊற்றின. அவை மூட்டிவிட்ட இந்தியர், தமிழர் எதிர்ப்பு பிரசாரங்களில் இருந்து இனிமேல் அவற்றாலேயே மீளமுடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் நல்ல கருத்துக்களை வளர்க்க வேண்டிய வெகுசனத் தொடர்பு சாதனங்கள் இன்று அவர்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக மாறிவிட்டது. பல்வேறு தொழில் நுட்பங்களின் ஊடாக உலகத்தை ஒன்றிணைத்துச் செயற்படுபவையாக இருக்கும்போது அவற்றின் பொறுப்பும் கடமையும் மேலும் அதிகரிக்கும் என்பது வெளிப்படை.

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# தமிழீழப் பெண்களின் உரிமைகள் உணர்வுகள் இடர்ப்பாடுகள்

இன்று பொதுவாக பெண்கள் பற்றிய கருத்துக்கள் அவர்களுடைய செயற்பாடுகள் அவர்கள் உரிமைகள் தொடர்பான விளக்கங்கள் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றிய மதிப்பீடுகள் பல்வேறு மட்டத்தினரிடையேயும் பலவிதமான வாதப் பிரதிவாதங்களை கிளப்பியுள்ளன.

இதுஉலகப்பெண்கள் பற்றிய பொதுவான கருத்தமைவுகளாக இருந்தாலும் இன்று தமிழீழப் பெண்களின் பிரச்சினைகள் உரிமைகள் தொடர்பாக அவர்களின் முற்போக்கு நடவடிக்கைகள், சீர்திருத்தங்கள் எந்த அளவில் உள்ளது என்பதை நாம் அறிந்து மதிப்பிட வேண்டியது இன்றைய காலத்தின் தேவை எனக் கருதலாம்.

இன்று தமிழீழப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? இப்பிரச்சினைகளில் இருந்து அப்பெண்கள் விடுபடுவதற்கு வழிஎன்ன? பெண்கள் ஆண்களுக்கு நிகராக உரிமைகள் அனுபவிக்கின்றார்களா? இன்னும் பெண்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை பற்றி தமிழீழத்தில் வெளியாகும் எத்தனைசஞ்சிகை ஆக்கங்களில் இருந்து படித்திருக்கின்றோம். ஏதோ விரல் விட்டு எண்ணக் கூடிய ஆக்கங்களே வெளிவந்துள்ளன. இதிலிருந்து நாம்எதைப் புரிந்து கொள்வது?

தமிழீழத்தில் பெண்களுக்கு பிரச்சினை இல்லையா? அல்லது பிரச்சினை இருந்தும் அதை வெளிக்கொணரக்கூடிய அளவுக்குநம்மிடையே உள்ளபெண்களுக்கு ஆற்றல் இல்லையா? அல்லது தமிழீழத்தில் எந்தஒரு பிரச்சினையையும் குறிப்பிட்ட ஒரு குழுவினரே அணுக வேண்டும் என்பதையா?

இதற்கு விடை இறுக்கும் பொறுப்பும் தமிழீழப் பெண்களிடமே உள்ளது என்பதிலும் எதுவித தவறுமில்லை.

ஆரம்ப காலங்களில் முதலாளித்துவ நிலமானிய அமைப்பு முறையில் பெண்கள் பற்றிய மதிப்பீடுகள் சமூக மாற்றத்திற்கு ஏற்ப நெகிழ்வுத் தன்மையில்லாத மிகவும் இறுக்கமடைந்த நிலையிலேயே காணப்பட்டன. அதாவது மதக்கோட்பாட்டு ரீதியாகவும் பாரம்பரியக் கோட்பாட்டு முறைகள் சார்ந்தவைகளாகவும் பெண்ணானவள் சித்திரிக்கப்பட்டிருந்தாள். ஆணின் ஒரு நுகர்ச்சிப் பொருள்தான் பெண் என்ற கற்புக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே பெண்கள் பற்றிய மதிப்பீடுகள் கட்டிஎழுப்பப்பட்டிருந்தன.

இந்தக் கோட்பாட்டு ரீதியான தாக்கங்கள் இன்றும் பெண்கள் பற்றிய மதிப்பீடுகளில் தாக்கங்களை ஏற்படுத்தி வருவதனை பொதுவாக நாம் கண்டுணரலாம்.

பெண்கள் நாட்டின் கண்கள் என்பார்கள். ஆனால் சஞ்சிகை அட்டையிலும் ஆண்கள் சட்டையிலும் இன்று தொங்குவது பெண்கள் படமே. இன்று கவர்ச்சிக்காக பெண்களை படத்தில் மட்டும் பயன் படுத்தும் விளம்பரதாரர்கள் ஏராளம். சாதாரணமாக ஆண்புகைக்கும் பீடி விளம்பரத்திற்குக் கூட பெண்கள் படத்தை விளம்பரப் படுத்தும் கீழ்த்தரமான போக்கு இன்றும் உள்ளது. அண்மையில் பத்திரிகைகளில் பெண்களை அடகு வைக்கும் அவலங்களை சம்பவக் கோர்வைகளாகப்படித்திருப்பீர்கள்.

இதுபோன்றே குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காக வறுமையின் நிமித்தம் பெண்கள் வீடடில் விபச்சாரத்தொழிலை எவ்வளவு கச்சிதமாக நடத்துகிறார்கள் என்பதையும் சீதனக் கொடுமையினால் பெண்ணை வீட்டில் பூட்டி எரியூட்டும் சம்பவங்களும் இன்றும் பெண்களை அடிமைகளாக நிலைநிறுத்தும் பண்புகளும் இன்று வெவ்வேறு இடங்களில் ஏராளமாக நடைபெறுகின்றன. இது இந்த நிலமானிய அமைப்பு முறைகளின் பெண்கள் பற்றிய மதிப்பீடுகளின் தாக்கங்களாக அமைகின்றன.

ஆனால் இன்று தமிழீழப் பெண்கள் இத்தகைய இழிநிலைகளிலிருந்து விடுதலைஅடைந்து விட்டார்களா? என்பதை நாம் அறியமுற்படுதல் மிகவும் பொருத்தமானதாக அமையும்.

எமது தமிழ் நிலம் அந்நியப் படையெடுப்புக்களுக்கு உள்ளாகியபோது ஏதோ ஒரு வகையில் அந்நிய தாக்கம் எமது இலக்கியங்களிலும் எமது சமுதாயத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

அந்நிய வருகையினூடாக படித்த மத்தியதர வர்க்கத்தின் எழுச்சி ஆரம்பமாகிறது. படித்தவர்களின் மட்டம் அதிகரிக்க சமுதாயத்தில் முற்போக்கான சிந்தனைகளும் எழுச்சி பெற்றன. இதனூடு பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டும் பெண்கள் கல்வி வாய்ப்பைப் பெறவும் பெண்கள் பற்றிய மூடநம்பிக்கைகள் களையப்படடும் பெண் முதன்மைப்பட்டவளாக ஆணுக்கு நிகராக தொழில்பட ஆரம்பிக்கின்றாள்.

இருப்பினும் அந்நியகலாசார ஊடுருவல் எமது சமூக மட்டத்தில் பல பிறழ்வுகளை ஏற்படுத்தியது என்பதும் மறைக்கப்படமுடியாத ஒன்றாகவே இருந்துவந்தது.

இந்நிலையில் அந்நிய ஆதிக்கம் குறைவடைந்து விடுதலைப் போராட்டம் முனைப்படைய சமூக மட்டத்திலும் முன்னேற்றகரமான மாற்றங்கள் படிப்படியாக ஏற்படத்தொடங்கின.

ஆரோக்கியமான கருத்துக்கள் சீர்கெட்ட சமுதாயத்தைத் திருத்தி அமைப்பதற்கு ஏதுவாக அமைகின்றன. அதுவும் அக்கருத்துக்கள் பெண்களிடையே சென்றடைந்தால் முழு சமூகத்திடையேயும் சென்றடைந்ததாகவே கருதப்படும். எனவே சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததொன்றாகும்.

இன்று பெண்கள் தமிழீழத்தின் போராட்டத்துடன் இணைக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, தமக்குரிய உரிமைகளைக் கோரவும், தமக்குரிய இடர்ப்பாடுகளைப் போக்கவும் தற்றுணிவுள்ள ஒரு போராட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள். முனைப்படைந்த போராட்டங்களில் அவர்கள் வெற்றியும் கண்டுள்ளார்கள்.

சீதனப் போராட்டம் கடந்த சில ஆண்டுகளில் பெண்ணிற்கான சீதனங்கள் அமெரிக்க டொலரிலும், ஸ்ரேலிங் பவுணிலும் பேசப்பட்டு வந்ததனை நாம் கண்டோம். இதனால், பெண்ணைப் பெற்ற பெற்றோர் இந்த நிலை எங்கு போய்ச் சேரப் போகிறதோ என்ற அங்கலாய்ப்பிலும் இருந்தனர்.

ஈழத்தில் எதிரிக்குப் பயந்த ஒரு பகுதி ஆண்வர்க்கம் வேற்று நாடுகளுக்கு அகதி அந்தஸ்துப் பெற்று படையெடுக்கத் தொடங்கியது. இதே வேளை ஒப்பீட்டு ரீதியில் பெண்கள் ஈழத்தில் இருந்து கொண்டே எதிரியை எதிர்கொள்கின்ற வல்லமையைப் பெற்றனர். தமக்கு

செல்வி சி. மாலினி

இணையாக வாழ்க்கையில் பெண்ணை இணைத்துக் கொள்ள விரும்பிய ஆண்வர்க்கம் பெண்ணுக்கு டொலராக அனுப்பித் தனது செலவிலேயே அவளை மணம் முடிக்கும் ஒரு சீதன முறை ஏற்பட்டுள்ளது.

ஆண், பெண் பால் அடிப்படையில் வேலைப்பாகுபாடுகள் ஒரு காலத்தில் இருந்தன. இது பெண்களை இரண்டாம் பட்சமாக கருதுகின்ற சமூக அமைப்பை நிலை நிறுத்துவதாகவே அமைந்திருந்தது.

ஆனால், இன்று பொருளாதார சமூக நிலை காரணமாகப் பெண்கள் எந்த வேலையும் செய்யத் தயாராகவே இருக்கிறார்கள். முன்பு ஆறுமணிக்குப் பின்பு வீதியில் செல்லக் கூடாது. பெண்ணை ஆணுக்குப் பயந்தவளாகவும் அவளால் எதையும் செய்ய முடியாது என்றும் கருதினார்கள். ஆனால் இன்று இரவில் எல்லைக் காவல் கடமைகளிலும், சோதனைநடவடிக்கைகளிலும் பெண்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் அண்மையில் தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டடங்களைக் கட்டும் மேசன் தொழில் பயில்வதற்குப் பெண்கள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து அந்த நெறியைப் பயின்றனர் இது போன்றே பல தொழில்களில் இன்று பெண்கள் முன்னிலைப் படுத்தி வேலை செய்கின்றனர். இன்று வேலை செய்யும் பெண்களை ஆண்கள் மணம் செய்யு நிலையைப் பெண்கள் தோற்றுவித்துள்ளனர்.

இன்று வேலை செய்யும் பெண்களுக்கு இருக்கக் கூடிய இடைஞ்சல்களை சில உதாரணங்கள் மூலம் கூறலாம். இன்று பெண்களும் ஆண்களுக்கு நிகராக வாகனங்கள் செலுத்துகிறார்கள். இன்றைய போர்க்காலச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு போக்குவரத்து வசதியின்மை காரணமாக வேலை ஸ்தலத்துக்குப் பெண்கள் துவிச்சக்கர வண்டிகளிலேயே செல்கிறார்கள். சிலர் குறிப்பிடுகிறார்கள் பெண்கள் துவிச்சக்கரவண்டி பாவிக்கத் தொடங்கித்தான் இவ்வளவு விபத்துக்கள் என்று. ஆனால், இதற்கான அடிப்படைக் காரணங்களை அவர்கள் புரிந்து கொண்டால் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு ஆண்களின் பங்களிப்பு எத்தகையது என்பதனையும் அறிய முடியும்.

பெண்ணானவள் வீட்டிலும் வேலை செய்யவேண்டும். வேலை ஸ்தலத்திலும் வேலை செய்யவேண்டும். இவளுக்கு இங்கு இரட்டை வேலைப்பளு. ஆகவே காலையில் எழும்பி பெற்றோர் கணவன், குழந்தை என கடமைகளை முடிக்க வேண்டும். இதற்கிடையில் அவள் 8 30-க்கு வேலை ஸ்தலத்துக்கு விரைய வேண்டும். வீட்டில் இருந்து வீதிக்கு இறங்கும் பெண்ணானவள் குறிப்பிட்ட வேகத்தில்வேலை ஸ்தலத்துக்குவிரையவேண்டும். இதனால் அவள் தனது வண்டியின் வேகத்தைக் கூட்டுவது தவிர்க்க முடியாததாகும். ஆனால் ஆண் ஆணவன் எங்களுக்கு முந்தி இவள் செல்லலாமோ என்ற வரட்டு மனப்பான்மைதான் வீதி விபத்துக்கள் பெரும்பாலும் இடம் பெறுவதற்குக் காரணமாக அமைகின்றன இதில் பெண்களை மட்டும் தவறு சொல்வதில் பயனேதும் ஏற்படப் போவதில்லை. இங்கு பெண்ணுக்கு சமபலம் இல்லாமல் தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற குற்றச்சாட்டும் தவறானதாகும்.

எனவே இங்கு பெண்கள் பலம் குறைந்தவர்கள் என விஞ்ஞான ரீதியாக பலர்நிறுவ முயல்கின்றனர். நிறுவ முயன்றாலும் சம உரிமை எனக் கூறவரும் போது இந்த நிறுவுதல் அதற்கு ஒரு போதும் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது எனவே எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அங்கே பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதை காணலாம். இன்று ஈழத்தில் மருத்துவர்கள் பொறியியலாளர்கள், நீதிபதிகள், விஞ்ஞானிகள் (அவர்கள் வேற்றிடத்தில் கடமையாற்றினாலும்) என பலதரப்பட்ட வகைகளிலும் இருக்கின்றார்கள்.

ஆனால் எழுத்துத்துறையை பொறுத்தவரைக்கும் குறைவாகவே உள்ளனர் எனக் கூறலாம். திருமணத்திற்கு முன் எழுத்துத்துறையில் பிரகாசித்தபலர் திருமணத்தின் பின் அதைக் கைவிட்டு விடுகின்றனர். எழுத்து இவர்களின் வாழ்க்கைக்கு குறுக்கே நிற்கிறதா அல்லது கணவன் இதற்கு ஒத்துழைக்க மறுக்கிறாரா? எழுத்தை விடு அல்லது என்னை விடு எனும் கணவர்மாரின் அழுத்தமா? அல்லது சமூக ஈடுபாடுகள் பண்பாட்டு ரீதியாகச் சில இடர்ப்பாடுகளை பெண்களுக்கு உண்டு பண்ணுகிறதா? அல்லது கணவனிலும் பார்க்க மனைவி அதிகம் படித்திருக்கும் நிலையில் மனைவிக்கு சமூகத்தில் செல்வாக்கு ஏற்படும் பட்சத்தில் கணவனுக்கு உள ரீதியான தாக்கம ஏற்பட்டு குடும்பத்தில் பிணக்கு ஏற்பட்டு சில குடும்பப் பெண்கள் எழுத்தைக் கைவிடுகிறார்களா? என்ற பல கேள்விகள் மனதில் எழுகின்றன.

இளம் பெண் எழுத்தாளர்கள் ஏன் எழுதவில்லை? போதிய பயிற்சி இல்லையா? அல்லது போதியபயிற்சி இருந்தும் அதை வளர்த்தெடுக்க களம் இல்லையா? அல்லது இதை ஊக்கங்கொடுக்கக்கூடிய அளவுக்கு எமது சமூகப் பின்னணி இவர்களுக்கு இடம் கொடுக்கவில்லையா? எனப் பலதரப்பட்ட கேள்விகளுக்கு விடை காண முற்படுதல் பொருத்தமானதே.

இன்றுஎமது பிரதேசத்தைப் பொறுத்தவரை பெண்ணிலையை முதன்மைப்படுத்தி அவர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஆகவே எழுத்தாளர்களைப் பொறுத்தவரைக்கும் ஆண் ஆதிக்க வன்மைகள் குறைவடைந்தும் அவர்களுக்கு போதிய களம் இருந்தும் அவர்கள் பெண்கள் சார்பாக எழுதமுற்படவில்லை என்பதே எனது கருத்தாகும். ★

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# போரைத் தொடர்ந்த நெருக்கடியும் மக்களின் வாழ்க்கையும்

90 ஜூனில் தமிழீழ தேசத்தின் மீது சிறிலங்கா அரசினால் போர் திணிக்கப்பட்டது. முன்னைய நாட்களை விட ஒடுக்குமுறை தீவிரப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு தமிழீழக் குடி மக்களினதும் சமையலறை வரை ஒடுக்குமுறையின் தாக்கம் எதிரொலிக்கின்றது எமது தேசத்தில் மரணங்கள் எதிரியின் இராணுவச் செயற்பாடுகளினால் மட்டும் நிகழவில்லை, திட்டமிடப்பட்ட கொடூரமான பொருளாதார வாழ்வின் சீர்குலைப்பு வேலைகளினாலும் நிகழ்கின்றன. போஷாக்கின்மை, அரைப்பட்டினி, போதிய சுகாதார மருத்துவ வசதி இன்மை ஆகிய காரணங்களினால் குழந்தைகள் மத்தியில் இறப்பு விகிதம் அதிகரித்துச் செல்கின்றது. குழந்தைகள் மரணத்தைத் தழுவும் போதெல்லாம் இழப்பு பெற்றோருக்கு மட்டுமல்ல கூடவே தேசத்திற்குந்தான்.

எமது அழகான சிறிய தேசத்தில் மக்களைச் சமூக பொருளாதார, உளவியல், அரசியல் உட்பட அனைத்து வழிகளிலும் முழுமையாகத் தோற்கடித்துத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான களத்தையே அழித்துவிட பேரினவாத அரசு கங்கணங்கட்டி நிற்கின்றது. எவ்வித ''யுத்த தர்மங்களும் கண்டிப்பாகப் பேணப்பட மாட்டாது'' என்பதே எதிரியின் யுத்த தர்மமாய் உள்ளது.

மனித உரிமைகள் பற்றிப் பேசும் சர்வதேச நிறுவனங்களோ, உதவி வழங்கும் அரச சார்பற்ற சர்வதேச அமைப்புகளோ தமிழீழத் தேச மக்களின் துயர் துடைப்பதற்கு ஆற்றிய பங்கு அவற்றின் செயற்பாட்டு எல்லையுடன் ஒப்பிடும்போது போதியதல்ல. குறைந்த பட்சம் அரசின் கொடூரமான முகத்தை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்துவதிலாவது இன்னும் காத்திரமான பங்காற்றியிருக்கலாம்.

## இடம் பெயர்வு

90 ஜூன் போரைத் தொடர்ந்து மக்கள் தமது வாழ்விடங்களை விட்டுப் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்தார்கள் இந்த இடப் பெயர்வுகள் தென் தமிழீழத்தில் இருந்து வன்னி, மற்றும் யாழ் குடாநாட்டை நோக்கியும். வன்னி, மன்னார் பிராந்தியங்களிலிருந்து அப் பிராந்தியத்தினுள்ளேயே ஓரளவு வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய பகுதிகள், இந்தியா, மிகச் சிறிது தொகையினர் மலையகத்திற்கும் சென்றுள்ளனர். இன்னொரு இடப் பெயர்வு குடாநாட்டின் கரையோரப் பகுதிகளிலிருந்து உட்புறமாக ஏற்படுகின்றது.

இடம் பெயர்ந்தவர்கள் கூடுதலாக முகாம்களில் வாழ்கின்றனர். உறவினர்கள், மற்றும் வசதி படைத்தோர் முகாம்களுக்குச் செல்லாமல் வீடுகளில் வாழ்கின்றனர் முகாமில் வாழ்ந்தால் என்ன, வீடுகளில் வாழ்ந்தால் என்ன இவர்கள் உற்பத்தி வேலைகளில் ஈடுபடும் வாய்ப்பு அற்றுப் போய் விட்டது சிறு வியாபார முயற்சிகள், நிவாரணம் ஆகியவற்றை நம்பியே வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.

தமிழீழத் தேசத்தின் பிரதான தொழில்களான கடற்தொழில், விவசாயம், கைத்தொழில்கள், கால்நடை வளர்ப்புத் தொடக்கம் அரச மற்றும் தனியார் வேலை வாய்ப்புகள் வரை அனைத்துத் தொழில் வாய்ப்புகளும் பெரும் பாதிப்புக்குள்ளாயின.

## கடற்றொழிலில் பெரும் பாதிப்பு

இதில் கடற்றொழில் மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அழித்து விடும் முயற்சியில் எதிரி தோல்வி கண்டான். அவனது சினத்திற்கு முதலில் பலியானது கடற்றொழில் ஆகும். சிங்களக் கடற்படையினரால் தொழிலாளர்கள் கடலில் வேட்டையாடப்பட்டனர்.

சராசரி மீன் உற்பத்தி பாரிய வீழ்ச்சியடைந்தது. இதன் தாக்கம் முதன் முதலில் 1984இலேயே ஆரம்பித்தது. அன்றில் இருந்து இன்றுவரை கடற்றொழிலானது வருடா வருடம் பாதிப்படைந்தே செல்கின்றது மன்னார் பிராந்தியம், யாழ் குடா நாட்டுப் பகுதி, முல்லைத்தீவுப் பகுதி மற்றும் தென் தமிழீழப்பகுதியெங்கும் கடற்றொழில் கணிசமாகவே பாதிப்படைந்துள்ளது. இதன் பாதிப்புகள் இரு வகைப்படும். முதலாவது கடற்றொழிலாளர் மத்தியில் வேலை வாய்ப்பின்மை வருமானமின்மை, சொந்த இடத்தை விட்டு வெளியேற்றப்பட்டு முகாம்களில் வாழ்கின்ற நிலைமைகள் மறுபுறம் தேசந் தழுவிய அடிப்படையில் மீன் உற்பத்தியில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியானது. மோசமான போஷாக்கின்மை குறைபாட்டு நோய்களை ஏற்படுத்துகின்றது. இப்போதே போஷாக்கின்மையின் பாதிப்புகள் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார், குழந்தைகள் மத்தியில் அவதானிக்கப்படுகின்றன.

## விவசாயம்

அடுத்து எமது தேசத்தின் விவசாயச் செயற்பாடுகளும் திடீரென அமுலாக்கப்பட்ட எரிபொருள் உரவகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்களின் தடையினால் பாதிப்படைந்தன. மறுபுறம் இராணுவச் செயற்பாடுகளினால் விவசாயப் பிரதேசங்களை விட்டு மக்கள் வெளியேற்றப்பட்ட நிகழ்வுகளும் உற்பத்தியில் வீழ்ச்சியைத் தந்தன. யாழ் குடா நாட்டைப் பொறுத்தவரை வலிகாமம் வடக்கு வளமான விவசாய பிரதேசங்களும் தென் தமிழீழத்தின் வளமிக்க விவசாயப் பிரதேசங்களும் இராணுவ நடவடிக்கைகளினால் முழுமையாக விவசாயச்செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட பகுதிகளாகும்.

விவசாய செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் தனியே நில உடைமையாளர்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. அவர்களை விட மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் சொந்த நிலமற்ற விவசாயக் கூலிகளாவர். நில உடைமையாளர்களைப் பொறுத்தளவில் ஒரளவு பொருளாதார பலம் கொண்டவர்களாவர். மேலும் தமது தேவைக்கு குறைந்தளவில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். ஆனால் எவ்வித சேமிப்புகளும் சொத்துகளும் அற்ற அன்றாடம் உழைத்து வாழ்வோரே பரிதாபத்திற்குரியவர்களானார்கள்.

## கால்நடை வளர்ப்பு

மேலும் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகியவை யாழ். குடா நாட்டுப்பகுதியில் மிகப்பெரிய நெருக்கடியை எதிர் நோக்கின. கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் ஆகியன தடைப்பட்டுப்போயின. வன்னி, மன்னார் பிராந்தியங்களிலிருந்தான வைக்கோல் வருகையும் தடைப்பட்டுப் போனது. மறுபுறம் வடமாகாணத்தின் பெரு நிலப்பரப்பில் பசுப்பாலானது சந்தைப்படுத்தப்பட முடியாமல் போனது. யாழ் குடாநாட்டில் ஒரு போத்தல் பாலின் விலை ரூபா 12 ஆக இருக்க வன்னிப் பகுதியில் இது ரூபா 4 ஆக அமைந்துள்ளமை இந்த முரண்பாட்டை சுட்டிக்காட்டுகின்றது.

சுருக்கமாக போர்க்கால நெருக்கடியானது மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கங்களும் கடுமையான போஷாக்கின்மைப் பிரச்சினையும் முக்கியமானதொன்றாகும். மீனுணவு, பால், முட்டை ஆகிய பிரதான புரத உணவுப் பொருள்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் - இடப்பெயர்வுகளும் தொழிலிழப்புகளும் இந்நிலைக்கு பெரிதும் காரணமாயின.

## கைத்தொழில்

அடுத்து கைத்தொழில் துறையானது கடுமையான முறையில் பாதிப்படைந்தது. மின்சாரத்தடை, எரிபொருள் தடை, மூலப்பொருள் தடை என்பனவற்றுடன் செயலற்றுப்போன தொழிலகங்களால் பெருந்தொகையனோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பிழந்தார்கள். நிவாரணத்தை எதிர்பார்த்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டனர். சிலர் சிறு வியாபார முயற்சிகளிலும் வேறு ஒரு பகுதியினர் புதிய புதிய சுய சார்பு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

வாழ்வின் அனைத்து அடிப்படைகளையும் சிதைத்து அழித்துவிடும் நோக்குடன் செயற்பட்டு வரும் எதிரியின் திட்டங்களின் கடுமையை எமது தேசம் தாங்கியதற்கு தனியே நிவாரணத்தையும், சிறு வியாபார முயற்சிகளையும் மட்டும் காரணமாய்க் காட்ட முடியாது. இதை விட இன்னொரு முக்கியமான காரணியும் இத்தடைகளை எதிர்கொள்ள பேருதவி

(10ஆம் பக்கம் பார்க்க)

பிரேம்

# 'தர்சன் வா அம்மான்'

வதைக்கும். அந்த நேரங்களில் காலம் ஏதோ அசைவற்று இருப்பது போலிருக்கும். நேரம் ஏன் வேகமாக ஓடுதில்லை என்று மனதிற்கு சினமாக இருக்கும்.

அந்நேரங்களில் தான் - தர்சன் அனேகமாக வெளியே வருவான். அறையின் வாசலிலிருந்து பக்கச் சுவரை சற்று விலத்தி பதினான்கு அடி வைத்தால் வானொலி... அவன் பாடல்களில் மூழ்கிப் போவான்.

கண் வைத்தியத்தின் அதி சிறந்த நிபுணர்கள் எல்லாம் தர்சனை பார்வை இட்டனர். 'டோச் லையிற்'றின் வெளிச்சத்தை அவன் முகத்திற்கு நேரே பிடித்தபடி தெரிகிறதா? தெரிகிறதா? எனக் கேட்பார்கள்.

தர்சன் பார்ப்பான், இமைகளை வெட்டி வெட்டி உற்றுப்பார்ப்பான். எதுவுமே தெரியாது. இருந்தாற்போல தெரிவது போல அவனுக்குத் தெரியும் அவன் 'தெரியுது என தலையசைப்பான்' அனால், அது மனதின் வெறும் பிரமை என்பதை அவனே அறிவான்.

எல்லா மருத்துவர்களும் இறுதியில் ஒன்றையே சொல்லினர்.

'பார்வை தெரிவதற்கு சந்தர்ப்பமே இல்லை' அந்தச் செய்தி தர்சனை பெரிதாக ஒன்றும் பாதிக்கவில்லை. அதை ஏற்றுக்கொள்வதற்கு அவன் ஏற்கனவே தன் மனதைத்தயார்படுத்தி இருந்தான். அவனின் மனதில் நாட்டிற்கு செல்ல வேண்டும் என்ற ஆசை படரத்தொடங்கியது.

'முடியாது என்று செல்லி எவருக்குமே எதுவுமில்லை. எல்லா மனிதர்களாலும் ஏதோவொரு வழியில் போராட முடியும்- நாட்டுக்காக வாழ முடியும்' அவனின் மனதில் சிந்தனைகள் கோலமிடும்.

'என்னாலயும் முடியும் - போராட்டக் களத்தில் நிற்பதற்கு என்னால முடியும்' அவன் உறுதியாக முடிவெடுத்தான். அன்று தொடக்கம் நாட்டுக்குப் போக வேண்டும் என வற்புறுத்தத் தொடங்கினான்.

'தர்சனை நாட்டுக்கு அனுப்பவும்' செய்தி வந்தது தர்சன் மகிழ்ச்சியில் தன்னை மறந்து போனான். அவனுக்கு நன்றாக பழகிப் போன அந்தப் பழைய வீடு மறந்து போனது. வாசலுக்கு வருவதென்று ஜன்னலுக்கு போனான். வானொலிக்கு போவதென்று சமையலறைக்குப் போனான். அடிக்கடி ஏதாவதொன்றில் மோதி விழுந்து எல்லோரிடத்திலும் பேச்சு வாங்கினான்.

தர்சனைப்பார்த்து அந்த வீடே மகிழ்வில் திளைத்தது.

'' தர்சன் கரை தெரியுது அம்மான்'' என்றான் ஒரு தோழன்

அவனின் வார்த்தைகள் இதயத்தை ஊடுருவி அடி ஆழம்வரை சென்றது. ஆவலும் தாகமும் மேலெழுந்து படர்ந்தது உடல் படபடத்தது. இந்தக் காற்று இந்தக் கடல் எல்லாமே என்னுடையது' என்று கத்த வேண்டும் போலிருந்தது.

' கரையில வாடி வெளிச்சங்கள் தெரியுது'' என்றான் ஒருவன்.

'வாடி வெளிச்சங்கள்'

தர்சனுக்கு அந்த விளக்குகளின் ஒளி தெரிவது மாதிரி இருந்தது. அந்த ஒளி வரவர பெரிதாகி கண்ணை நிறைப்பது மாதிரி ஓர் உணர்வு...

''தர்சனை ஏத்தியந்தது தான் வழியில ஒரு பிரச்சினையும் வரேலை'' என்றான் படகோட்டிகளில் ஒருவன். எல்லோரும் சிரித்தார்கள். தர்சனும் சிரித்தான் இயந்திரங்கள் தங்கள் ஓசையை குறைத்துக் கொண்டன. அமைதியாக கரையைநோக்கிதளப்பமில்லாமல் அந்தப் படகு ஓடிவந்தது சிலர் கடலில் பாய்ந்தனர். படகை அசையாது பிடித்துக் கொண்டு கரையில் ஏற்றினர்.

தர்சனை தோழன் ஒருவன் கீழே இறக்கினான். கடல் தண்ணி கணுக்காலை மூடி நின்றது. வேறொரு தோழன் அவனை அழைத்துச் சென்றான்.

கடற்கரை மணலில் தர்சனின் கால்கள் புதைந்தன. இதயத்தில் மகிழ்ச்சி பரவிக் கிடந்தது - உடல் பல்வேறு நினைவுகளால் படபடத்தது. அந்த மணலில் நடக்க நடக்க ஆசையாயிருந்தது. அந்த மண்ணில் விழுந்து ஆசை தீரமுகம் புதைத்துக் கிடக்க வேணும் போலிருந்தது.

'இதிலை இருங்கோ-வாறன்' சொல்லிவிட்டு அவனை அழைத்து வந்த தோழன் விலகிச் சென்றான்.

தர்சன் மணலில்இருந்தான். குளிர் காற்று உடலை சில் என்று குத்தியது. மணலில் சாய்ந்து, தன் முனை உடைந்து விட்ட கைகளால் மண்ணைத் துளாவினான்.

என்ர மண்ணிலை நான் நிக்கிறன்' நினைவுகளால் நெஞ்சம் அதிர்ந்தது. மணலை கோல முடியாமல் கைகள் பழையபடி பழையபடி தோற்றன. இரண்டு கைகளையும் ஒன்றாக்கி மணலைக் கோலினான்.

சிறிதளவு மண் தேங்கியது. 'எல்லாம். இந்த மண்ணுக்காகத்தான்' அவன் வானத்தைப் பார்க்க நிமிர்ந்தான்.

'தர்சன் வா அம்மான்' தோழர்கள் அவனை அழைத்தனர்.

★

# இரண்டாவது ஆண்டு நிறைவு

# புதிய சிந்தனையின் தேவை

மு. திருநாவுக்கரசு

உலகம் இன்று ஓர் இடைமாறு காலத்திற்கு உட்பட்டுள்ளது. இவ்விடைமாறு காலகட்டம் பல்வேறு அம்சங்களில் இடம்பெற்றுள்ளது. உலகம் இரு முகாம்களாகப் பிரிந்திருந்த நிலைமாறி இன்று ஒரு குடைக்கீழ் வந்துள்ளது. பூமியின் ஒரு புறத்தில் கைத்தொழிற் புரட்சி தனது உச்சக் கட்டத்தை எட்டி கொம்பியூட்டர்–இயந்திர மனிதன் புரட்சியாக அடுத்த கட்ட வளர்ச்சியை எட்டியுள்ளது. விஞ்ஞானத்தை விஞ்சிய வேகத்தில் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது. முதலாளித்துவ சித்தாந்தமும், சோஷலிஸ சித்தாந்தமும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன. சோஷலிஸத்தின் ஒரு வகைமாதிரி சோஷலிஸத்திற் தோல்வியடைந்துள்ளது. இவை அனைத்தின் பின்னணியில் இன்று மனிதகுலத்தை மேம்படுத்தவல்ல ஒரு புதிய சிந்தனைத் தேடல் அவசியமாகின்றது.

கைத்தொழிற் புரட்சி தோற்றுவித்த புதிய சமூக நெருக்கடிகளுக்குத் தீர்வாக மாக்ஸிஸ–சோஷலிஸ சித்தாந்தம் எனும் புதிய சிந்தனை தோன்றியது. முதலாளித்துவ அமைப்பு தனக்கேற்பட்ட நெருக்கடிகளைத் தணித்துக் கொள்வதற்கும், தற்காத்துக் கொள்வதற்குமாக சமூக நலன் பேண் அரசமைப்பு எனும் ஒரு புதிய முறையைக் கண்டறிந்தது. ஏகாதிபத்தியங்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி ஒருபுறம் நாடுபிடி போட்டியாக அமைந்து பெரும் உலக யுத்தங்களைக் கொண்டு வந்தன. மறுபுறம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசியவிடுதலைப் போராட்டங்களும் தேசியப் புரட்சிகளும் ஏற்படலாயின. இதனால் தேசிய சிந்தனை ஒரு வளர்ச்சிச் சக்தியாக உருப்பெற்றது. ஆனால் இன்று தேசிய எல்லைகளை மையமாகக் கொண்டு அரசுகள் இருக்கின்ற போதிலும் மனிதனது நலன்கள் தேசிய எல்லைகளைக் கடந்தனவாய் உள்ளன. ஆதலினால் தேசியம் பற்றிப் புதிய பரிமாணத்திலான ஒரு புதிய சிந்தனையும் தேவைப்படுகின்றது.

ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில் '' தமிழ்த் தேசியவாதம் என்பது மிகவும் காலங்கடந்து தோன்றிய ஒன்று'' என்றகருத்தினை மிகுந்த துயருடன் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். அவ்வாறாயின் எமது சிந்தனையில் ஒரு பெரும் வெற்றிடம் உண்டு. இன்றைய நிலையில் தேசியம் என்பது எல்லை கடந்த நிலையில் நாம் சிந்தனை ரீதியாக ஒரு சாதாரண வளர்ச்சியடைந்தாற் போதாது. சிந்தனையில் ஒரு பெரும் பாய்ச்சலை எட்டவேண்டும். எமது முந்திய தலைமுறையினர் விட்ட வெற்றிடத்தையும் தாண்டி ஒரு புதிய பாய்ச்சலை எட்டவேண்டும்.

இந்த வகையில் சிந்தனை தொடர்பாக எமக்கு இரு பெரும் பங்குகள் உண்டு. ஒன்று உலகளாவிய ரீதியில் ஒரு புதிய சிந்தனையை உருவாக்க வேண்டியமை அல்லது அதற்கு முகம்கொடுக்க வேண்டியமை, இரண்டு, உலகளாவிய புதிய போக்குக்கும், புதிய சிந்தனைக்கும் ஏற்ப எமக்குப் பொருத்தமான வகையிலான ஒரு புதிய சிந்தனையை நாம் உருவமைத்துக் கொள்ளுதல்.

இதற்காக எமது தலைமுறை எதிர்நோக்கும் பாணிகள் பல. ஒன்று இருக்கும் பிழையான சிந்தனைப் போக்குகளை கைவிடல் அல்லது தகர்த்தெறிதல். இரண்டு காணப்படும் உலக யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளுதல். மூன்று புதிய சிந்தனைத் தேடலை உருவாக்குதல்.

ஒரு குறிப்பிட்ட சிந்தனையே வாழ்முறையாக இறுகிப்போன பின்பு அவற்றைக் கைவிடல் அல்லது தகர்த்தெறிதல் என்பது ஓர் இலகுவான காரியமல்ல. ஸ்தாபிதம் பெற்றுள்ள சிந்தனை வளர்ச்சிப் போக்குக்கு உகந்ததல்லாது இருக்கும் போது

அது எத்துணை கடினமான பாதைக்கூடாகவாயினும் உடைந்தே தீரும். ஆனால் ஸ்தாபிதம் பெற்றுள்ள சிந்தனையின் காவலர்கள் புதிய சிந்தனையின் வரவு அவர்களது நலன்களுக்குக் குந்தகமாய் அமையும் என்பதால் அவர்கள் அதனை உள்வாங்க முடியாது மறுப்பார்கள். இதனால் ஒரு பெரும் கருத்துப் போராட்டம் நிகழும். புதிய போக்குக்களை முதன்நிலைப் படுத்தும் மூலகர்த்தாக்கள் அவ்வக்காலகட்டத்தில் முதற்பலியாவார்கள். மரணங்களையோ, அல்லது துயரங்களையோ. அல்லது சொல்லொணாத் தியாகங்களையோ அவர்கள் ஏற்கவேண்டி ஏற்படும். இந்தவகையில் புதிய சிந்தனைகளையும் புதிய போக்குக்களையும் முன்வைத்த சோக்கிரட்டீஸ், கௌதம புத்தர், கால்மாக்ஸ், கொர்பசேவ் போன்றோர் உயிர்த்தியாகம் அல்லது பெரும் இன்னல் அல்லது பெருந்தியாகம் அல்லது பதவி-அந்தஸ்து இழப்பு போன்ற தம்தியாகங்களுக்கு உட்பட்டனர் என்பதே வரலாறு தரும் பாடம். ஆயினும் அவர்கள் அளப்பெரும் தியாகத்தின் மத்தியிலும் சமூக வளர்ச்சியின் மூலகர்த்தாக்களானார்கள். இறுகிப்போன சிந்தனையை உடைப்பது என்பது ஒரு போதும் இலகுவான காரியமல்ல.

அடுத்து காணப்படும் உலக யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல் எனும் இரண்டாவது அம்சத்தை எடுத்துக் கொள்வோம். உலகம் சமசீரற்றதும் நேரெதிர் முரண்பாடுகளைக் கொண்டதுமாகும். சில முக்கிய முரண்பாடுகளை நோக்குவோம். உலகின் ஒரு பகுதி கொம்பியூட்டர் - இயந்திர மனிதன் யுகத்தை எட்டியுள்ளது. மறுபகுதி சாதாரண கைத்தொழில் வளர்ச்சியைக் கூட எட்டாததாக உள்ளது. ஒருபகுதி அண்டவெளி ஆய்வுகளிலும் பிறகோணங்களுக்குச் செய்மதிகளை அனுப்புவதிலும் ஈடுபட்டுள்ளது. மறுபகுதி நிலத்தை உழுவதற்கான தொழில் நுட்பத்திற் கூட வளர்ச்சியற்றதாய் உள்ளது.

உலகில் மிகப்பெரும் அரசுகள் ஒருபுறமும், மிகச்சிறு அரசுகள் இன்னொருபுறமுமாய் உள்ளன. உலகின் ஒரு பகுதி உயர் உற்பத்தியின் பெயரால் கடலில் மாவைக் கொட்டுகின்றது. இன்னொரு பகுதி பஞ்சத்தாற் சாகிறது. ஒருபகுதி தேசியத்தின் வாசலைஎட்டிப்பார்க்கின்றது. மறுபகுதி சர்வதேச ரீதியாக தன்னை ஸ்தாபித்து விட்டு சர்வதேசத்தையும் கடந்து அண்டகோளம்வரை எட்டிப் பார்க்கின்றது. அதாவது ஒன்று தேசியத்தின் வாசலில் மற்றையது சர்வதேசியத்தையும்கடந்த அண்டப்பிரபஞ்சத்தின் வாசலில். உலகை ஒரு பகுதி ஆளுகிறது. மறுபகுதி ஆளப்படுகிறது.

இப்படியான இன்னோரன்ன முரண்பாடுகளினதும் ஏற்றத்தாழ்வுகளின் மத்தியிலும் வாழ்வுக்காகப் போராடவேண்டிய, எமது வாழ்வை நிலைப்படுத்தவேண்டிய அடிப்படைச் சிந்தனைகளுக்கு நாம் போயாகவேண்டி உள்ளது. எனவே இத்தகைய முரண்பாடுகளின் மத்தியில் உலகளாவிய ரீதிகளிலும், எமக்குத் தேவையான வட்டார ரீதியிலும் ஒரு புதிய சிந்தனையைக் கண்டறியவேண்டிய பணி எமது தலைமுறையினரிடம் உண்டு.

பழைய பாடவிதானங்களுக்குள் எமது அறிவைச்சிறைவைக்க முடியாது; சிறைவைக்கவும் கூடாது. எப்பெப்பவோ யார் யாரோ எல்லாம் எழுதிவைத்த கோட்பாடுகளுக்கு விளக்க உரைகள் வகுப்பது மட்டும்தான் அறிவியல் என்றும், வித்துவத்தனம் என்றும் நாம் பொதுவாக எண்ணுகின்றோம் (சில விதிவிலக்குகள் உண்டு) விளக்கவுரை வகுக்கும் உரையாசிரியத் தொழில் அறிவியலின் ஒரு பகுதி மட்டுமேதவிர, அதுவே அறிவியலாகிவிடாது. அறிவியல் என்பது கடந்தகால அறிவியலைக் கிரகித்துக்கொண்டு எமது பொருத்தப்பாட்டை விளங்கி அதற்கேற்ப பல புதிய சிந்தனை ஓட்டங்களை, பல புதிய கருத்துக்களை உருவாக்க வேண்டும். பொதுவாக அறிவியலின் எல்லா மட்டங்களிலும் அனேகமாக உரையாசிரியத் தொழிலையே அறிவியலின் கொடுமுடி என்று தவறாக நம்பும் மரபு எம்மிடம் பெருமளவு வேரூன்றியுள்ளதென்றே கூறலாம்.

எமது கண்ணுக்கு முன்னால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்த உலகம் மிகப் பிரமாண்டமானளவு மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. அரசியல், சமூகம், பண்பாடு மற்றும் சிந்தனை சார்ந்த சகல துறைகளையும் அதுபாதித்துள்ளது. உலகிலுள்ள ஒவ்வொரு அரசுகளும் உலகின் புதிய போக்குக்களை உள்வாங்கிக் கொள்வதிலும் தம்மை அவற்றிற்கு ஏற்ப இசைவாக்கம் செய்து கொள்வதிலும் இடையறாது ஈடுபட்டுள்ளன. இந்தப் புதிய சர்வதேச உறவை யார் ஸ்தாபிக்கிறார்கள்? ஸ்தாபிதமாகும் சர்வதேசஉறவுக்கேற்ப நிகழும் இசைவாக்கம்யாருக்குச்சேவை செய்யும்? முழு மனிதவர்க்கத்திற்கும் சேவை செய்யக்கூடியதாக, ஒடுக்கப்படும் அல்லது ஆளப்படும் மக்களுக்கு விமோசனத்தைத் தேடிக்கொடுக்கக் கூடிய சிந்தனையை எவ்வாறு உருவாக்கலாம் என்பது போன்ற பிரதானமான வினாக்கள் எம்முன் உண்டு. முதலாம் உலகம், இரண்டாம் உலகம், மூன்றாம் உலகம்என்ற வகைப்பாட்டைக் கொண்ட வார்த்தைகளை பழைய அர்த்தத்திற் பயன்படுத்த முடியாது.

மேலைத்தேச சிந்தனையாளர்கள் பொதுவாக வளர்ச்சியடைந்துள்ள தமது தேவையின் நோக்கு நிலையிலிருந்து புதிய சிந்தனையைத் தேடுவார்கள். அது அவர்களுக்கே அதிகம் சேவை செய்யக் கூடியதாய் இருக்கும். சில வேளைகளில் வளர்ச்சி குன்றிய பலவீன

(10ஆம் பக்கம் பார்க்க)

## 31-ம் நாள் நினைவுதினம்



அமரர்

### சுப்பையா சிவஞானசுந்தரம்

(முன்னைநாள் தமிழீழ ஆய்வு நிறுவன வடமராட்சிப் பிரிவின் வதிரிப்பிரதேச இணைப்பாளர்:(

தோற்றம் 12-4-1937 — மறைவு 20-1-1992

ஓய்ந்ததில்லை ஒருநாளும்
நுட்பத் திறத்தினனாய்
வீதியினைச் சரிசெய்தனன் - வதிரி
ஆய்வுநிலை நிறுவனமாய்
ஈழமண் புலத்தின்
விதியைச் சரிசெய்தனன்

வேளைவந்து போவதென்றால்
வேதனைகள் பெரிதில்லை
வெம்புதல் ஞாயமில்லை - தொண்டு
வேலைசெய்த வேளையிலே
விரைந்துவிட்ட சோகத்தால்
விழியோரங்கள் காயவில்லை

சிவ நினைவிற் திகழ்ந்த
ஞான மைந்தன் - தைப்பூசத்தில்
சுந்தரத்து ஒளியிலே சோதியானான்
அவனருளின் ஆட்சியிலே
அனைத்தும் அவனே
அடைவோம் சாந்தி சாந்தி!

-குடும்பத்தினர்.

வதிரி,
கரவெட்டி.
19-02-92 (2217)

# இரண்டாவது ஆண்டு நிறைவு

ஈழநாதம்

# 200க்கு மேற்பட்ட தமிழர்களை வவுனியாவில் காணவில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தற்போதைய இராணுவ நடவடிக்கைகளினால் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் காணாமல் போயுள்ளனர் என்று அறியப்படுகிறது.

வவுனியா கிராமப் புறங்களிலிருந்து நகரப் பகுதி நோக்கிச் சென்றவர்களே அதிகமாகக் காணாமல் போயுள்ளனர்.

இராணுவத்தினரால் பொது மக்கள் மத்தியில் கைதுசெய்யப்பட்டவர்களைவிட இரகசியமான முறையில் இராணுவ உளவாளிகளினால் கடத்தப்பட்டவர்களே அதிகம் என்று கூறப்படுகிறது.

வவுனியாவைச் சேர்ந்தவர்களுடன், மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், காணாமல் போயுள்ளனர்.

குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள் முதியோர் என்று சகல தரப்பினரிலும் காணாமல்போனோர்தொகை உள்ளது.

90ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தின் பின்னர் காணாமல் போனவர்கள்பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புகார் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதற்கான பதில் அளிக்கப்படவில்லை. (தி)

## சுவர் வீழ்ந்து 47 பேர் பலி கும்பகோணத்தில் சம்பவம்

கும்பகோணத்தில் மகாமகம் திருவிழாவின்போது நேற்றுச் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் 30 பெண்களும், 3 குழந்தைகளும் உட்படக் குறைந்தது 47 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர்.

திருவிழாவைப் பார்ப்பதற்காகப் பழைய கட்டடத்தின் சுவரில் பலர் ஏறியதால் பாரம் தாங்காமல் சுவர் விழுந்தது. என்று பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் திருவிழாவின்போது புனித மகாமகம் கேணியில் நீராடுவதற்காக 25 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கும்பகோணத்தில் கூடியிருந்தார்கள்.

காஞ்சி காமகோடி மடத்தின் பீடாதிபதிகள் மற்றும் மடத்தின் பீடாதிபதிகள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகியோர் இக் கேணியில் நீராடினார்கள்.

## சிறிலங்காவின்

காகிதாதிகள், கல்வி உபகரணங்கள், அறிவசார் நூல்கள் சஞ்சிகைகள், ஆய்வுகூட உபகரணங்கள் ஆகியவற்றிக்குத் தடைவிதிக்கப்பட்ட போதிலும், பாடசாலைகள் கல்விக்கூடங்கள் இராணுவமுகாங்களாக்கப்பட்ட போதிலும், குண்டுகள் வீசி சேதமாக்கப்பட்டபோதிலும் தமிழ் மாணவர்களது கல்வியைச் சீர்குலைக்க சிறிலங்கா அரசினால் முடியவில்லை இதற்கு கடந்த கால பரீட்சைப் பெறுபேறுகள் பதில்கூறுகின்றன.

மின்சாரம் இன்மையால் விவசாயம், கைத்தொழில் போன்றவை பெருளவு பாதிக்கப்பட்ட போதிலும் சூழலுக்கேற்ப கைவசம் உள்ள சக்தி வளங்களைக் கொண்டும் பாரம்பரிய முறைகளைக் கொண்டும் மேற்படி துறைகள் வளர்ச்சியடைந்து வருகின்றது

இவ்வாறு சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை ஆரம்பத்தில் தமிழ் மக்களை எந்தெந்தத் துறைகளில் நெருக்கடிக்குள்ளாக்கியதோ அவ்வாறான துறைகளிலெல்லாம் நெருக்கடிகளை உடைத்தெறியும் வகையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு உருவாகிவரும் மாற்றங்கள் தமிழீழத்தின் சுய பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதில் கணிசமான பங்கு வகிக்கும் என்பது நிச்சயம். சுய பொருளாதாரம் வளர்ச்சியடைந்த நிலையில் சிறிலங்காவின் பொருளாதாரத்தடை அர்த்தமற்றதாகி விடும். பொருளாதாரத் தடையை விதிப்பதன் மூலம் தமிழ் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கவோ அல்லது பயமுறுத்தவோ முடியாதநிலை உருவாகும்.

எவ்வகையான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் தமது சுய பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க முடிந்திருக்கிறது. இந்த வளர்ச்சிக் கட்டமாகவே வடபகுதியின் சில உற்பத்திகள் சிறிலங்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. கடல் உணவு, வெங்காயம், புகையிலை, சுருட்டுப் போன்ற உற்பத்திப் பொருள்கள் சிறிலங்காவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறான ஏற்றுமதி வர்த்தகம் தமிழீழம் அமைக்கப்பட்ட பின்னர் அயல்நாடு என்ற வகையில் சிறிலங்காவுடன் மேற்கொள்ளும் இருதரப்பு வர்த்தக உறவுகளுக்கு வழி வகுக்கும்.

இவ்வாறு மிகக் குறுகிய காலப்பகுதிக்குள்ளாகவே தமிழீழத்தின் சுயபொருளாதாரத்திற்கு வழிவகுக்கும் அளவுக்கு இத்துறையில் வளர்ச்சிகாணப்பட்டிருக்கிறது

பொருளாதாரத் தடை நடவடிக்கைகளால் உயிர்காக்கும் மருந்து வகைகள், நோய்த் தடுப்பு மருந்து வகைகள் உட்பட அனைத்து மருத்துவ உபகரணங்களுக்கும் தடை விதிக்கப்பட்டது. இதனால் மருத்துவ சேவை சீர்குலைந்தது. சீரற்ற மருத்துவ சேவையை நிவர்த்தி செய்வதற்குச் சுதேச மருத்துவத்துறைக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. இதன் மூலம் மருத்துவ சேவை ஓரளவுக்குச் சீராக்கப்பட்டது.

இவ்வாறு சூழலுக்கேற்பவும், நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் வகையிலும் வாழப்பழகிய மக்கள் மத்தியில் மொத்தத்தில் சில சமூக மாற்றங்களும் உருவாகியது. இதனால் மக்கள் அனைவரும் சுறுசுறுப்புடன் தமது கடமைகளைச் செய்வதற்கும், அதிக நேரம் வேலை செய்வதற்கும் பழக்கப்பட்டுவிட்டனர்.

ஒட்டுமொத்த விளைவாகத் தமிழ் மக்கள் எவ்வாறான இராணுவ, பொருளாதார நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்கப் பழக்கப்பட்டு விட்டனர். இவர்கள் மத்தியில் சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளும் நெருக்கடிகளும் செயல் இழந்து வருகின்றது என்பது மட்டும் நிச்சயம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவயோகம் இராசரெத்தினம்

வேலணை மேற்கு புளியங்கூடலைச் சேர்ந்த திருமதி சிவயோகம் இராசரெத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற இராசரெத்தினத்தின் அன்பு மனைவியாரும், சுருவிலைச் சேர்ந்த காலம்சென்ற சு. துரையப்பா, புளியங்கூடலைச்சேர்ந்த காலம்சென்ற சு.குமாரசாமி(கொறியா), வேலணை மேற்கைச்சேர்ந்த சு. திருஞானம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், சரஸ்வதி, அன்னலட்சுமி(வவுனியா), அழகேஸ்வரி, பரமேஸ்வரி (ஆசிரியை, நடராசா வித்தியாசாலை), பூபாலசிங்கம் [பூபால் இன்டஸ்றீஸ், வவுனியா], தனபாலசிங்கம், தர்மலெட்சுமி, இராசேஸ்வரி வடிவாம்பிகை, கமலாம்பிகை, கங்கைவேணியன் (GNA ரான்ஸ்போட்), சந்திரவதனி, சரஸ்வதி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின்பூதவுடல் 19-02-92 புதன்கிழமை இன்று மு.ப 10 மணிக்கு இல 14, ஐயனார் கோவில் வீதி, தட்டாதெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கு. கங்கைவேணியன்
(GNA Transport)

இல. 14, ஐயனார்கோவில் வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

[2218]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது




## இல. திரும்பிய அகதிகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

(மட்டக்களப்பு)

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பி மட்டக்களப்பில் வந்து மீளக் குடியமர்ந்த அகதிகள் தங்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் உணவுக்குப் பெரும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய இவர்கள் கல்லடியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்

கப்பல் மூலம் திருக்கோணமலையில் இறங்கியதும் சிறிதளவு பணம் வழங்கப்பட்டதாகவும் பின்னர் தாம் கைவிடப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மட்டக்களப்புக் கச்சேரியில் முறையிட்டும் எதுவித பணமோ, நிவாரணமோவழங்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## யாழ் முதல் ஆயர் குலேந்திரன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

தென்இந்திய திருச்சபையில் யாழ். மறை மாவட்ட முதலாவது ஆயரான வண.டாக்டர் சபாபதி குலேந்திரன் கடந்த வெள்ளிக் கிழமை மானிப்பாயில் காலமானார். அவருக்கு வயது 91.

சமய நூல்களை எழுதியிருக்கும் தமிழ் அறிஞரான இவர், 1947முதல் 1971வரை ஆயராக இருந்தார். ஆயரின் மரணச்சடங்குகள் வட்டுக்கோட்டை தேவாலய திருச்சபையில் கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

## கிழக்குப் பட்டினங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 2 பொலிஸ் அத்தியட்சகர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான பட்டினங்களான வாழைச்சேனை, ஏறாவூர், கலுவாஞ்சிக்குடி ஆகிய பிரிவுகளுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மாநாடு கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. அப்போதே இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லாமாக ஐந்து பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளனர் என்றும், இவர்களில் இருவர் மட்டக்களப்பு அலுவலகத்தில் தங்கியிருந்து கடமையாற்றுவார் என்றும், ஏனைய மூவரும் வாழைச்சேனை, கலுவாஞ்சிக்குடி, ஏறாவூர் பொலிஸ் நிலையங்களில் தங்கிருந்து கடமையில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கிற்கான

உள்ள அகதி முகாம்களுக்கும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 1600ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இதில் 60 கிலோ அரிசி, 9கிலோ பருப்பு, சீனி தேங்காயெண்ணை என்பன அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு-கிழக்கில் சகஜநிலை திரும்பிய பின்னரே இந்த உதவிகள் அப்பகுதிக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தினசரிக்கு மங்களவாழ்த்துக்கள்!

பாலர் வகுப்பு முதல்
பட்டதாரி வகுப்பு வரையிலான
சகல விதமான புத்தகங்களும்
பாடசாலை உபகரணங்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்

(சி, 3946)

# இரண்டாவது ஆண்டு நிறைவு